
தமிழரசு
மார்ச் 16-31, 1998 ரூ.3



# இந்த இதழில்....


- சட்டப்பேரவைக் கூட்டத் தொடரைத் துவக்கிவைத்து மேதகு ஆளுநர் உரை ....... 2
- 1998 - 1999 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை; சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் உரை ....... 9
- அவளுடைய கேள்வி (சிறுகதை) - தோப்பில் முகமது மீரான் ....... 33
- சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய குடியிருப்பு வளாகம் ....... 40
- இந்திய தரிசனம் - ஜெயகாந்தன் ....... 47



தமிழரசு


திருவள்ளுவராண்டு - 2029

பங்குனி

மார்ச் 16 - 31, 1998

மலர் : 28 இதழ் : 18

விலை ரூ.3



# "பொது விநியோகத் திட்டம் சீரமைக்கப்பட்டு இரண்டு நிறங்களில் குடும்ப அட்டை வழங்கிடும் புதியமுறை விரைவில் செயல்படுத்தப்படும்!"

## சட்டமன்றக் கூட்டத் தொடரைத் துவக்கி வைத்து மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரை

மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே!

இம்மாநிலத்தின் ஆளுநராகப் பொறுப்பேற்ற பின்னர், உங்கள் அனைவரையும் இந்தப் பதினோராவது சட்டப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் முதன்முறையாகச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்வாண்டில் நம் மாநிலத்தின் பொருளாதாரம் மேலும் வளர்ச்சியடைந்து தமிழ்நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் வளம்சேர்க்கும் ஆண்டாக அமையும் என நான் நம்புகிறேன்.

2. தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த விஞ்ஞானி டாக்டர் அப்துல்கலாம் அவர்களுக்கும், இசைமேதை டாக்டர் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், மத்திய, மாநில அமைச்சர் பொறுப்புகளிலிருந்தவரும், மராட்டிய மாநில முன்னாள் ஆளுநரும், அரசியல் மேதையுமான திரு. சி.சுப்பிரமணியம் அவர்களுக்கும்

நாட்டின் மிக உயர்ந்த விருதான "பாரத ரத்னா" விருது வழங்கப்பட்டுள்ளது நமக்குப் பெருமிதம் அளிக்கிறது. தமிழகத்திற்குப் புகழ் சேர்த்துள்ள இவர்களுக்கு உங்களனைவர் சார்பிலும் என் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அண்மையில் நடந்த தேர்தல்களில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளின் முடிவுகள் அரசின் நற்பணிகளைத்தொடர ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில் தமிழக மக்கள் நிலையான ஆட்சி அமையும் என்ற எதிர்பார்ப்புடன் வாக்களித்துள்ளனர். பொதுவாக மத்திய மாநில உறவுகள் சுமுகமாக அமைந்திட இந்த அரசு முழு ஒத்துழைப்பைத் தரும்.

4. இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு, மதச்சார்பின்மை ஆகியவற்றைத் பேணிக்காப்பதுடன், மாநிலங்கள் மேலும் அதிகாரங்கள் பெற்று சுயாட்சித் தன்மையுடன் விளங்கவும், மத்தியில் கூட்டாட்சித் தத்துவம் நிலைபெறவும், மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தும் மத்திய ஆட்சிமொழிகளாகவும், அதற்கு முதற்கட்டமாகத்தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி அளிக்கப்படவும் பலகாலமாக வலியுறுத்தி வருகிற இந்த அரசு இவற்றுக்காகத்தொடர்ந்து பாடுபடும்.

5. கோவையில் நடந்த மதக் கலவரம், குண்டு வெடிப்பு ஆகியவை மத நல்லிணக்கத்திலும், மனித நேயத்திலும் அக்கறையுள்ள அனைவருக்கும் ஆழ்ந்த வேதனை அளிப்பதாகும். 1997 நவம்பர் 29 ஆம் தேதி தொடங்கி ஒருவாரகாலம் நடந்த கலவரங்களில், உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகையாக முதற்கட்டமாக ரூ.28 இலட்சம் வழங்கப்பட்டது. இக்கலவரங்களுக்கு வழிவகுத்த சூழ்நிலைகள், காரணங்கள் குறித்து விசாரணை செய்யவும், இத்தகைய நிகழ்ச்சிகள் இனி எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்கவும், பொதுமக்களுக்கும் தனியார் சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கவும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகள் செய்ய, குஜராத் உயர்நீதி மன்றத்தின் ஒய்வு பெற்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. 14.02.1998 அன்று கோயம்புத்தூரில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் 1997 நவம்பர் மாதத்தில் நடந்த கலவரங்களுக்கும் தொடர்பு இருக்கக்கூடும் என்று கருதப்படுவதால் இவை குறித்தும் விசாரணை செய்ய அரசு, நீதிபதி திரு.பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களின்

**கோவை வெடிகுண்டு சம்பவத்தையடுத்து, வெடிபொருட்களின் விற்பனையில் தீவிரக் கட்டுப்பாட்டைச் சட்ட ரீதியாகச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.**

விசாரணைக் குழுவையே நியமித்துள்ளது. விசாரணைக் குழுவின் முன் அனுமதியுடன் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த குடும்பங்களுக்கும் நவம்பரில் நடைபெற்ற கலவரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் உயர்த்தப்பட்ட வீதத்தில் நபர் ஒருவருக்கு ரூ.2 இலட்சம் என்ற அளவில் இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவின் பரிந்துரையை எதிர்நோக்கி, இரு நிகழ்வுகளிலும் சொத்துக்களுக்கு இழப்பு மற்றும் சேதம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க அரசு ரூ.5 கோடி அனுமதித்துள்ளது. தேவையெனில் இத்தொகையை அரசு அதிகப்படுத்தி வழங்கும்.

6. கோயம்புத்தூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளும், அங்கும், மாநிலத்தின் பிற பகுதிகளிலும் ஜெலட்டின் குச்சிகள், மற்ற வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்ட நிகழ்வுகளும், கிணறு வெட்டுதல் போன்ற உண்மையான தேவைகளுக்கான வெடி பொருட்கள் தீவிரவாத இயக்கங்களுக்குத் திசை திருப்பி அனுப்பப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. இதனைத் தடுப்பதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது. எனவே மாநிலத்தில் வெடி பொருட்கள் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை செய்யப்படும் எல்லா இடங்களிலும் தீவிரக் கட்டுப்பாட்டை சட்ட ரீதியாகச் செயல்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது.

7. பொருளாதார முன்னேற்றத்திற்கான வளர்ச்சித் திட்டங்களுக்கு, அமைதியும் நல்லிணக்கமும் இன்றியமையாத அடிப்படையாகும் என்பதை நன்குணர்ந்த இவ்வரசு, மாநிலத்தில் சட்டம் – ஒழுங்கு நிலைமையைப் பராமரிப்பதற்கு உயர் முன்னுரிமை அளித்துள்ளது. தென்மாவட்டங்களில் பல்லாண்டுகளாக அவ்வப்பொழுது நிகழ்ந்துவரும் வகுப்புக் கலவரங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அத்தகைய கலவரங்கள் தொடராமல் தடுக்க, உரிய நடவடிக்கைகளை எடுப்பது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகள் அளிக்க, உச்சநீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு.எஸ். மோகன் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை இவ்வரசு அமைத்தது. இக்குழு, 1998 சனவரியில் அரசுக்கு அதன் அறிக்கையை வழங்கியது. அந்த அறிக்கையில் அனைத்து மாவட்டங்களிலும், பல்வேறு நிலைகளில் அமைதிக் குழுக்களை அமைத்தல், சட்டம்–ஒழுங்கு நிருவாகம் எச்சரிக்கையுடனும் தவறு நேராமல் விழிப்புடனும் செயல்படச் செய்தல் போன்ற பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை, மாநில அரசின் நடவடிக்கைக்காகத் தீவிர பரிசிலனையில் உள்ளன.

8. பல ஆண்டுகளாக நடந்துவரும் சந்தன மரக்கடத்தலைத் தடுப்பதற்கு இவ்வரசு உரிய முயற்சிகள் எடுத்துள்ளது. இதன் விளைவாக இவ்வரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து டிசம்பர் 1997 முடிய ரூ.34.80 கோடி மதிப்புள்ள கடத்தல் சந்தன மரங்கள் பறிமுதல்செய்யப்பட்டன.மேலும் 33 சந்தனமரக் கடத்தல்காரர்கள் குண்டர்கள் சட்டத்தின் கீழ்

சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சந்தன மரக் கடத்தலைத் தடுக்க இவ்வரசு இன்னும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளும். அண்மையில் வழங்கப்பட்ட சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பின்படி ஓர் சிறப்புப் பணிக் குழு விரைவில் அமைக்கப்படும்.

9. திட்டப்பணிகளை ஆக்கபூர்வமாகவும் செம்மையாகவும் நிறைவேற்றி, எல்லா இலக்குகளையும் எய்திவருகிறது என்ற பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.10,200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கையில், ரூ.10,563 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, மத்தியத் திட்டக்குழு, தமிழ்நாட்டுக்கான ஒதுக்கீட்டளவை ரூ.25,000 கோடியாக உயர்த்தி ஒப்புதல் அளித்துள்ளது. எட்டாவது திட்டக் காலத்தில் ஆண்டு வளர்ச்சி வீதம் 5.96 சதவீதமாக இருந்தது. ஒன்பதாவது திட்டக் காலத்தில், இவ்வளர்ச்சி வீதத்தை 7 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

10. இந்த ஆண்டில் இம்மாநிலம் முழுவதிலும் அளவுக்கு அதிகமான மழை பெய்துள்ளது. இப் பெருமழையினால் பல்வேறு மாவட்டங்களில், குறிப்பாக, கடலோர மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகியவை கடுமையான பாதிப்புக்கு உள்ளாயின. மழை மற்றும் இடி, மின்னலால் ஏற்பட்ட மனித உயிர் இழப்பு, கால்நடை உயிர் இழப்பு, குடிசைகள், பயிர்கள் சேதம்

**★ பெட்ரோல், டீசல் விற்பனை போல, மண்ணெண்ணெய் விநியோக நிலையங்கள் நகர்ப்புறப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படும்.**

**★ மத்திய - மாநில உறவுகள் சுமூகமாக அமைந்திட அரசு முழு ஒத்துழைப்புத் தரும்.**

ஆகியவற்றுக்கு இடருதவி அளிக்கும் வகையில், அரசு ரூ.58 கோடியே 95 இலட்சம் செலவழித்துள்ளது.

11. இரண்டாவது பசுமைப்புரட்சியை உருவாக்க தொடர்ந்து முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், பொருளாதாரத்தில் சீரான நிலை, ஊரக வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றை எய்துவதே இவ்வரசின் நோக்கமாகும். சென்ற ஆண்டில் காவிரிப் பாசன வாய்க்கால்களிலும் பல மாவட்டங்களில் உள்ள கண்மாய்களிலும் தூர்வார எடுத்த முயற்சி விவசாயிகளுக்கு நல்ல பயனை அளித்துள்ளது. இத்திட்டம் வரும் ஆண்டிலும் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, பாசன ஆதாரங்களின் முழுப்பயனும் கிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நல்ல பருவமழை பெய்ததையடுத்து, இவ்வாண்டு நம்மாநிலம் நல்ல விளைச்சலைக் கண்டுள்ளது.

இணைக் கொள்முதல் செய்யப்படும் காலகட்டத்திலும் கூட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இவ்வரசு, மைய அரசு நெல்லுக்கு நிர்ணயித்த குறைந்த அளவு ஆதரவு விலைக்கும் மேலாக வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35/– அனுமதித்தது. உற்பத்திப் பெருக்கம் காரணமாக விவசாயிகள் விளைபொருளை விற்பனை செய்வதில் பாதிப்புக்கு ஆளாகாமலிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, அரசு 926 நேரடிக் கொள்முதல் மையங்களைத் திறந்துள்ளது. முதல்முறையாகக்காவிரி பாசனப் பகுதிகளுக்கு வெளியேயுள்ள மாவட்டங்களிலும் இம்மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் இதுவரை செய்திராத அளவு 17 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

12. இந்த அரசின் ஒளிவு மறைவற்றதும், தொழில் முனைவோரிடையே நேயப் பண்புடையதுமான கொள்கைகள் பலன்தரத் துவங்கியுள்ளன. வெளிநாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வரும் தொழில் முனைவோர் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விரும்பி வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளனைத்தையும் தாமதமின்றிச் செய்ய அரசு இயந்திரம் முடுக்கிவிடப் பட்டுள்ளது. இதன் விளைவாக,கடந்த 22 மாதங்களில் தமிழகத்தில் வெளிநாட்டு மூலதனம் ஊக்குவிக்கும் வாரியத்தின் (Foreign Investment Promotion Board) ஒப்புதல் பெற்ற வெளிநாட்டு நேரடி மூலதனம் ரூ.4040 கோடி ஆகும். மேலும் தொழில் உரிமம் பெறத் தேவையில்லாத 655 தொழில்கள் ரூ.9639 கோடி மதிப்பீட்டில் தொடங்கப் பதிவு செய்யப்பட்டுள்ளன. உரிமம் தேவையுள்ள 141 தொழில் திட்டங்கள் ரூ.1897 கோடி மதிப்பீட்டில் தொடங்க உரிமம் பெற்றுள்ளன. சுருங்கக் கூறின், மிகக் குறைந்த கால அளவான 22 மாதங்களில் ரூ.15,576 கோடி அளவிலான தொழில் முதலீடுகள் இம்மாநிலத்தில் செய்யப்படவுள்ளன என்பது தமிழகத்தின் வரலாற்றிலேயே மிகவும் அதிகமான ஒன்றாகும். நடப்பாண்டில் டூபாண்ட் நிறுவனத்தின் நைலான் தொழிற்சாலை, சென்னை ஏற்றுமதி வளாகத்தில் அமைந்துள்ள உலோக ஹேலைட் விளக்குத் தொழிற்சாலை, கரூர் அருகில் அமைந்துள்ள கரூர் யார்ன் லிங்க்ஸ் தொழிற்சாலை, தர்மபுரி மாவட்டத்தில் சொக்கரசன்னபள்ளியில் அமைந்துள்ள டாரஸ் நாவல்டீஸின் டாலமைட் தொழிற்சாலை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் செட்டிபுண்ணியம் கிராமத்தில் அமைந்துள்ள பாரத் உடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள மயிலேரிப்பாளையத்தில் அமைந்துள்ள S.G. இரும்பு வார்ப்புத் தொழிற்சாலை ஆகியவை உற்பத்தியைத் துவக்கியுள்ளன. ஹூண்டாய் நிறுவனத்தின் மோட்டார் வாகனத் தொழிற்சாலையில் 1998 அக்டோபர் மாதத்தில் உற்பத்தி துவங்கும்.

13. தொழில் வளர்ச்சிக்கான சிறந்த அடிப்படைக்கட்டமைப்பு வசதிகள் மட்டுமே, வெளி நாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் தொழில் முனைவோரை நம்மாநிலத்திற்கு ஈர்க்கும் என்பதை அரசு உணர்ந்துள்ளது. தொழில் வளர்ச்சி

மையங்களையும், தொழில் பூங்காக்களையும், துணை நகரங்களையும் மாநிலத்தின் பல பகுதிகளில் அரசு உருவாக்கும். மின்சாரம், சாலைகள், தண்ணீர் வசதி, துறைமுகங்கள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அரசு முனைப்புடன் செயல்படும். இதற்குப் பெருமளவில் முதலீடுகள் தேவைப்படுமாதலால், இதுவரை அரசினால் மட்டும் செயல்படுத்தப்பட்ட மின்சக்தி, நெடுஞ்சாலைகள் போன்ற துறைகளில் தனியார் முதலீட்டை ஈர்க்க, அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

*14.* இம்மாநிலப்பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் தமிழகத்தின் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் மாநிலத்தின் உற்பத்தியை அதிகரிக்கவும், பெருமளவில் வெளிநாட்டு முதலீட்டைத்தமிழகத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கும் தொழில்களுக்கும் ஈர்க்கவும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவும், ஆலோசனைகள் வழங்க ஹார்வர்டு பன்னாட்டு வளர்ச்சிக் கழகத்துடன் அரசு ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழகப் பொருளாதாரத்தின் மீதான இவ்வாராய்ச்சிப் பணி துவங்கியுள்ளது.

**ஆதிதிராவிடர்களுக்கு**
**வேலை வாய்ப்பை உருவாக்கக்**
**கணினி, பிளாஸ்டிக் தொழில் பற்றி**
**பயிற்சி தரப்படும்.**

*15.* தனியார் துறையினால் இயக்கப்பட இருக்கும் முதலாவது மின் திட்டம் வரும் ஆண்டில் 196 மெகாவாட் திறனுடன் சென்னையில் செயல்படத் துவங்கும். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் மின் உற்பத்தி செய்வதற்காக, அடிப்படை வசதிகள் குத்தகை மற்றும் நிதி நிறுவனத்தோடு (Infrastructure Leasing and Financial Services Limited) சேர்ந்து கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த, இந்த அரசு கொள்கையளவில் அனுமதி அளித்துள்ளது. எண்ணூரில் 1000 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றையும், தூத்துக்குடியில் 500 மெகாவாட் திறன் கொண்ட, அனல் மின் நிலையம் ஒன்றையும் நிறுவ — தமிழ்நாடு மின்வாரியம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

*16.* சாலை மேம்பாட்டுப் பணிக்கு இவ்வரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. சென்ற இரண்டாண்டுகளில் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் "நபார்டு" (National Bank for Agriculture and Rural Development) வங்கியின் நிதியுதவியுடன், ரூ.450 கோடி மதிப்புள்ள சாலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீட்டுவசதி–

நகர்ப்பகுதி மேம்பாட்டுக்கழக (Housing and Urban Development Corporation) நிதியுதவியுடனும், உலக வங்கியின் நிதியுதவியுடனும் மொத்தம் ரூ.1416 கோடி செலவில் சாலைகளும் பாலங்களும் மேம்படுத்தப்படும்.

17. இவ்வரசால் நிறுவப்பட்ட மாநிலக் கடலாண்மை வாரியம்.(Maritime Board) சிறு துறைமுகங்களின் மேம்பாட்டுப் பணியிலும் அவற்றை முறைப்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகிறது. கடலூர், செய்யூர் மற்றும் குளச்சல் துறைமுகங்களின் மேம்பாட்டை இவ்வரசு தனியார் துறையின் பங்கேற்புடன் செயல்படுத்த உள்ளது. வணிகக் கப்பல்களுக்குத் தேவையான பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் இம்மாநிலத்திலுள்ள இளைஞர்களுக்கு இத்தொழிலில் வேலை வாய்ப்பினை உருவாக்கவும் ஒரு கடலாண்மைப் பயிற்சிக் கழகத்தை (Maritime Academy) அமைக்கஅரசு முடிவெடுத்துள்ளது.

18. வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இந்த அரசு 1996-ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் முதல் தடவையாக பெண்களுக்கு 33 1/3 சதவீதம் இடம் ஒதுக்கீடு செய்து தேர்தல்களை நடத்தியது. மேலும் 1997-ல் நகர்ப்பகுதி மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்கள் அனைத்திற்கும் கணிசமான நிதிப்பகிர்வை அளித்தது. மேலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் அதிகாரங்களை அளிப்பதற்கு உள்ளாட்சித்துறை அமைச்சரை அமைப்பாளராகவும் சட்டமன்றத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு தக்க முடிவுகள் எடுக்கும். சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் உறுதி அளிக்கப்பட்டிருந்தபடி, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் குறித்த பொதுவான சட்ட முன்வடிவு ஒன்று சென்ற வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இச்சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இச்சட்ட முன்வடிவு, தற்போது ஆய்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. நகர்ப்பகுதிகளில் அடிப்படைப் பணிகளைத் திறமையுடனும் செம்மையாகவும் நிறைவேற்ற இச்சட்டம் உதவும்.

19. 'நமக்கு நாமே' மற்றும் 'அண்ணா மறுமலர்ச்சித்' திட்டம் ஆகியவற்றின்கீழ் கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'நமக்கு நாமே' திட்டத்தில் 3658 பணிகள் ரூ. 24.61 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'அண்ணா மறுமலர்ச்சித்' திட்டத்தின் கீழ் ரூ.224 கோடி அளவில் 33282 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

20. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, நபர் ஒன்றுக்கு நாள்தோறும் 10 லிட்டருக்குக்குறைவான குடிநீர் பெறுகின்ற 10,000 ஊரகக் குடியிருப்புகளில், நடப்பாண்டில் 4,500 ஊரகக் குடியிருப்புகளில் நபர் ஒன்றுக்கு நாள்தோறும்

தொடர்ச்சி 41-ஆம் பக்கம்

# ரூ.18,048 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அளித்த தமிழ்நாடு அரசு நிதிநிலை அறிக்கை




'ஒளிமயமானதும், உண்மையானதும், ஊழலற்றதுமான ஓர் உறுதிமிக்க ஆட்சிக்குரிய சிறப்புமிகு திட்டங்களைச் சிந்தித்துப் படைப்பது மட்டுமன்றி, அவற்றைச் செயலாற்றிடும் பணியில் முழுமையான வெற்றி பெற, நாட்டில் உள்ள நல்ல உள்ளங்களின் துணையையும், தூய வாழ்த்துக்களையும் வேண்டியவாறு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது' - என்ற முத்தாய்ப்போடு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவையில் 27-3-98ல் அளித்த 1998-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்கள் மட்டும் ஒரு பானைச் சோற்றுக்குச் சில சோறு பதம் காணும் வகையில் இங்கே அளிக்கப்படுகிறது:

- உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட வருவாய் நிதி ரூ.663 கோடியை ரூ.839 கோடியாக உயர்த்தியும் மேலும் 10ஆம் நிதிக்குழு வழங்கிய ரூ.100 கோடியும் வழங்கப்படும்.
- இந்தியாவில் முதலாவதாகத் தொடங்கப்பட்ட 'தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி' யின் மூலம் நிதிநிறுவனக் கடனாக ரூ.800 கோடி பெறப்படும்.
- திருச்சி, கோவை, சேலம், மதுரை மற்றும் நெல்லை மாநகரங்களின் வளர்ச்சிக்குத் தலா ரூ.25 கோடியும், நகராட்சிகளுக்குத் தலா ரூ.10 கோடியும் பேரூராட்சிக்குத் தலா ரூ.10 கோடியும் வழங்கப்படும்.
- 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குச்' சிறப்பு நிதியாக ரூ.75 கோடியும் 'நமக்கு நாமே' - திட்டத்திற்கு ரூ.10 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.25 இலட்சத்திலிருந்து தொகுதிக்கு ரூ.30 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- போதிய அளவு குடிநீர் வசதியற்ற 5,398 குடியிருப்புகளுக்கு ரூ.330 கோடியில் குடிநீர் வசதியளிக்கப்படும்.
- 76.42 இலட்சம் டன்னாக இருக்கும் உணவு உற்பத்தி இவ்வாண்டு 94.92 இலட்சம் டன்னாக உயரும்.
- தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.82 கோடி; வேளாண் - மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.9.85 கோடி ஒதுக்கீடு.
- ரூ.83.49 கோடி செலவில் 216 கிராம இணைப்புச் சாலைப் பணிகள் நடைபெறுகின்றன. 301 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ.101.73 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- நியாய விலைக்கடைகளில், ஒவ்வொரு நாளும் சரக்கு இருப்பு எழுதப்படும்; எடைக் குறைவு - பொருட்கள் வழங்காமை குறித்து பொதுமக்கள் பதிவு செய்திடும் வகையில் ஒரு 'புகார்ப் புத்தகம்' வைக்கப்படும்.
- உலக வங்கியின் நிதிஉதவியில், பாசனத்திட்டங்களை நவீனப்படுத்தி நீர்ஆதாரங்களை நிலைப்படுத்தும் ரூ.1,140 கோடியிலான பெருந்திட்டத்தில் ரூ.80 கோடியில் 40 திட்டங்கள் நடைபெறுகின்றன; ரூ.359 கோடி மதிப்பீட்டில் 152 பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு வாரந்தோறும் முட்டை வழங்கப் படும்.
- சென்னைப் போக்குவரத்து மேம்பாட்டிற்கு ரூ.366 கோடி ஒதுக்கீடு.
- விதவைகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள், முதியோர் ஓய்வூதியம் ரூ.100லிருந்து ரூ.150 ஆக உயர்வு.

- ஐரோப்பியப் பொருளாதார அமைப்பின் நிதிஉதவியில் ரூ.115 கோடி மதிப்பீட்டில் நடைபெறும் ஏரிகள் சீரமைப்பு 2-ஆம் கட்டப்பணியில் 288 ஏரிகள் சீரமைக்கப் பட்டுள்ளன; வரும் ஆண்டில் ரூ.12.89 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற வுள்ளன.

- காவிரிப் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணி ரூ.10 கோடியில் நடைபெற்றுள்ளன; வரும் ஆண்டில் ரூ.20 கோடியில் பணிகள் மேற் கொள்ளப்படும்.

- ரூ.12.8 கோடியில் மீனவக்குடும்பங் களுக்கு 4000 இலவச இல்லங்கள் கட்டப்படுகின்றன. வரும் ஆண்டில் மேலும் 4000 இல்லங்கள் கட்ட ரூ.13.15 கோடி ஒதுக்கீடு.

- மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தில் 1.19 இலட்சம் மீனவர்கள் பயனடையும் வகையில் கடந்த ஆண்டைப் போல், வரும் ஆண்டிற்கும் ரூ.8.57 கோடி ஒதுக்கீடு.

- மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதங்கள் மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும். 1-1-96 முதல் அது அமல்படுத்தப்படும்.

- தமிழகத்தில் வரி செலுத்தப்பட்ட காகிதத்தில் இருந்து தயாரிக்கப்படும் நோட்டுப் புத்தகங்களுக்கு மாநிலங்கள் இடையேயான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.



- சமையலுக்குப் பயன்படும் கடலை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள் அனைத்திற்கும் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

- ரூ.2,650 கோடி செலவில் கடலூரில் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படும்.

- கணினி மென்பொருட்களுக்கு முழுவிற்பனை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

- சென்னையில் ரூ.100 கோடி செலவில் வணிக நிதிமையம் அமைக்கப்படும்.

- ரூ.605 கோடி மதிப்பீட்டில், லஸ் - வேளச்சேரி இடையே ஆகாய ரயில் செல்வதற்கான 2-வது கட்டப் பணி தொடங்கப்படும்.

- தொடக்கப் பள்ளியே இல்லாத கிராமங்களே இல்லாமல் செய்வோம்; 700 குக்கிராமங்களில் புதிதாகத் தொடக்கப்பள்ளிகள் அமைக்கப்படும். 5ஆம் வகுப்புவரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இலவசப் பாடப்புத்தகம் வழங்கப்படும்.

- தமிழ்த்தென்றல் திரு.வி.க., கல்கி, வேலூர் கூராகவன் ஜமதக்னி ஆகியோர் எழுதிய நூற்கள் நாட்டுடைமை ஆக்கப்படும்.

- வரும் நிதியாண்டில், தமிழ்நாடு மின்வாரியத்தின் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.903 கோடியாக உயர்த்தப்படும்.

- மக்கள் நல்வாழ்வுத்துறைக்கான ஒதுக்கீடு நடப்பு ஆண்டில் ரூ.877 கோடியிலிருந்து, வரும் ஆண்டில் ரூ.1,096 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.


- வரும் ஆண்டில் மேலும் 5 மாவட்டங்களில் இசைப்பள்ளிகள் துவக்கப்படும்.

மாண்புமிகு தமிழக நெடுஞ்சாலை மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சராகப் பசும்பொன் தா.கிருட்டினன் அவர்கள், ஆளுநர் மாளிகையில் பதவியேற்றுக் கொண்டார். மேதகு ஆளுநர் செல்வி மீ.பாத்திமா பீவி அவர்கள் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்நிகழ்ச்சியில் பங்கேற்றார் (26-3-1998).



# ★ "தமிழகமெங்கும் ஜூலை மாதத்திற்குள் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்"
# ★ பேருந்துக் கட்டணங்கள் குறைக்கப்படும்.

**- மேதகு ஆளுநர் அவர்கள் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துச் சட்டப் பேரவையில் 23.3.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:**



ஆளுநர் உரையின் மீது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், பல்வேறு கட்சித் தலைவர்களும் பேரவை உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துவைத்து, இறுதியாக அவர்கள் எடுத்துவைத்த கருத்துக்கள் எல்லாவற்றின் மீதும் என்னுடைய பதில்களைச் சொல்வதற்கு நேரம் இல்லாவிட்டாலும் கூட, அடுத்து, தொடர்ந்து வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் நடைபெறுகின்ற பொது விவாதம், தனித் தனித் தலைப்புகளிலே வருகின்ற மானியங்களின் விவாதங்கள் இவைகளில் அதற்கான விளக்கங்களை, விடைகளை அளிக்கமுடியும் என்ற நிலையில் குறிப்பிட்ட சில உறுப்பினர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி மாத்திரம் எடுத்துக்கூறி சில பொதுவான செய்திகளை இந்த மாமன்றத்திலே பரிமாறிக் கொள்ளலாம் என்ற அளவோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன்.

நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுற்று, அந்தத் தேர்தல் முடிவுகளைப் பற்றி மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கின்றார்.

"இது கவர்னருடைய உரையல்ல. கருணாநிதியினுடைய உரை" என்றுகூட விமர்சிக்கப்பட்டு வெளியிலே பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. இந்த அவையிலும் கூறப்பட்டிருக்கின்றது.

### ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்

ஒரு உண்மையை - இதுவரையிலே உணராமல் இருக்கின்ற யாராவது சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் உணர்ந்து கொள்வதற்காகச் சொல்கிறேன் - எந்த ஒரு ஆளுநர் உரையாக இருந்தாலும் அது அரசாங்கத்தினுடைய உரைதானே தவிர, முதலமைச்சர் அவர்களுடைய உரையைத்தான் ஆளுநர், அரசின் சார்பாக அவைக்கு வழங்குகிறார் என்பதுதான் உண்மையே தவிர, முழுக்க முழுக்க அரசுக்குச் சம்பந்தம் இல்லாத உரை என்று யாரும் கருதிவிடக்கூடாது.

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் இன்று ஆளுங்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய தோழமைக் கட்சிகள், அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி மற்றும் அதனுடைய கூட்டணிக் கட்சிகள் எதிர்பார்த்த அளவுக்குப் பெரும்பாலான இடங்களிலே வெற்றி பெறவில்லை என்ற உண்மை உலகத்திற்கே தெரிந்தது.

எனவே, அதைப்பற்றி நான் விளக்க விரும்பவில்லை. ஆனால், இத்தகைய முடிவுகளின்போது இதற்கு முன்பு இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி நடந்துகொண்டது என்பதையும், குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், வேறு சில கட்சிகளும் தற்போது இங்கே எப்படி நடந்துகொண்டன என்றும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

1980-ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலகட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திராகாந்தி அவர்களுடைய தலைமையிலான காங்கிரஸ் கட்சியும் தேர்தல் உடன்பாடு கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்ட போது, புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளில், 38 நாடாளுமன்றத் தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸ் அணி மகத்தான வெற்றியைப் பெற்றன. எம்.ஜி.ஆர். அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, அந்தக் கூட்டணிக்குக் கிடைத்த இடங்கள் இரண்டே இரண்டு இடங்கள்தான். அப்போது நான் எதிர்க்கட்சியிலே இருந்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தது.

### மரபுக்கு விரோதமான மனப்பான்மை

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்போது நடந்துகொண்டதைப்போல, நடக்கின்ற, நடக்க வேண்டும் என்கின்ற நினைவே எங்கள் யாருக்கும் அப்போது வரவில்லை. அன்றைக்கு எனக்கு நேராக, இந்த அவையிலே நாங்கள் அமர்ந்திருக்கும்போது, ஆளுநர் உரையாற்றிய நேரத்தில் கருப்புக்கொடி காட்டப்பட்டது. இந்த அரசு பதவி விலக வேண்டும் என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பதாகை கூட அதிமுக. சார்பில் இங்கே காட்டப்பட்டது. இதுபோன்ற மரபுகள் எம்.ஜி.ஆர்.

அவர்களுடைய தலைமையிலே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டு இடங்களைப் பெற்று, தோல்வியைத் தழுவிய நேரத்தில், இங்கே எந்தக் கட்சியாலும் கடைப்பிடிக்கப்படவில்லை.

அன்றைக்கு இந்த அவையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகமோ, இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களோ இந்த முறையைப் பின்பற்றுவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல; கஷ்டமான காரியம் அல்ல.

ஆனால், நாம் இந்த அவையிலே போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற அந்த மரபுக்கு விரோதமாக நடக்கின்ற மனப்பான்மை கிஞ்சிற்றும் ஏற்படாத காரணத்தால் அன்று அந்தக் காட்சியை இந்த அவை கண்டது. அது எவ்வளவு பெரிய தவறு என்பதைத் தாங்கள், தங்களுடைய பெருந்தன்மையான தீர்ப்பின் மூலமாக இந்த அவைக்கு விளக்கி நாட்டிற்கு உணர்த்தியிருக்கிறீர்கள், உறுப்பினர்களுக்கும் உணர்த்தி இருக்கிறீர்கள்.

தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியோ, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியோ கூட்டணி சேர்ந்து இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டுப் பெரும்பாலான இடங்களைப் பெறவில்லை என்பதற்கு, எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நண்பர் திருநாவுக்கரசு அவர்களும், மற்றும் பல உறுப்பினர்களும் தங்களுடைய விமர்சனங்களைச் சற்று வேகமாகவே செய்திருக்கிறார்கள்.

ஆனால், அதற்காக நான் வருத்தப்படவில்லை. சில நேரங்களிலே, அனுபவங்கள், அடுத்து நாம் எடுத்து வைக்க வேண்டிய அடிகளுக்கு உதவிடக்கூடும்; துணையாக இருக்கக்கூடும் என்ற அளவில் கடந்தகால அனுபவங்களை நாங்கள் இன்றைக்கு எங்களுக்குத் துணையாகக் கொள்கின்றோம்.

### முனைப்போடு பயணம் தொடர்வோம்

திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, "நீங்கள் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை விட்டுவிட்டீர்கள், எங்களை விட்டுவிட்டீர்கள், புதிய தமிழகம் கட்சியை விட்டுவிட்டீர்கள்" என்றெல்லாம் சொன்னார்.

நாங்கள் புதிய தமிழகத்தை என்றும் விடமாட்டோம். புதிய தமிழகமாகத், தமிழகத்தை ஆக்கவேண்டும் என்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் விரும்புகிறது. அதற்காகத்தான் தன்னுடைய பணியினை ஆற்றிக்கொண்டிருக்கிறது. நடந்து முடிந்ததற்குப் பிறகு, சில விஷயங்களை நாம் ஆராய்ந்து, யார் மீது குற்றம், எவர் மீது குற்றம் என்று ஒருவருக்கொருவர் குறை கூறிக் கொண்டிருப்பதைவிட, நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்கின்ற அந்த முனைப்போடு பயணத்தைத் தொடங்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

அந்த அடிப்படையிலேதான், நடைபெற்று முடிந்த தேர்தலில் ஏற்பட்ட முடிவை இருகூறாகப் பிரித்து, ஒரு முடிவு, தமிழகச் சட்டமன்றத்திற்காக நடைபெற்ற இடைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும் இந்தக் கூட்டணி வெற்றி பெற மக்கள் ஆதரவு வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி, நாடாளுமன்றத்திலே அளித்த வாக்கு, மத்தியிலே ஒரு நிலையான ஆட்சி அவர்களால் எதிர்பார்க்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது; என்பதையும் கவர்னருடைய உரை விளக்கியிருக்கின்றது.

### யாரும் ஏமாறாதீர்

இதனை எல்லோரும் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக்க கழக ஆட்சிக்கு எதிராக மக்கள் இருக்கிறார்கள் என்று எண்ணி யாரும் ஏமாறத் தயாராக வேண்டாம் என்று நான் அவர்களுக்கெல்லாம் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அவையில், பல பிரச்சினைகள், கொந்தளிப்பான பிரச்சினைகள், பரப்பரப்பான பிரச்சினைகள், இந்தப் பேச்சினால் என்ன விளைவு ஏற்படுமோ என்று நானே அஞ்சுகின்ற அளவிற்குப் பேசப்பட்ட பல பிரச்சினைகள் எல்லாம், பல்வேறு தலைவர்களாலும் உறுப்பினர்களாலும், இங்கே பேசப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குச் செல்வதற்கு முன்பு, நம்முடைய உறுப்பினர்கள் சிலர் தங்களுடைய தொகுதிகளைப் பற்றி எடுத்துச்சொன்ன அந்தச் செய்திகளுக்கு நான் முதலில் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகின்றேன்.

குறிப்பாக திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, அறந்தாங்கி சர்க்கரை ஆலை என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகின்றேன்; மத்தியிலே இருந்த ஐக்கிய முன்னணி அரசு, அதனுடைய தொழில்துறை அமைச்சர் முயற்சியால் நம்முடைய வேண்டுகோளுக்கு இணங்க, 21.3.97 அன்று ஈ.ஐ.டி பாரி நிறுவனத்திற்குச் தினசரி 2500 டன் கரும்பு அரவை செய்யும் திறன் உள்ள சர்க்கரை ஆலை ஒன்றை, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலே நிறுவ அனுமதி அளித்துள்ளது.

அந்த ஆலைக்குக் கரும்பு பயிரிட, கரும்புப் பகுதி ஒதுக்கீடு செய்யும் படி 25.6.97 அன்று ஈ.ஐ.டி. பாரி நிறுவனம், சர்க்கரைத் துறை ஆணையருக்கு விண்ணப்பித்துள்ளது. இந்த விண்ணப்பம் சம்பந்தமாக, அரசால் நியமிக்கப்பட்ட பகுதி ஒதுக்கீட்டுக் குழு, நிலப்பகுதிகளை ஒதுக்கீடு செய்கின்ற அந்தக்குழு பரிசீலித்தது; அரசுக்கு அதனுடைய பரிந்துரையை அனுப்பியுள்ளது. அதன் அடிப்படையில், அறந்தாங்கி ஆலைக்குப் பகுதி ஒதுக்கீடு ஆணை சர்க்கரைத் துறை ஆணையரால் 5.2.98 மற்றும் 17.2.98 அன்று வழங்கப்பட்டுள்ளது.

**"கடந்தகால அனுபவங்களை நாங்கள் இன்றைக்குத் துணையாகக் கொள்கிறோம்".**

ஈ.ஐ.டி. பாரி நிறுவனம், அறந்தாங்கி வட்டத்திலே உள்ள குரும்பூர் என்ற கிராமத்தில் இந்த ஆலை அமைக்க ஏதுவாகத் தேவைப்படும் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவித்துள்ளது. மேலும் இந்த ஆலை நிறுவுவதற்கு நிதி நிறுவனங்களிடமிருந்து தேவைப்படும் கடனைப் பெறவும், இந்த நிறுவனம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. ஆலை நிறுவுவதற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்ட பின் ஆலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தருவித்து ஆலையை நிர்மாணம் செய்து முடித்து, இந்த ஆலை 1999 -ஆம் ஆண்டு இறுதியில் இயங்கத் தொடங்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தொடக்கத்திலே உரையாற்றிய நம்முடைய சுப்பராயன் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழகத்திலே 8 விழுக்காடு மாத்திரமே நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவது மிகக் குறைவானது என்றும், வேறு சில மாநிலங்களைச் சுட்டிக்காட்டி அங்கெல்லாம் 40 விழுக்காடு, 30 விழுக்காடு வழங்கப்படும்போது, இங்கே மாத்திரம் 8 விழுக்காடு என்ன நியாயம் என்றும் கேட்டார்கள்.

இந்த 8 விழுக்காடு என்பது 1997-98 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலே மொத்த வரி வருவாயிலே 8 விழுக்ககாடு என்பதாகும். அதன்படி உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வகையில் 662 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

இவை தவிர, கேளிக்கை வரியிலே 90 விழுக்காடு, 100.67 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. மேலும் முத்திரைத்தாள் மீதான மேல் வரி, நிலவரி வருவாயிலே தல வரி, தல மேல் வரி, பண்ணைக் காடுகள் வளர்ச்சி வருவாயிலிருந்து ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யும் தொகை, 10-வது நிதிநிலைக் குழுவின் பரிந்துரைகளின்படி உள்ளாட்சிமன்றங்களுக்கான மானியங்கள், குடிநீர் வழங்குவதற்கான கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற மானியம், பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான மானியங்கள், குறைந்த அளவு தேவைத் திட்டத்தின் கீழ் மானியங்கள் போன்ற பல்வேறு மானியங்களின் கணக்கில் 539.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## உள்ளாட்சிகளுக்கு ரூ. 1,301.91 கோடி

இவ்வாறாக 1997 - 98ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 1301.91 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இது 9 அல்லது 10 சதவீதம்தான் இருக்கும். ஆனால், கர்நாடகத்திலே 36 விழுக்காடு இருக்கிறதே என்று சுப்பராயன் அவர்கள் வினவக்கூடும். அதற்கான விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே நம்முடைய மாநிலத்தில் எல்லாப் பொறுப்புகளையும் அரசு ஏற்றுக்கொண்டு, சில பொறுப்புக்களைத்தான் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தந்து, அந்தப் பொறுப்புகளுக்கான தொகை ஒதுக்கும்போது 8 சதவீதம் அல்லது 9 சதவீதம் அல்லது 10 சதவீதம் என்கின்ற அளவிற்குத்தான் அது போய் நிற்கின்றது. உதாரணமாக, கர்நாடக மாநிலத்தில் 10ஆம் வகுப்புவரையிலே உள்ள ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான சம்பளம், அவர்களைப் பற்றிய பொறுப்பு அத்தனையும் மாவட்ட பஞ்சாயத்துக்கள் மூலம்தான் நிர்வகிக்கப்படுகிறது. இங்கே ஆசிரியர்களைப் பஞ்சாயத்திலே ஒப்படைத்தால், நாளைக்கே போர்க்கொடி தூக்குவார்கள். அந்தப் போர்க்கொடிக்கு அடுத்த கொடியாக சுப்பராயனுடைய கொடி நிற்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே அனுபவப்பட்டு இருக்கின்றோம்.

எம்ஜி.ஆர் காலத்திலும் சரி, அதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் சரி; ஆசிரியர்களுடைய ஒரு பெரும் கோரிக்கையே, எங்களை ஒன்றியத்திலோ அல்லது உள்ளாட்சி மன்றங்களிலோ ஒப்படைத்து விடாதீர்கள் என்பதுதான். எனவே, அவர்களை எல்லாம் ஒன்றியத்திலே, உள்ளாட்சி மன்றங்களிலே ஒப்படைத்தால், இன்னும்கூட அதிக சதவீதத்தை நிதி ஒதுக்கீடு நாம் அவர்களுக்குச் செய்யமுடியும். அது மாத்திரமல்ல; மருத்துவ மனையிலே கூட, 50 படுக்கைகள் குறைவாக உள்ள எல்லா மருத்துவச் செலவினத்தையும் அங்கெல்லாம் - கர்நாடகா போன்ற மாநிலங்களில், மாவட்டப் பஞ்சாயத்துக்களே ஏற்றுக்கொண்டு உள்ளன.

இதைச் சொல்லும்போது ஒரு கேள்வி எழும். ஏன் அப்படிப்பட்ட உரிமைகளை, ஆசிரியர் இல்லாவிட்டால் மற்ற உரிமைகளை ஏன் ஊராட்சிமன்றங்களுக்கு அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தரக்கூடாது என்று கேட்கக் கூடும். இதற்காகத்தான் ஒரு குழுவையே நாம் இன்றைக்கு அமைத்து இருக்கின்றோம்.

இதற்கிடையில், மேற்கு வங்கத்தைப் பார்த்தால், அங்கே 16 சதவீதம்தான். அவர்கள் பேசிய பிறகு, அங்கெல்லாம் தொடர்புகொண்டு, அதிகாரிகளைவிட்டு, தொலைபேசியில் தொடர்புகொண்டு, கேட்டபோது, மேற்கு வங்கத்திலே 16 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறது. அங்கே மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது மேற்கு வங்கத்தில் உள்ள உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக பட்ச பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன என்ற உண்மையை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

## அதிக அதிகாரம் வழங்கிடக் குழு

அதுமாத்திரமல்ல; அரசியலமைப்புச் சட்டத்திலே 73, 74-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பெரும்பாலான இனங்கள், உதாரணமாகக் கல்வி, சுகாதாரம் ஆகிய இனங்கள் எல்லாம் உள்ளாட்சி அமைப்புகளிலேதான் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இங்கே மேற்கு வங்கத்தை ஆதரிக்கின்ற கம்யூனிஸ்ட்டுகள் இருந்தாலும் கூட, உள்ளாட்சி மன்றங்களிடத்தில் ஆசிரியர்களை ஒப்படைத்தால், அதை நிச்சயமாக ஏற்கமாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இவைகளை எல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையை நாம் அணுக வேண்டும்.

# "அறந்தாங்கி சர்க்கரை ஆலை, 1999 ஆம் ஆண்டு இறுதியில் இயங்கத் தொடங்கும்".

எனவேதான், இன்னும் என்னென்ன அதிகாரங்களை அவர்களுக்குத் தரலாம் வழங்கலாம் என்பதற்கான குழு உள்ளாட்சித் துறை அமைச்சரை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்டு இருக்கின்றது. அந்தக் குழுவினுடைய பணிகள் எப்பொழுதோ நடைபெற்று முடிந்து இருக்கவேண்டும். ஆனால், குழு அமைப்பதற்காக ஒவ்வொரு கட்சியினுடைய தலைவருக்கும் கடிதம் எழுதி, உங்கள் கட்சியின் சார்பாக ஒரு உறுப்பினரை வழங்குங்கள் என்று கேட்டபோது, பல கட்சிகளிடமிருந்து பதில் உடனடியாக வரவில்லை; மிகத் தாமதமாகத்தான் வந்தது. எந்தக் கட்சிகள் என்று பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை; யாரும் என்னை ஆவலோடு, அதிர்ச்சியோடு பார்க்கத் தேவையில்லை. எந்தக் கட்சியினுடைய பெயரையும் நான் குறிப்பிடமாட்டேன்.

ஆனால் அப்படி தாமதமாக வந்த காரணத்தால் அந்தக் குழுவினுடைய பணி தொடங்கவும் தாமதம் ஆயிற்று. ஒரு கூட்டமோ அல்லது இரண்டு கூட்டங்களோதான் அந்தக் குழுவினுடைய கூட்டம் நடைபெற்றிருக்கின்றது. அதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தல் வந்துவிட்டது. ஆகவே அந்தக் குழுக் கூட்டத்திற்கு நேரமில்லாமல் போய்விட்டது. இனி, அந்தக் குழு நம்முடைய சட்டமன்றப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கூட இடைப்படுகின்ற நேரத்தில் அந்தக்குழுவை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நான்கைந்து தடவையாவது கூட்டி, இன்னும் என்னென்ன அதிகாரங்களை உள்ளாட்சிகளுக்குத் தரலாம் என்பதை நிர்ணயித்து, அரசுக்கு அறிக்கையாக அளிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

இங்கே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் மணி அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே ரப்பர் - தொழிற்சாலை அமைய வேண்டும் என்பதற்காக, அவர்களும் சரி, குமாரதாஸ் அவர்களும் சரி, நீண்ட நாட்களாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ரப்பரைப் போலவே அந்த ரப்பர் தொழிற்சாலையும் நீண்டு கொண்டே போகின்றது. இருந்தாலும் 1994-ஆம் ஆண்டில் செண்பகராமன்புதூர் என்ற கிராமத்திலே வாகன டயர் திட்டம் ஒன்றை அமைக்க 70 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த முன்பிருந்த அரசு நடவடிக்கை எடுத்தது. நிலச் சொந்தக்காரர்கள் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, இடைக்காலத் தடையாணையை 1995-ஆம் ஆண்டு பெற்றுவிட்டார்கள்.

ஆனால், அந்தத் தடையாணையை விலக்குவதற்குக் கடந்த கால அரசு விரைவான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், நிலத்தைக் கையகப்படுத்துவதிலே ஏற்பட்ட தாமதத்திற்காக வேதனைப்பட்டு அங்கே ரப்பர் தொழிலைத் தொடங்க முனைந்த அந்தத் தொழில் முனைவர், இந்தத் திட்டமே தேவையில்லை என்று அதைக் கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டார். அவர் அந்தத் திட்டத்தைக் கைவிட்டபிறகு, 'டிட்கோ' நிறுவனம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. 'டிட்கோ' நிறுவனம் அந்த நிலங்களுக்கான தொகையை அளித்து, நிலத்தைக் கையகப் படுத்தும் அலுவலரிடம் அந்தப் பொறுப்பை இன்றைக்கு வழங்கியிருக்கின்றது. அதே நேரத்தில், நீதிமன்றத் தடை ஆணையை விலக்குவதற்கும் பெருமுயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## ரூ.50 கோடியில் தொழில் பூங்கா

அதேநேரத்தில், ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில் பூங்கா (இண்டஸ்ட்டிரியல் பார்க்) ஒன்றை அமைக்க இந்த அரசு கருதியுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதற்காக, ஏற்கெனவே கையகப்படுத்தப்படும் நிலத்திற்கு அருகில் இன்னொரு 15 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, அவற்றையும் கையகப்படுத்த விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தத் தொழில் பூங்கா - ரப்பர் பூங்கா, சிறிய மற்றும் நடுத்தர ரப்பர் தொழில்கள் அமைக்க முன்வருகின்ற தொழில் முனைவோருக்கு உதவும்.

அமைக்கப்படவுள்ள ரப்பர் தொழில் பூங்கா தடையில்லாத மின்சாரம், நீர்வளங்கள், உற்பத்தியாகும் ரப்பர் தரங்களைப் பிரித்தெடுத்து ஒரே இடத்தில் சோதனை மற்றும் சான்றிதழ் வழங்குகின்ற வசதிகள், பொது நீர் வெளியேற்றம், கழிவு நீர்ச் சுத்திகரிப்பு வசதிகள், தகவல் தொடர்பு வசதிகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டதாக அமையும் என்பதையும், இப்பூங்காவுக்கான பூர்வாங்கமான திட்ட மதிப்பீடு ரூ.50 கோடியாகும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறி இதை விரைந்து முடிக்க 'டிட்கோ' நிறுவனம் எல்லாவிதமான முனைப்பான நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றது என்பதையும் நான் நண்பர் மணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## இரண்டே வண்ணங்களில் குடும்ப அட்டை

பொதுப்பிரச்சினையாக - தொகுதிப் பிரச்சினைகளாக இல்லாமல், மாநிலம் தழுவிய பொதுப் பிரச்சினையாக, பொதுவாக பொது விநியோகம் பற்றி இங்கே பேசப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே அதைப்பற்றி விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள்.

பேசிய எல்லா உறுப்பினர்களுமே இந்தக் குடும்ப அட்டை, நியாய விலைக்கடைகள், பொது விநியோகம் இவைகள் பற்றி இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இதில் தாமதம் ஆனது உண்மைதான். ஆனால் திட்டமிடுகின்ற நேரத்தில், மூன்று வண்ணங்களில் அட்டைகள் என்று எண்ணித் திட்டமிட்டபோது, அந்த அட்டைகளை அச்சிடுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள முன்வந்தவர்கள், இதற்குக் காலதாமதம் ஆகும் என்று தெரிவித்த நேரத்திலே, விரைந்து முடித்துக் கொடுக்கவேண்டுமென்று நானும் உணவு அமைச்சரும் மற்றும் அதிகாரிகளும் ஒரு ஐந்தாறு தடவையாவது அவர்களிடத்திலே

விவாதித்திருக்கின்றோம். இருந்தாலும் கூட, அதை அச்சேற்றுகின்ற பணி விரைந்து முடிக்கப்படவில்லை. அந்த நேரத்திலேதான், இந்த ஆளுநர் உரைக்கு முன்பு எனக்குத் தோன்றிய யோசனையாக, இந்த மூன்று வண்ண அட்டைகள் தேவையா, பச்சை அட்டை, மஞ்சள் அட்டை, இளம்சிவப்பு அட்டை என்று மூன்று அட்டை தேவையா? அவரவர்கள் இஷ்டத்திற்கு, அதாவது 'ஆப்ஷனிலே' ஒரு அட்டை, மற்றவர்களுக்கு அரிசி மற்ற அத்தியாவசியப் பொருள்களைத் தருவதற்கு ஒரு அட்டை என்று இருக்கின்றது போதாதா? ஒருவருக்கு இல்லவே இல்லை என்று சொல்வதற்கு ஒரு அட்டை தேவையா- என்று யோசித்தபோதுதான் வேண்டாம் என்று சொல்கிறவர்களுக்கு இல்லவே இல்லை என்ற நிலையில் அந்த அட்டை வழங்கப்படலாம்.

எனவே, இரண்டு அட்டைகள் போதுமானது என்று அந்த அட்டைகளைக் கணக்கிடும்போது நம்முடைய தாமரைக்கனி குறிப்பிட்டதைப்போல பச்சை மீது வந்துள்ள வெறுப்பால் - வெறுப்பு ஒன்றும் வரவில்லை, என்றைக்கும் வராது. ஏனென்றால் பச்சைப் பசேல் என்றுள்ள இயற்கையைப் பார்ப்பதிலேதான் எல்லோருக்கும் மகிழ்ச்சி. இந்த எண்ணத்தில் அந்த நிறத்தை விலக்கிடவில்லை. இந்தத் திட்டத்தை நாங்கள் மாற்றி, அமைக்க எண்ணியபோது, அச்சடிக்கப்பட்டிருக்கிற அட்டைகளை எத்தனை என்று கணக்கிட்டபோது, எந்த நிறத்தைக் குறைத்தால் இழப்பு குறைவாக இருக்கும் என்று எண்ணியபோது, பச்சை நிற அட்டைகள்தான் குறைவாக அச்சடிக்கப்படும். ஏனென்றால், இல்லை என்று சொல்கிற கார்டுகள்தான் குறைவாக இருக்கும். ஆகவே அதை விலக்கிவிட்டு, மற்ற நிறங்களை அச்சிடலாம் என்றவொரு முடிவுக்கு வந்து, மஞ்சள், இளம் சிவப்பு என்ற அந்த இரண்டு வண்ண அட்டைகளை வெளியிடுவது என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது.

இதிலே வருமான அடிப்படை பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இன்றைக்குப் பத்திரிக்கையிலே பார்த்தேன். நம்முடைய நண்பர் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் எம்.ஜி.ஆர் மன்றத்தினுடைய தலைவர், அவருடைய கட்சி சார்பாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த வருமான அடிப்படையே கூடாது. எல்லோருக்கும் கார்டுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இங்கே உணவு அமைச்சர் எடுத்துக் காட்டியதுபோல், மத்திய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குக் குறைந்த விலையில் உணவு வழங்கவேண்டும். உணவு தானியங்கள் வழங்க வேண்டும், அது அரிசி ஆனாலும், கோதுமை ஆனாலும் - என்கிற முடிவை ஐக்கிய முன்னணி அரசு எடுத்தபோது, அந்த முடிவு எடுக்கிற கூட்டத்தில் நானும் கலந்துகொண்டேன் என்ற நிலையில் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் என்கிற முறையில் மாத்திரமல்ல; நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கிற முறையிலும் நான் எடுத்துவைத்த கருத்து, 'ஏற்கெனவே நீங்கள் சொல்கின்ற விலையைவிடக்குறைவான விலைக்குத்தான் தமிழ்நாட்டிலே நாங்கள் அரிசி விற்பனையை நியாய விலைக்கடைகளிலே நடத்திக் கொண்டிருக்கிறோம்' என்பதை எடுத்துக்காட்டி, நீங்கள் கொண்டு வருகின்ற இந்த முறையின் காரணமாக எங்களுக்கு மத்திய அரசு வழங்குகின்ற அரிசியைக் குறைத்து விடக்கூடாது என்ற உத்திரவாதத்தைப் பெற்றுக்கொண்ட பிறகுதான் - நான் அவர்கள் எடுத்த அந்த முடிவுக்கே ஒப்புதல் அளித்தேன்.

### மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள் விரும்பினால் அரிசி

அந்த உத்திரவாதத்தை, அன்றையப் பிரதமரும், உணவு அமைச்சரும் கூட அந்தக் கூட்டத்திலே எனக்கு வழங்கினார்கள். அந்த உத்திரவாதத்தின்படி நமக்கு அவர்கள் அரிசி வழங்கிவருகிறார்கள் என்பதை ஆளுநர் உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டு இருப்பதை உறுப்பினர்கள் எல்லோரும் மிக நன்றாக அறிவீர்கள். இந்த வருமான வரம்பு, வறுமைக்கோடு எது என்பதை நிர்ணயிப்பதற்காக மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஒன்றாகும். இந்த வருமான வரம்பு இருக்கின்ற காரணத்தினால், 1250 ரூபாய் இருப்பவர்களுக்கு மாத்திரம்தான், இந்த 'சிகப்பு அட்டை' அரிசி மற்ற அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும் என்று இல்லை. அதற்கு மேலாக மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள் கூட அவர்கள் விரும்பினால் - 'ஆப்ஷன்' அவர்களுக்கு அரிசிதான் வேண்டும் என்றால் வாங்கிக் கொள்ளலாம்.

எனவே, அப்போது எனக்கு அரிசிதான் வேண்டும் என்று மஞ்சள் அட்டைக்காரர் சொல்வாரேயானால், மஞ்சள் அட்டையும், இளம் சிகப்பு அட்டையும் ஒரே தரம்தான். அப்போது - 'இல்லை, இல்லை எனக்கு வேண்டாம். எனக்குத் தேவையில்லை' என்று அவர்களாக முன்வந்து வேண்டாம் என்று சொன்னால் தவிர, அவர்களுக்கு அரிசி வழங்குவது நிறுத்தப்பட மாட்டாது. மஞ்சள் அட்டைக்கும் அரிசி உண்டு என்பதை நான் மிகத் தெளிவாக இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

வருமான அடிப்படையிலே இருக்கின்ற இந்த முறை தீது. இதனால் கெடுதி ஏற்படும் என்ற விமர்சனத்திற்கு எள்ளளவு இடமுமில்லை. அப்படி யாரும் அதற்காக வருத்தப்படத் தேவையில்லை. அதற்காக அதிர்ச்சி அடையத் தேவையில்லை என்பதையும் இந்த விளக்கத்தின் மூலமாக அவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்திலே இந்த அட்டை வழங்கத் தொடங்கப்பட்டு, விரைவிலே முடிவுறும் என்று மாதக்கணக்கிலே, முதலிலே சொல்லப்பட்டது உண்மைதான்.

### பழைய அட்டைகளுக்கும் ரேஷன் பொருட்கள்

ஆனால், எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட காலதாமதத்தால் சற்று அந்த நாட்களை நீட்டிக்க வேண்டிய இன்றியமையாமை இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்காக இங்கே நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் இன்றைக்குக் குறிப்பிட்டதைப்போல, இந்த இடைக்காலத்திலே யாரும் குடும்ப அட்டை - இல்லாமல் அவதிப்படுகின்ற நிலை நிச்சயமாக வராது. ஏனென்றால், ஏற்கெனவே இருக்கின்ற அட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் நியாயவிலைக் கடைகளிலே அவர்களுக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இன்றைக்கும் இருக்கின்றது. நாம் அவர்களுக்கு மேலும்

உதவிகரமாகவும், அதே நேரத்திலே அரசாங்கத்தினுடைய பொருளாதார இழப்பின் சுமையைக் குறைப்பதற்காகப் போலி அட்டையைக் கண்டுபிடிப்பதற்காகவும்தான் இந்த முறையை நாம் கொண்டுவந்திருக்கின்றோம் என்பதை நீங்கள் உணரவேண்டும் .

சென்னை மாநகரத்தில், ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப்போல மே முதல் தேதி முதல் இந்த அட்டைகள் வழங்கப்படும். அது, ஜூன் மாதம் முதல் தேதி முதல் நடைமுறைக்கு வரும். அந்தப் பொருட்களை வாங்கிக் கொள்ளக் கூடிய அளவுக்கு நடைமுறைக்கு வரும். அதேபோல் சென்னை மாநகரத்திலே மே முதல் தேதி வழங்கப்படும் அதே காலகட்டத்தில், மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய மாநகரப் பகுதிகளிலும் அதே முதல் தேதி குடும்ப அட்டைகள் வழங்கப்படும். திருநெல்வேலி, மாநகரப் பகுதியில் மே மாதம் 16ஆம் தேதி முதல் இந்தக் குடும்ப அட்டை வழங்கப்படும்.

மாவட்டங்களில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் புதிய குடும்ப அட்டைகள், இந்த வண்ண அட்டைகள், 1.6.98 முதல் வழங்கப்படும். கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 8 மாவட்டங்கள் தவிர, மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம்கூட 1.6.98ல் இந்த அட்டைகள் வழங்கப்பட்டுவிடும்.

நான் குறிப்பிட்ட இந்த 8 மாவட்டங்களில் மாத்திரம் 1.7.98 முதல் இந்தக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

**அனைவருக்கும் ஜூலை மாதத்திற்குள் குடும்ப அட்டைகள்**

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, தற்போதுள்ள குடும்ப அட்டைகளை அதுவரையிலே நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்தரவாதத்தினையும் நான் தருகின்றேன். எனவே, மாநிலம் முழுவதும் இந்தப் புதிய இரு வண்ணக் குடும்ப அட்டைகள் வழங்கும் பணி, மே மாதம் முதல்தேதி தொடங்கப்பட்டு, ஜூலை மாதத்திற்குள் முடிக்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய நண்பர் அழகிரியும், மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்களும் இன்னும் சில குடும்பங்கள், குடும்ப அட்டைகள் இல்லாமலே இருக்கின்றார்கள் என்ற குறையை இங்கே எடுத்து காட்டியிருக்கின்றார்கள். கடந்த சில ஆண்டுகளாகப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் உள்ளன என்ற கருத்தும் ஆளும் கட்சி சார்பிலும், எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர்கள் சார்பிலும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. அப்படி, இதுவரையில் குடும்ப அட்டைகளைப் பெறாமல் விட்டுப் போன குடும்பங்களுக்கு, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் ஏப்ரல் மாதத்திலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவர்களுக்கும் புதிய குடும்ப அட்டைகள் ஜூலை மாதத்திற்குள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கான அறிவிப்புகளும் விரைவிலே வரும் என்பதையும் மாநகராட்சிப் பகுதிகளில் விடுபட்டுப் போன குடும்பங்களிலிருந்து புதிய குடும்ப அட்டைகள் வழங்க ஏற்கெனவே மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் குடும்ப அட்டை பிரச்சினைக்கு அடுத்து, ஏன்- அடுத்து என்று கூட சொல்லமுடியாது, இதைவிட சற்று மேலாகவே கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகள் பற்றி இங்கே பேசப்பட்டு இருக்கின்றது. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் சுப்பராயன் அவர்களும், பெரியசாமி அவர்களும் - ஏன் எல்லோரும் நம்முடைய திருநாவுக்கரசு போன்றவர்கள், அத்தனை எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்களும், இந்தப் பிரச்சினையைப் பற்றி மிகுந்த உருக்கத்தோடு, கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்களே கழகத்திற்கும், கைத்தறி நெசவளர்களுக்கும் உள்ள ஈடுபாட்டைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

1955 - 56ம் ஆண்டில், அறிஞர் அண்ணா அவர்களும், நானும், மற்றும் நம்முடைய பேராசிரியர் போன்ற கழகத்தினுடைய தலைவர்களும், கைத்தறித் துணிகளைத் தலையிலும், முதுகிலும் சுமந்து, 'கைத்தறி வாங்கலையோ கைத்தறி' என்று அன்றைக்கு உடுமலை நாராயண கவிராயர் எழுதிய பாடல் 'செந்தமிழ் நாட்டுக் கைத்தறிச் சேலை வேட்டிகள் வாங்கிடுவீர், நம் கைத்தறியாளர் சேமமுறவே வாங்கிடுவீர்' என்ற பாடலைப் பாடிக்கொண்டு, அண்ணா அவர்கள் திருச்சியிலும், நான் சென்னையிலும், கைத்தறித் துணிகளை விற்றோம். அன்றைக்கு ஒருநாள் விற்பனை 1 இலட்சம் ரூபாய். அன்றைக்கு 1 இலட்சம் ரூபாய் என்றால் இன்றைக்கு எவ்வளவு என்று எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். 1 இலட்சம் ரூபாய்க்கு அன்றைக்கு கைத்தறித் துணிகளை விற்று, தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளுக்கு ஒரு 'மவுஸ்', ஒரு மகத்துவத்தை ஏற்படுத்துகின்ற நிலையை அன்றைக்கு நாங்கள் உருவாக்கினோம்.

அப்படி விற்றபோதுதான், அதுவரையிலே கதர் ஆடையிலேயிருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள், சென்னையிலே நான்விற்ற கைத்தறி ஆடைகளை அன்றைக்கு அவருடைய இல்லத்திலே 5 ஆயிரம் ரூபாய் அளவிற்கு வாங்கி, அதற்குப் பிறகு, கைத்தறி கட்ட ஆரம்பித்தார் என்ற ஒரு வரலாற்றுச் செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றைய நிலையில் உலகம் முழுவதும் இந்தத் துணித் தொழிலில் ஒரு முடக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் மிக நன்றாக அறிவோம். கைத்தறியாளர்களுடைய குறைகளைத் தமிழகத்திலே போக்குவதற்கு இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளில் ஒன்றிரண்டை நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகும்.

**"உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்கிடக் குழு அமைப்பு"**

## கைத்தறியாளர் குறைகளைப் போக்கிட அரசு எடுத்த நடவடிக்கை

89 - ஆம் ஆண்டிலேதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்குவது என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, விரிவாக அது நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்தத் திட்டத்தின் கீழ் 97 - 98ல் ரூ.92.60 கோடி மதிப்புடைய சேலைகளும், வேட்டிகளும் தமிழகத்திலே உள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை செய்யப்பட்டு, எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல் நல்ல தரமான வேட்டிகள், சேலைகள் வழங்கப்பட்டது. சில பேருக்கு வழங்கப்பட விட்டுப் போயிருக்கலாம். ஆங்காங்கே உள்ள குறைகளின் காரணமாகத் தரமான வேட்டி, சேலைகள் நடுத்தர வர்க்கத்தினர் கூட எங்களுக்குத் தரக்கூடாதா என்று கேட்கின்ற அளவிற்கு அவ்வளவு தரமான வேட்டிகளும், சேலைகளும், ரூ.92 கோடிக்கு அத்தனையும் நெசவாளர் சங்கங்கள், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலேதான் உற்பத்தி செய்து தரப்பட வேண்டுமென்று கூறப்பட்டு, ரூ.92 கோடி அவர்களுக்குப் போய்ச்சேர்ந்திருக்கிறது.

அதேபோல் 98 - 99 ஆம் ஆண்டு திட்டப்படி, வேட்டி சேலை இலவசமாக வழங்கப்படும் திட்டப்படி இந்த சங்கங்களுக்கே அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஒரு மீட்டர் துணி கூட வெளி மாநிலங்களிலிருந்தோ, தனியாரிடமிருந்தோ கொள்முதல் செய்யப் படவில்லை என்பது இந்த அரசு கைத்தறி நெசவாளர்கள் மீது கொண்டுள்ள அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை நான் இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் இலவசச் சீருடைகளுக்காக ரூ.56.74 கோடி மதிப்புடைய 188 இலட்சம் மீட்டர் துணிகள் தமிழக நெசவாளர்களால்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் ஆகிய துறைகள் நடத்துகின்ற பள்ளி மாணவ மாணவிகளுக்குச் சீருடை வழங்குகின்ற திட்டத்திற்கு ரூ.6.83 கோடி வழங்கப்பட்டு, 22 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் தமிழக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமேதான் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

இவைகள் எல்லாம் துணிகள் தேங்கிக் கிடக்கக் கூடாது என்பதற்காக, நெசவாளர் களுக்கே போய்ச் சேரவேண்டும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே போய்ச் சேரவேண்டுமென்பதற்காக, ஒரு மீட்டர் துணி கூட வெளியிலே வாங்காமல் அவர்களுக்கே போய்ச் சேர இந்த அரசு வகுத்த வழிகள் ஆகும்.

## ஆண்டு முழுவதும் 20 சதவிகிதத் தள்ளுபடி

அது மாத்திரமல்லாமல் கைத்தறித் துணிகளுடைய விற்பனையை மேம்படுத்த இந்த அரசு உச்சவரம்பு இல்லாமல் ஆண்டு முழுவதும் ‘ரிபேட்’ 20 பர்சென்ட் - 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கி ஆணை பிறப்பித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இதன் விளைவாக 97-98 ஆம் நிதியாண்டில் முதல் 5 மாதங்களில், அதாவது 1.4.97 முதல் 31.8.97 முடிய ரூ.147 கோடியாக இருந்த விற்பனை அடுத்த 6 மாதங்களில் 1.9.97 முதல் 28.2.98 முடிய ரூ.235 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதாவது இந்த 20 விழுக்காடு ஆண்டு முழுவதும் என்று ஆக்கிய காரணத்தால் அதிக விற்பனை ரூ.88 கோடிக்கு ஆகியிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அது மாத்திரமல்ல, கூட்டுறவுச்சங்க நெசவாளர்களுக்கு 1.4.97 முதல் 10 விழுக்காடு அகவிலைப்படியும், 1.10.97 முதல் அடிப்படை கூலியிலே 10 விழுக்காடு உயர்வும் அளிக்கப் பட்டுள்ளது. கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் உறுப்பினர்களாக இருந்து, ஓய்வுபெறும் நெசவாளர்களுக்கு மாதம் ரூ.150 ஓய்வூதியம் வழங்கி வருகின்றது. அதை - அந்த ஓய்வுபெறும் வயதை 58-லிருந்து 60-ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது 16.6.96 முதல்.

நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத்தொகை 15,000 ரூபாய் என்பது 18.9.96 முதல் இந்த அரசினால் 25,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு உதவிகளைச் செய்தும்கூட, இந்த அளவிற்குப் பக்கபலமாக இருந்தும் கூட அவர்களுக்கு இன்னமும் முழுமையாகத் துன்பம் தீர்ந்தபாடில்லை என்பதை உறுப்பினர்களைப் போலவே நானும் உணர்ந்து, வருத்தப் படுகின்றேன்.

## நெசவாளர்கள் வளம்பெறக் குழு

எனவே, இவைகளை நல்லமுறையில் ஆராய்ந்து அவர்களுடைய வாழ்விலே வளம் சேர்க்கவும், நலம் சேர்க்கவும் அவர்களுக்கு எளிதாக நியாய விலையிலே நூல் கிடைக்கவும், அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் துணியைக் கொள்முதல் செய்வதற்கும், அவர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புக் கிடைக்கவும், அவர்களுக்கு தேவையான கடன் வசதி எளிதில் பெறவும் என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றிப் பரிசீலித்து, இந்த அரசுக்கு ஆலோசனை களையும், பரிந்துரைகளையும் வழங்குவதற்காக, நெசவாளர்களுடைய பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினை அமைத்து, அந்தக் குழு மிக மிக விரைவில் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும்.

அந்தக் குழு உறுப்பினர்கள் யார், யார் என்பதை அடுத்த நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிடுகிறேன். அதற்குள்ளாக அவர்களை யெல்லாம் கலந்துபேசி, அந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படும். அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கொண்டு, நெசவாளர் துயர் நீங்க நல்ல முடிவுகளை நாம் எல்லோரும் சேர்ந்து எடுப்போம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

# "ரப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில் பூங்கா ஒன்று அமைக்கப்படும்".

இந்த அவையில் (நேஷனல் அஜெண்டா) பற்றி விவாதிக்கப்பட்டிருக்கின்றது. இதுபற்றி நேற்றைக்கு முன் தினம் நடைபெற்ற விவாதத்தில் சில விளக்கங்களை நான் தந்திருக்கின்றேன். இந்த நேஷனல் அஜெண்டா 17 கட்சியினுடைய தலைவர்கள் கையெழுத்திட்டு, வெளியிட்டுள்ள ஒன்றாகும். வாஜ்பாய் அவர்கள், அத்வானி அவர்கள், செல்வி ஜெயலலிதா அவர்கள், வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள், வை.கோ. அவர்கள், டாக்டர் ராமதாஸ் அவர்கள் என்று, 17பேர் கையெழுத்திட்டுள்ள அறிக்கை ஆகும்.

### தமிழக நலனுக்கு விரோதமாக 'நேஷனல் அஜெண்டா'

இந்த நேஷனல் அஜெண்டாவில் என்னென்ன திட்டங்களைச் சேர்க்கவேண்டும் என்ற நிபந்தனை விதித்து, அது சேர்க்கப்படாத சூழ்நிலையைப் பார்க்கும்போது, சேர்க்கப்பட்டதும் தமிழக நலன்களுக்கு, சமுதாய நலன்களுக்கு, விவசாய நலன்களுக்கு விரோதமாக ஆக்கப்பட்டிருப்பதைக் காணும்போது, இந்தக் கோரிக்கைகளை வைக்காமலேயே இருந்திருக்கலாமே என்று எண்ணத்தோன்றுகிறது.

ஏதோ முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சொன்னார் என்பதற்காக நான் போட்டி போட்டுக்கொண்டு அதை எதிர்க்கவேண்டுமென்று கருதுகின்றவன் அல்ல. உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்னைப் பற்றி. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மாற்றம் ஏற்பட்டு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, காவிரிப் பிரச்சினையிலே அவருக்குக் கை கொடுக்கின்ற வகையிலே நடந்து கொண்டதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். அதுபோல அவரும், இதே அவையில், இதே இடத்தில் பேசிய பேச்சு காவிரிப் பிரச்சினையானாலும், வேறு பல பொதுப் பிரச்சினைகளிலானாலும், அதிமுக.வும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருக்கும் என்று சொன்ன சொல் இன்னமும் என்னுடைய செவிகளில் ரீங்காரம் செய்து கொண்டுதான் இருக்கிறது.

அந்த அளவிற்குக் காவிரிப் பிரச்சினையிலே ஒருமித்த கருத்து இருந்தது. எம்ஜிஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து, இதைப்பற்றி விவாதத்திற்கு அழைத்தபோதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பிரதிநிதிகள் சென்றிருக்கிறார்கள். பேசியிருக்கிறார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சர்வ கட்சிக் கூட்டங்கள் கூட்டப்பட்டு, அதற்கு அழைப்பு அனுப்பியபோதெல்லாம் 'நீ காவிரிப் பிரச்சினைக்குத் துரோகம் செய்து விட்டவன்; ஆகவே, அந்தச் சர்வ கட்சி கூட்டத்திலே கலந்துகொள்ள முடியாது' என்று அறிவித்து, அப்படி எழுதப்பட்ட கடிதங்களை வெளிப் படையாகவே பத்திரிகைகளுக்குக் கொடுத்து, அந்தக் கூட்டங்களிலே கலந்துகொள்ள மறுத்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள்.

இங்கேயேகூட, ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1989-90-ல், வி.பி.சிங் அவர்கள் அங்கே பிரதமராக இருந்தபோது, நடுவர் மன்றம் அமைக்கப்பட வேண்டு மென்பதற்காக, பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு நம்முடைய தீர்மானத்தை எடுத்துக்கொண்டு டெல்லிக்குச் சென்ற நேரத்தில், வருவதாக ஒப்புதல் அளித்த எஸ்.ஆர்.இராதா-அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

முதலில் கொஞ்சநாள் தம்பி திருநாவுக்கரசு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகு எஸ்.ஆர்.இராதா அவர்கள் என்று நினைவு, அவரும் வருவதாகச் சொல்லி எல்லோருக்கும் சேர்த்து - டெல்லிக்குச் செல்ல விமானத்திற்கான பயணச்சீட்டு பெறப்பட்டு, கடைசி நேரத்திலே தாங்கள் வர இயலாது என்று கூறியது மாத்திரம் அல்ல; எங்களோடு வர இருந்த காங்கிரஸ் நண்பர்களையும் வரவிடாமல் அன்றைக்குத் தடுத்துவிட்டார்கள்.

### பொதுவான பிரச்சினைகளைப் புறக்கணித்தது இல்லை

அன்றைக்கு ஒரே ஒரு காங்கிரஸ் எம்பி. வைஜயந்தி மாலா அவர்கள்தான், துரைமுருகனுடைய தலைமையில் சென்ற அந்த தூதுக் குழுவினுடைய சந்திப்பிற்கு விபி.சிங் அவர்களுடைய அலுவலகத்திற்கு வந்தார்கள். மற்றவர்கள் யாரும் அன்றைக்கு வரவில்லை. அப்படிப் புறக்கணிக்கப்பட்டது. ஒரு பெரிய பிரச்சினை, பொதுவான பிரச்சினை; அரசியல் கண்ணோட்டத்தோடு அன்றைக்கு அணுகப்பட்ட காரணத்தால் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் என்றைக்கும் நாங்கள் அப்படிப் புறக்கணித்தது இல்லை.

இந்தப் பொதுவான பிரச்சினைகளில் எங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற அரசோடு சேர்ந்து ஒத்துழைக்க எதிர்க்கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் புறக்கணித்ததும் இல்லை; ஒதுங்கியிருந்ததும் இல்லை. எங்களுடைய கருத்துக்களை வேகமாக எடுத்துக் கூறியிருக்கலாம். ஆனால் ஒன்றாகச் சேர்ந்து செய்ய வேண்டிய முயற்சிகளில் நாங்கள் என்றைக்கும் விட்டுக் கொடுத்தது இல்லை. அந்த வகையிலே இன்றைக்கு இந்தக் காவிரிப் பிரச்சினையில் அதிகம் நான் பேச விரும்பவில்லை. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையொட்டி நேற்றைய முன்தினம் எழுந்த சர்ச்சையிலும் நீண்ட விளக்கத்தை நான் வழங்கியிருக்கிறேன். ஆனால் கேட்டது என்ன? கிடைத்தது என்ன? - என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில் நீதி வழங்கப்பட வேண்டும். அது இந்த அஜெண்டாவிலே வரவேண்டும். இந்த தேசியத் திட்டத்திலே வரவேண்டும் என்று செல்வி ஜெயலலிதா அவர்கள் வாதாடினார்கள்; போராடினார்கள்; பத்திரிகையிலே செய்தி வந்தது. தனிப்பட்ட சில பேருடைய மந்திரி பதவிகளுக்காக அல்ல; தமிழ்நாட்டினுடைய பொதுப் பிரச்சினைக்காக வாதாடுகிறேன் என்று சொன்னபோது அதைக் கேட்க இனிப்பாக இருந்தது.

**“காவிரி” என்ற ஒரு சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில்லை!**

ஆனால் நடைபெற்றிருப்பது என்னவென்றால் காவிரி என்ற ஒரு சொல்லையே தேசிய திட்டத்திலே காணவில்லை. குடகிலேயிருந்து பூம்புகார் வரையிலே நீண்டு பரந்து வந்துகொண்டிருக்கின்ற அந்தக் காவிரி இந்தச் சிறிய ஏட்டில் ஒரு இடத்திலேகூட காவிரி என்கின்ற 3 எழுத்துத் தமிழையோ அல்லது ஆங்கிலத்திலே Cavuery என்ற சொல்லையோ இதிலே காண முடியவில்லை. இரண்டு நாளைக்குமுன்பு தினமணி பத்திரிகையிலே பார்த்தேன். அதிலேகூட கர்நாடகத்திலே முதலமைச்சர் என்ன சொல்கிறாரோ அதைத்தான் இந்தத் தேசியத் திட்டத்திலே அவர்கள் ஏற்றியிருக்கிறார்கள் என்று தினமணிகூட தீட்டியிருக்கிறது. படித்துப் பார்த்தேன்.

அது மாத்திரம் அல்ல; கர்நாடகத்தினுடைய குரல் இன்றைக்கு ஹெக்டே மூலமாக அங்கே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஹெக்டேவினுடைய குரல்தான் இந்தத் திட்டத்திலே இருப்பதாக என்னால் உணர முடிகிறது. உணர முடிகிறது என்ன, உண்மையும் அதுதான். என்ன இருக்கிறது?

`We will not adopt in a National Water Policy which provides for effective and prompt settlement of disputes" என்றுதான் இருக்கிறது. அந்தத் தேசிய நதிநீர்க் கொள்கை என்பது Water Policy என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று தான். அதை யாரும் மறுக்கவில்லை; தேசிய நதிநீர் கொள்கையை யாரும் மறுக்கவில்லை; வெறுக்கவில்லை; அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்.

ஆனால் அதை வைத்து அந்தத் தீபத்தை வைத்து இந்த வீட்டைக் கொளுத்திவிடக்கூடாது. பார்ப்பதற்குத் தீபம்தான். ஆனால் தீபம் என்னுடைய வீட்டிடைக் கொளுத்தப் பயன்பட்டால் தடுத்தேதான் தீருவேன் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டும். தீபம் என்பதற்காக வீட்டைக் கொளுத்த முடியுமா?

பட்டேல் என்ன சொல்கிறார், கர்நாடகத்தின் முதலமைச்சர் என்ன சொல்கிறார்; கர்நாடக மாநில அரசு என்ன சொல்கிறது? இப்போது ஒன்றும் இந்தப் பிரச்சினையை எடுக்கவேண்டாம்; ‘பேச்சு வார்த்தைக்கு வா நான் சொல்வதைக் கேள்; ஏற்றுக்கொள்’ என்றனர். பேச்சு வார்த்தைக்கு நாம் மறுத்தபோது கூட உச்சநீதிமன்றம்தான் தாக்கீது தந்தது, பேசுங்கள் என்று. பேசாவிட்டால் உச்சநீதிமன்றம் தவறாகக் கருதிக்கொள்ளும் என்று பேசிப் பார்த்தோம். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. உச்சநீதிமன்றத்திற்குச் சென்று சொன்னோம். பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. உங்கள் தீர்ப்பை வழங்குங்கள் என்று சொன்னோம். உச்சநீதிமன்றம் மத்திய சர்க்காரைப் பார்த்துக் கேட்டது. ஐக்கிய முன்னணி அரசைப் பார்த்துக் கேட்டது.

ஐக்கிய முன்னணி அரசில் கர்நாடகத்தைச் சேர்ந்த ஜனதாதளத் தலைவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தேவகவுடா - ஐக்கிய முன்னணி கட்சியினுடைய தலைவர் அவர்தான். அவர் பிரதமர் பதவியிலிருந்து விலக்கப் பட்டபோது நானும், மூப்பனார் அவர்களும்தான் அவரை முன்மொழிந்து, வழிமொழிந்து ஐக்கிய முன்னணியினுடைய சேர்மெனாக, இந்தக் குழுவினுடைய தலைவராக அவர் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு - அவர் இருக்கிறார்.

அவர் இருந்தபோது கூட மத்திய அரசு அவருக்காக வளைந்துகொடுக்காமல் - தேவகவுடாவுக்காக வளைந்து கொடுக்காமல் ஐக்கிய முன்னணி அரசு ஒரு திட்டத்தைத் தயாரித்து சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்திருக்கிறது. என்ன திட்டம்? ஒரு அத்தாரிட்டி - Cavuery Valley Authority. அது என்ன சொல்கிறது? அத்தாரிட்டியினுடைய வேலை என்ன? நடுவர்மன்றம் கொடுத்திருக்கின்ற இடைக்கால அவார்டு இருக்கிறதே; அந்தத் தீர்ப்பு இருக்கிறதே; அதை எப்படி நிறைவேற்றுவது - நிறைவேற்றுவதா; இல்லையா; என்பதல்ல. எப்படி நிறைவேற்றுவது என்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தை மத்திய அரசு கொடுத்தது.

இதைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று மத்திய அரசு நம்முடைய மாநிலத்தைக் கேட்டது. நாம் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாக இருந்ததால் நாம் ஏற்று கொண்டிருக்கிறோம். அதைப்போலவே புதுவை மாநிலம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. கேரள மாநிலம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கர்நாடக மாநிலம் ஏற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்தார்கள். இழுத்தடிக்கும்போது அது சொல்லுவது எல்லாம் அத்தாரிட்டி வேண்டாம், கமிட்டி போதும். அது மாத்திரம் அல்ல; இந்தப் பிரச்சினையை தேசிய நதிநீர் கொள்கை வகுக்கப்பட்ட பிறகு பேசிக் கொள்ளலாம் என்பதுதான். இது இப்போது ஹெக்டே அவர்கள் வாயிலாக இந்த நேஷனல் அஜெண்டாவில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அன்றைக்கு முழங்கிய அந்த முழக்கம் இதில் இடம்பெறவில்லை என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்கு அவர் பாடுபடவேண்டும்; போராட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறனே தவிர, அவரை இழித்தும், பழித்தும் பேசுவதற்காகச் சொல்லவில்லை. ஏன் என்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர்கள் அக்கறையோடு செய்ய வேண்டும் எனக்குள்ள சந்தேகம் எல்லாம் நடுவர் மன்றம் நாம் கேட்டபோது அம்மையார் ஒரு முறை சொன்னார்கள். அப்படியே நடுவர் மன்றம் கொடுத்தாலும்கூட அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு ஒன்றுக்கு விதியில்லை என்று ஒருமுறை அம்மையார் சொன்னார்கள். அதையெல்லாம் நினைத்தால் பயமாக இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வோடு இதை அணுகினால் நம்முடைய பிரச்சினை நல்ல முறையில் தீருமா என்ற அச்சமே தவிர வேறு அல்ல.

அடுத்து பி.சி. மற்றும் எம்.பி.சிக்கு இட ஒதுக்கீடு. இந்த இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்திலே 69 சதவீதத்திற்கான சட்டம் கூட நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தினுடைய 9வது அட்டவணையில்கூட சேர்க்கப்பட்டது. இப்படி சேர்க்கப்பட்ட பிறகும் கூட உச்சநீதிமன்றத்திலே நமக்குக் கிடைத்த முடிவு என்ன? இந்த முடிவுக்கு யார் காரணம்? 17.11.94 அன்று உச்சநீதிமன்றத்திலே இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது

உச்சநீதிமன்றம் தன்னுடைய ஆணையில் என்ன குறிப்பிட்டிருக்கிறது என்றால் -

It is significant to notice that after the order dated 18th August 1994 was passed the state itself moved for modification of that order in circumstances stated in its application. That application was filed on 23rd September 1994. In that application no plea was raised based upon the inclusion of the said Act in the 9th Schedule and Orders were obtained on 3rd October 1994.

இப்படி ஒரு சட்டம் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருப்பதையே இவர்கள் யாரும் உச்சநீதிமன்றத்திலே சுட்டிக்ககாட்டவில்லை என்று உச்சநீதிமன்றம் சொல்கிறது. சுட்டிக்காட்டாத காரணத்தால் நாம் இந்த 69 சதவிகிதத்தைப் பெற முடியாதவர்களாக ஆகிவிட்டோம் என்று நான் மட்டுமல்ல; நானும், அருமை நண்பர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் நம்முடைய தோழமைக் கட்சித் தலைவர்கள் அத்தனைப் பேரும் ஒரே குரலிலே முழங்கியிருக்கிறோம். இதை யாரும் மறந்து இருக்கமுடியாது. அதற்காகப் போராட்டம் கூட நடத்தியிருக்கிறோம். இதைச் சுட்டிக்காட்டவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். "உச்சநீதிமன்ற ஆணை என்னவென்றால் 18.8.94 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டதற்குப் பின்னர் மாநில அரசே அந்த ஆணையை மாற்றம் செய்வதற்கான சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது கவனத்திற்குரியது. அந்த மனு 23.9.94 அன்று தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பிடப்பட்ட சட்டம் இந்த 69 சதவீத சட்டம் 9-வது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளதையொட்டி எந்தவிதக் கோரிக்கையும் அந்த மனுவிலே எழுப்பப் படவில்லை."

**உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டுகிற அளவுக்கு**

இப்படி உச்சநீதிமன்றமே சுட்டிக்காட்டுகின்ற அளவுக்கு, கடந்த கால அரசு பிழை புரிந்துவிட்டது என்பதை யாரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. ஆனால் அதை இடம்பெறச் செய்வோம், அது எங்களுடைய நிபந்தனைகளில் ஒன்று; இல்லாவிட்டால் பதவியேற்பு விழாவிற்கே வரமாட்டோம் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அஜண்டாவைப் பார்க்கும்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், என்ன இருக்கிறது என்றால், அன்றைக்குத் தீரன் குறிப்பிட்டதைப் போல -

`We will provide legal protection to existing percentages of reservation in educational insitutions at the state level"

- என்றுதான் இருக்கிறது. ஏற்கெனவே, கல்வி, வேலை வாய்ப்பு இரண்டிலேயும் இருந்தது. இந்த அஜண்டாவைப் படித்த பிறகு, எனக்கு வருகிற பயம் என்னவென்றால், அவர் கேட்ட உறுதிமொழியின் காரணமாக, நிபந்தனையின் காரணமாக இதில் வேலை வாய்ப்பும் போய்விட்டதோ; அதிலே உள்ள ரிசர்வேஷன், இடஒதுக்கீடும் போய்விட்டதோ என்கின்ற அச்சம் என்னைப் பிடித்துவாட்டுகின்றது. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கெல்லாம் ஒரு பீதி இதன் காரணமாக இன்றைக்குத் தோன்றியிருக்கின்றது.

``We will provide legal protection to existing percentages of reservation in educational institutions at the state level"

- என்றுதான் இருக்கின்றது. கல்விக் கூடங்களில் இந்த இட ஒதுக்கீட்டிற்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கப்படும் என்று இருக்கின்றது. எவ்வளவு இட ஒதுக்கீடு? அந்தப் புள்ளி விவரம் இதிலே காட்டப்படவில்லை. எவ்வளவு காலத்திற்கு? அது காட்டப்படவில்லை. யாருக்கு என்பது எல்லாம் காட்டப்படவில்லை, எனவே, ஆங்கிலத்தில் சொல்வார்களே "வேக்" (Vague) என்று. அது மாத்திரம் அல்ல; Vague ஆக மாத்திரமல்ல; பேக்காகவும் இது அமைந்திருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதைப்போல, பெண்களுக்கு 33 சதவீதம் கேட்டபொழுது, அம்மையார் சொன்னது, பெண்களுக்கு என்று மாத்திரம் இருந்தால் போதாது. அந்தப் பெண்களிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு சதவீதம் வேண்டும்; அதோடு கூடிய சதவீதம்தான், ஒதுக்கீடுதான் தேவை என்று சொன்னார்கள். இதிலே பார்த்தால் அப்படி எதுவும் இல்லை.

``33% of the seats in Parliament andState Assemblies for Women"

- என்று இருக்கிறதே அல்லாமல், அதிலே பி.சி. உண்டா? எஸ்.சி. உண்டா? எம்.பி.சி உண்டா என்பதெல்லாம் அதிலே காணப்படவில்லை.

பிறகு, இந்த மொழிப் பிரச்சினை. இந்த மொழியைப் பொறுத்தவரையில் எல்லா மொழிகளும் மத்தியிலே உள்ள இந்தி, ஆங்கிலம் ஆகிய இந்த இரண்டு மொழிகளோடு சேர்ந்து மத்திய ஆட்சி மொழிகளாக ஆகவேண்டும்; எல்லா மொழிகளும் ஆகவேண்டும்; அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நீண்ட காலமாக எடுத்துவைக்கப்பட்டு வருகின்ற ஒரு கொள்கை முடிவு, மொழியைப் பொறுத்தது.

அதிலே மேலும் ஒரு திருத்தத்தோடு 96ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் திருச்சியில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் முரசொலிமாறன் முன்மொழிந்து, நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழிமொழிந்து

"பொருளாதார இழப்பைக் குறைக்கவும், போலி அட்டையைக் கண்டுபிடிக்கவுமே இரட்டை வண்ணக் குடும்ப அட்டை".

நிறைவேற்றப்பட்ட தீர்மானம்; மத்தியிலே ஆட்சி மொழியாக அரசியல் சட்டத்திலே அட்டவணையிலே உள்ள எல்லா மொழிகளும், குறிப்பாக எல்லா மாநிலத்திலும் உள்ள ஆட்சி மொழிகளும் இடம் பெற வேண்டும்; அதற்குக் காலக்கெடு வேண்டுமென்றால் முதல் கட்டமாக எல்லா வகையிலும் வளம் பெற்ற, இலக்கிய வளம், இலக்கண வளம், தொன்மை அத்தனை சீரும் நிறைந்த தகுதி வாய்ந்த எங்கள் தமிழ் மொழியை முதல் கட்டமாக மத்திய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும்" என்பது தீர்மான வாசகம் ஆகும்.

**இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தமிழ்**

அதை யார் எடுத்துக்கொண்டாலும், எனக்கு மகிழ்ச்சிதான். அதை ஜெயலலிதா அவர்கள் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய கட்சி மாநாடுகளிலும் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ம.தி.மு.க. மாநாட்டிலே போட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சிதான், இந்தக் கொள்கை எல்லோருக்கும் சொந்தமாக வேண்டுமென்பதுதானே நம்முடைய கொள்கை.

அப்படி வந்ததில், இதிலே தமிழை ஆட்சி மொழியாக, இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற நிலை, இந்த நேஷனல் அஜண்டாவிலே இருக்கிறதா என்றால் இல்லை.

அன்றைக்கு ஒரு பெரியவர், இந்திய யூனியன் முஸ்லிம் லீகினுடைய தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் அரசியல் நிர்ணய சபையிலே இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கலாம் என்று பிரச்சினை வந்தபொழுது தமிழகத்திலேயிருந்து ஒலித்த குரல் காயிதே மில்லத் அவர்களுடைய குரல், " எல்லா வளமும் நிறைந்த, எல்லா இலக்கிய இன்பமும் வாய்ந்த, எல்லா இலக்கணச்செறிவும் மிக்க தமிழ் மொழியைத்தான் இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும்." என்று அன்றைக்கு உரத்த குரல் கொடுத்தார்கள். ஆனால் அந்தக் குரல் அன்றைக்கு வெற்றி பெறவில்லை.

அதே நிலையிலேயிருந்து தமிழ் மொழி ஆட்சி மொழியாக ஆகவேண்டும், அது ஒரு நிபந்தனை என்று விதிக்கப்பட்டு, பின்னர் தயாரிக்கப்பட்டு, அவர்களும் கையெழுத்திட்டுள்ள அஜண்டாவிலே என்ன இருக்கிறது என்றால்,

"A committee will be set up to study the feasibility of treating all 19 languages included in schedule - VIII of the constitutions as Official Languages."

இதற்கு ஒரு கமிட்டி போடப்பட்டு, இது சாத்தியமா என்று ஆராயும். சாத்தியமா என்று ஆராயும்போது, ஒவ்வொரு மொழியாக எடுத்துக்கொள்ள வேண்டும். 19 மொழிகளும் சாத்தியமா என்று ஆராய்ந்தால் சாத்தியமில்லை என்றுதான் முடிவு வரும். தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி உண்டா என்று ஆராயத் தொடங்கினால், எல்லோரும் சேர்ந்து 'உண்டு' என்ற அந்த முடிவைத்தான் தெரிவிப்பார்கள். எனவே, தமிழ்மொழி அங்கே ஆட்சி மொழியாக, மத்திய ஆட்சி மொழியாக ஆவதற்கான அந்தச் சூழல் இந்த அஜண்டாவிலே இடம் பெறவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இப்படிச் சுட்டிக்காட்டுவது குறை கூற அல்ல; மேலும் இதற்கான முயற்சிகளை இன்றைக்கு அங்கே பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர்கள் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேனேயல்லாமல் குறை கூறுவதற்காக நான் சொல்லவில்லை. இவையெல்லாம் நிறைவேற வேண்டும் என்கின்ற ஆசை காரணமாகக் கூறுகின்றேன். அதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால், ஏதோ சில நிர்ப்பந்தங்கள், ஏதோ சில பதவிகளுக்காகத்தான் செய்யப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு விரோதமான சில காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் இந்த நிபந்தனைகள் எல்லாம் விதிக்கப்பட்டன என்ற ஒரு எண்ணத்தை உறுதிப்படுத்தக்கூடிய அளவுக்கு ஆகிவிடும் என்பதற்காக இதிலே மேல் நின்று முயற்சிகளை முனைப்போடு செய்யவேண்டும் அவர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமாக இங்கே பேசப்பட்ட வெடி குண்டு சம்பவங்கள். இதிலே நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லையென்றாலும், ஒரு தகவலை - இந்த அரசுக்குக் கிடைத்த இந்தத் தகவல் எப்படியெல்லாம் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு எங்கே இதிலே சோடை ஏற்பட்டது என்பதை உங்களுக்கு விளக்குவதற்காகச் சொல்கின்றேன். ஏற்கெனவே, செய்தியாளர்களிடத்திலே ஒரு சிலவற்றைச் சொல்லியிருக்கின்றேன். முழுமையாக இந்த மாமன்றத்திலே சொல்ல வேண்டும் என்பதற்காக இவைகளை நான் நினைவூட்டுகின்றேன். கோவை குண்டு வெடிப்பு சம்பவம் நடப்பதற்கு முன்பே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லையென்றெல்லாம் இங்கே உறுப்பினர்கள் பலரும் கேட்டிருக்கின்றார்கள். நான் அவர்களுக்குச் சொல்கின்ற பதிலை ஒரு அறிக்கை போல இங்கே வைக்க விரும்புகின்றேன்.

**காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள்**

கோவை மாநகரக் காவல்நிலையத்தையும், காவல்துறை வாகனங்களையும் வெடிகுண்டு வைத்துத் தகர்ப்பதற்காக இஸ்லாமிய தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை, தமிழ்நாடு காவல்துறையின் புலனாய்வுத் துறை, 11.12.97 அன்று அரசுக்குத் தெரிவித்தது. மத்திய புலனாய்வுத் துறையல்ல; கவனமாகக் கேட்கவேண்டும். தமிழ்நாடு காவல் துறையினுடைய புலனாய்வுத் துறை - டிஐஜி - 11.12.97 அன்று அரசுக்குத் தெரிவித்தது. உடனடியாக அரசின் சார்பில் இந்தத் தகவல் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாநகரக் காவல் ஆணையருக்கும் அனுப்பப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.

கோவை மாநகரக் காவல் நிலையம், காவல், துறை வாகனங்கள் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்படும். தீவிரவாதிகள், அதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற செய்தி, 11.12.97 அன்று கிடைத்த செய்தி உடனடியாகக் கோவை மாநகர காவல் துறை ஆணையருக்கு அனுப்பப்பட்டது.

பிறகு 21.12.97ல் சென்னையிலே உள்ள மத்திய புலனாய்வுத் துறை இணை இயக்குநர், ஐபியினுடைய இணை இயக்குநர், தமிழ்நாடு காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 21.12.97ல் ஒரு தகவல் அனுப்பினார். அதில் "1997 நவம்பர், டிசம்பர் மாதங்களில் கோவை நகரில் நடந்த மதக்கலவரங்களில் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு பதில் அடி கொடுக்கும் வகையில் கோவை நகர் வெளிப்புறத்தில் சில வன்முறைகளில் அல் - உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும். காவல் நிலையங்கள், கோவை காவல் ஆணையர் அலுவலகம், எரிவாய்வு ஏற்றிச்செல்லும் லாரிகள் போன்றவை பாதிக்கப்படலாம்" - என்று அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த தகவலும் புறக்கணிக்கப்படவில்லை.

உடனடி நடவடிக்கைக்காகக் கோவை மாநகரக் காவல்துறை அதிகாரிகளுக்கு மாநிலக் காவல்துறை அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்பட்டது. பிறகு, 24.12.97 அன்று அரசின் தலைமைச் செயலாளருக்கு ஒரு தகவல் தரப்பட்டது. இந்தத் தகவலும் நான் முதலிலே குறிப்பிட்ட அதே தகவல்தான், என்னென்ன நடைபெறும் என்ற தகவல்தான் தெரிவிக்கப் பட்டது. உடனடியாக, தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர், காவல்துறை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் ஒழுங்கு) காவல்துறை கூடுதல் இயக்குநர் (ஊவுத்துறை) ஆகியோரைக் கொண்ட உயர்மட்ட அலுவலர்களுடைய கூட்டம் கோட்டையிலே நடந்தது.

இந்தக் கூட்டத்தில் வெடிகுண்டு அச்சுறுத்தல் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது. ஏற்கெனவே அடையாளங் காணப்பட்ட மதத் தீவிரவாதிகளுடைய செயல்பாடுகளை உன்னிப்பாகத் தொடர்ந்து கண்காணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, அதற்கான திட்டம் - (Contignecy Plan) - ஒன்றைத் தயாரித்து உடனடியாக அமல்படுத்த வேண்டும் எனக் காவல்துறை அதிகாரிகளுக்கு அந்தக் கூட்டத்தில் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதேபோல், அல் - உம்மா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பால்கேன் போன்று தோற்றம் அளிக்கக்கூடிய பொருட்களில் வெடிபொருட்களை மறைத்துவைத்து, எரிவாயு ஏற்றிச் செல்லும் லாரிகளையும், காவல் நிலையங்களையும் தாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக - ஒரு தகவலைத் தமிழ்நாடு அரசின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு எஸ்.பி.சிஐ.டி. 27.12.97 அன்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தது. அதையொட்டி தலைமைச் செயலாளர், காவல்துறைத் தலைவர் டிஜிபி. காவல்துறை கூடுதல் தலைவர் (புலனாய்வு) ஏ.டி.ஜி.பி. (இண்டெலிஜென்ஸ்) ஆகிய உயர் மட்ட அலுவலர்களைக் கொண்ட கூட்டத்தைக் கூட்டி அதுபற்றி விவாதித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மத்திய அரசின் உள்துறையிடமிருந்து 24.1.98 அன்று ஒரு எச்சரிக்கைச் செய்தி வந்தது. அதிலே, ரம்ஜான் பண்டிகையையொட்டி அல்-உம்மா இயக்கம் கோவை நகரில் குண்டுவெடிப்பிற்குத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தகவலும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், கோவை காவல்துறை ஆணையர் அவர்களுக்கும், காவல்துறை இயக்குநருக்கும் தமிழக அரசால் தெரிவிக்கப்பட்டது.

## "கைத்தறி நெசவாளர் துயர் களைவது பற்றி ஆராயத் தனிக்குழு அமைக்கப்படும்".

மேலும் 24.12.97 அன்று கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீவிர அறிவுரைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மத்தியப் புலனாய்வுத் துறையின் இணை இயக்குநர் 21.12.97 கடிதத்தில் என்ன தெரிவித்திருந்தாரோ அதே எச்சரிக்கைச் செய்தியை மத்தியப் புலனாய்வுத் துறை இயக்குநர் 2.1.98 அன்று மாநிலக் காவல்துறைத் தலைவருக்கு அனுப்பியிருந்தார். இக்கடிதம் 5.1.98 அன்று காவல்துறைத் தலைவரால் பெறப்பட்டது.

மத்தியப் புலனாய்வுத் துறை இணை இயக்குநர் தமிழக அரசின் காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களுக்கு 19.1.98 அன்று எழுதிய கடிதத்தில் ரம்ஜான் பண்டிகையைத் தொடர்ந்து ஒரு வார காலத்திற்குள் வன்முறை செயல்களில் அல்-உம்மா இயக்கத்தினர் ஈடுபடக்கூடும் என்றும் தெரிவித்திருந்தார். இதுவும், உடனடியாகக் கோவை காவல்துறை அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டது. தெரிவிக்கப்பட்டு, கண்காணிப்போடு செயல்படுங்கள் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

### முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட இடங்கள்

இவ்வாறு 14-ஆம் தேதி கோவையிலே வெடிகுண்டு சம்பவம் நடப்பதற்கு முன்பு இதேபோல் பல எச்சரிக்கைகள் செய்யப்பட்டு, அந்த எச்சரிக்கையின்பேரில் திருநெல்வேலி மாவட்டம் - கூடங்குளம், விழுப்புரம் மாவட்டம் - சின்னசேலம், தர்மபுரி மாவட்டம் - பாப்பாரப்பட்டி, அஞ்செட்டி, பெண்ணாகரம், கடலூர் மாவட்டம் - சிதம்பரம், செங்கற்பட்டு கிழக்கு காவல் மாவட்டத்தில் தாம்பரம், மாங்காடு, மதுரை மாவட்டம் - பேரையூர், சென்னையில் வேப்பேரி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை, சேலம் மாவட்டத்தில் தலைவாசல், ஆத்தூர், மகுடஞ்சாவடி, மேச்சேரி, கருமலைக்கூடல், தாரமங்கலம், வீரகனூர், கொண்டலாம்பட்டி, சங்ககிரி, தீவட்டிப்பட்டி, சூரமங்கலம், தம்மம்பட்டி, ஓமலூர், சேந்தமங்கலம், விருதுநகர் மாவட்டத்தில் திருத்தங்கல், காரியாப்பட்டி, மாரனேரி, வச்சகாரப்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், முரப்பநாடு, ஆத்தூர், குமரி மாவட்டத்தில் இரணியல், இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரம், கோவை மாவட்டத்தில் மடத்துக்குளம் ஆகிய இடங்களில் முறையான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் 13-ஆம் தேதி வரையில் கோவை ஒன்றைத் தவிர எல்லா இடங்களிலும் முறையாக அரசு தாக்கீதை ஏற்று டிஜிபியினுடைய தாக்கீதை ஏற்று ஆங்காங்குள்ள காவல்துறை ஆணையாளர்கள், டி.ஐ.ஜிகள் எஸ்பிகள்

## இதுதான் அரசியல் பண்பாடு

*தி.மு.கவை நான் கடுமையாக எதிர்த்தாலும், அண்ணாதுரையின் பிறந்தநாள் மலருக்கு ஒரு கட்டுரை கேட்டார்கள். எழுதினேன். அதேபோல, சென்னையில் என் பிறந்தநாள் விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவரும் என்னைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்.*

*கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, திருக்குவளை என்ற இடத்தில் அவர் தாயின் பெயரால் கட்டப்பட்ட ஒரு பிரசவ விடுதியைத் திறந்து வைக்கவேண்டும் என்று என்னை அழைத்தார். நானும் அதை ஏற்றுக்கொண்டு சென்றேன்.*

*1970ல், தாம்பரத்தில் நடந்த முதலமைச்சர் கருணாநிதி பிறந்தநாள் கூட்டத்தில் கலந்துகொண்டு பாராட்டிப் பேசினேன். கருணாநிதிக்குப் பக்தவத்சலம் "சலாம் போடுகிறார்" என்று ஒரு பத்திரிக்கை எழுதியது.*

*இதெல்லாம் என்ன தவறு? இதுதான் அரசியல் பண்பாடு என்பது என்னுடைய கருத்து.'*

*- திரு. எம்.பக்தவத்சலம் எழுதிய* **'எனது நினைவுகள்'** *என்ற நூலிருந்து*

*- செய்தி.* **க. வித்யா**

இவர்கள் முறையாகச் சோதனையை அங்கே நடத்தினார்கள். 1.2.98 முதல் 13.2.98 வரை கண்டுபிடிக்கப்பட்டவை, 13 நாட்களில், நாட்டு வெடிகுண்டு 2019, ஜெலட்டின் குச்சிகள் 586, டெட்டனேட்டர்கள் 1595, பட்டாசுகள் 2675 மற்றும் 11 பண்டல்கள், பியூஸ் வயர் 362 மீட்டர்.

இதர வெடிமருந்துப் பொருட்கள் 207 கிலோ, துப்பாக்கிகள் 6, கைத்துப்பாக்கிகள் 2, எஸ்.பி.எம்.எல்.2, கேட்ரிட்ஜிகள் 5, பிப்ரவரி 1ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களையொட்டி தொடரப்பட்ட வழக்குகள் 49. சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் 95. இவர்களில் கைது செய்யப்பட்டவர்கள் 81 பேர்.

ஆனால், கோவையிலிருந்து வந்த பதில் என்னவென்றால், 'நீங்கள் என்ன செய்தீர்கள்' என்று கேட்டதற்கு வந்த பதில் என்னவென்றால், கோவையிலும் பல்வேறு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், சில இடங்களில் மத்திய காவல் படை (சி.ஆர்.பி.எப்) துணையோடு சோதனைகள் செய்யப்பட்டதாகவும், ஆனால் அந்தச் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கோவை மாநகர அதிகாரி அறிக்கை அனுப்பினார்.

ஏன் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லை, என்ன செய்தாய் என்றால், இதற்கெல்லாம் முதலமைச்சரா போய்ப் பார்க்க முடியும்? அதிகாரியைத்தான் நம்பினோம். கோவை மாநகரக் காவல்துறை அதிகாரி தெளிவாகச் சொல்கிறார். கோவையிலே பல இடங்களில் சோதனைகள் செய்யப்பட்டன. சில இடங்களில் மத்திய காவல்படை (சி.ஆர்.பி.எப்) துணையோடு சோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் சோதனைகளில் சந்தேகத்திற்குரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று கோவை மாநகர அதிகாரி, அரசு கேட்ட விளக்கத்திற்குப் பதில் அனுப்பினார்.

### தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்து ஆணை

அதற்குப் பிறகுதான் 14-ஆம் தேதி சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்ற நாளில் சிந்தாதிரிப்பேட்டையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தினுடைய இறுதிக்கூட்டம். நானும், மூப்பனாரும், நல்லக்கண்ணு அவர்களும், சங்கரய்யா, வடிவேலு போன்றவர்களும் அதற்குப் பிறகு அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கலந்து பேசிக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு பேசினோம். உடனடியாக அதே நாளில் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக இரண்டு தீவிரவாத இயக்கங்களைத் தடை செய்து அரசு, ஆணை பிறப்பித்தது.

அந்த நேரத்தில் கோவைக்குப் பிரச்சாரத்திற்கு வந்திருந்த அத்வானி அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று, 10 நிமிடங்களுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சியரோடு தொடர்புகொண்டு பேசினேன். இன்னும் சொல்லப்போனால், 14ஆம் தேதி காலையில், திரு.அத்வானி அங்கே வருகிறார் என்ற செய்தியைப் பத்திரிகையிலே பார்த்துவிட்டு, உடனடியாக நான் போலீஸ் கமிஷனர், கோவை அவர்களை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, 'அத்வானி வருகிறார், பாதுகாப்பு சரியாக இருக்கட்டும், பல கடிதங்கள் ஏற்கெனவே வந்து போயிருக்கின்றன. அந்தக் கடிதங்களில் குறிப்பிட்டபடி கண்காணியுங்கள்' என்று சொன்னபோது, சரி என்றுதான் சொன்னார், ஆனால் நிலைமை இப்படி ஆகிவிட்டது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, திரு.அத்வானி பேசவிருந்த அந்தக் கூட்டத்திற்கும், வெடிகுண்டு வெடித்த இடத்திற்கும் கிட்டத்தட்ட 820 மீட்டர் தொலைவு. 820 மீட்டர் தொலைவிலே வெடிகுண்டு வெடித்து, அத்வானி அவர்களை அந்தக்கூட்டத்திலே கொன்றிருக்க முடியுமா என்பதை நான் உறுதியாக அறுதியிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இதற்கெல்லாம் கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய விசாரணைக் குழு ஆராய்ந்து பதில் சொல்லவிருக்கிறது.

**பிரதமருக்கு இணையாக அத்வானிக்குப் பாதுகாப்பு**

ஆனால் எங்களுக்கு இருந்த கவலை, நானும் மூப்பனாரும் உட்கார்ந்துகொண்டு 10 நிமிடங்களுக்கு ஒருமுறை கலெக்டருக்குப் ஃபோன் செய்து, திரு.அத்வானி அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பவேண்டும் என்று சொன்னபோது, அவர் கேட்கமாட்டேன் என்கிறார். மருத்துவமனைக்குப் போகவேண்டுமென்று சொல்கிறார் என்று சொன்னபோது, சரி பலத்த பந்தோபஸ்தோடு, ஒரு பிரதமருக்குப் போடுகின்ற பந்தோபஸ்தைவிட அதிகமாக திரு.அத்வானி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர் மருத்துவமனைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார்.

பிறகு, திருச்சியிலும், அதைவிட அதிகமான பந்தோபஸ்தோடு அந்தக் கூட்டம் அங்கே நடைபெற்று திரு.அத்வானி அவர்கள் பத்திரமாகத் திரும்பிச் செல்வதற்கான வழிவகை ஏற்பட்ட பிறகுதான் நான் பெருமூச்சே விட முடிந்தது. அந்த அளவிற்கு அந்த நாள் அமைந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

வெடிகுண்டு சம்பவத்திற்கான காரணங்களைக் கண்டறியவும், காவல்துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட எச்சரிக்கைச் செய்தி மீது இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காகவும், கோவை மாநகரக் காவல்துறை அதிகாரி செயல்பாட்டில் குறைகள் இருப்பின் அவைகள் பற்றிய உண்மை நிலையை அறியவும், நஷ்டஈடு எவ்வளவு தரவேண்டுமென்பதை அறியவும், இதற்கெல்லாம் மூலகாரணம் என்ன என்பதை அறியவும்தான், நீதிபதி பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் அவர்களுடைய குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

உங்களுடைய அனுமதியோடு சொல்லிக் கொள்கிறேன். இப்படி பொறுப்பற்ற ஒரு காவல்துறை அதிகாரி மீது - உங்களுடைய அனுமதியோடு - இந்த அரசு விளக்கம் கேட்டு கடுமையான நடவடிக்கையை எடுக்க இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மிகத் திறமையாக நடந்துவரும் விசாரணை**

தொடர்ந்து இங்கே எதிர்க்கட்சித் தலைவர்கூட சிபிஐ.விசாரணை வேண்டுமென்று குறிப்பிட்டார். மாநிலக் காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றவர்களுடைய விளக்கங்கள் கோரப்பட்ட அந்தச் சூழ்நிலையில், விரிவான புலனாய்வு ஒன்றை நடத்த பரம்வீர் சிங் என்கிற ஐ.பி.எஸ்.அலுவலர் தலைமையில் - ஐஜி. அந்தஸ்தில் உள்ளவர் - 15.2.98 முதல் மறுநாளே விசாரணை ஆரம்பமாகிவிட்டது. இந்த விசாரணை மிகத் திறமையாக நடைபெற்று வருகிறது. நான் சி.பி.ஐ. வேண்டாம் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. மிகத் திறமையாக இவர்கள் இந்த விசாரணையை நடத்திவருகிறார்கள்.

கேரளத்திலே விட்டுவிட்டார்களே என்று தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். கேரளத்திலே யாரையும் விடவில்லை. அங்கே 8 பேர் பிடிபட்டதாகச் செய்தி வந்தது. அவர்களுக்கும் கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கும் சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகத்தின் பேரிலே பிடிக்கப்பட்டார்கள். இவர்களும் படபடப்போடு அங்கே ஓடிச்சென்று பார்த்தார்கள். இந்தச் சம்பவத்திற்கும், இவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் அவர்கள் விடப்பட்டார்களே அல்லாமல், குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப்பட்டவர்கள் யாரும் விடப்படவில்லை.

இதுவரையில் 104 பேர் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு, 42 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து தமிழகத்திலே, மாநிலத்திலே இந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரம் எப்படி காப்பாற்றப் பட்டிருக்கிறது என்பதையெல்லாம் உறுப்பினர்கள் மிக நன்றாக, தெளிவாக அறிவீர்கள். இதற்கெல்லாம் மூல காரணங்களை ஆராய்ந்து, அதைப்பற்றி நாம் இங்கே பேசும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிக அருமையாக எரிகிற 'நெருப்பிலே எண்ணெய் வார்ப்பதாக நம்முடைய பேச்சுவார்த்தைகள், எழுத்துக்கள் அமைந்துவிடக்கூடாது' என்று சொன்னார்கள். ஆனால் சில நேரங்களில் மூண்டெழுகிற உணர்ச்சிகளை அடக்க முடியாமல் சிலர் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. நம்முடைய அன்பிற்குரிய இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர், அருமைமிகு நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் பல செய்திகளை இங்கே சொன்னார்கள். அதற்குப் பதிலாக மற்றொன்று நடைபெற்றது; நவம்பர் கடைசி நாளும் டிசம்பர் முதல் நாளும், கோவையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு மாறாக இந்தச் சம்பவம் பதிலடியாக நடந்தது என்ற நிலையிருந்தாலும்கூட அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

**வன்முறைக்கு இன்னொரு வன்முறை தீர்வல்ல**

ஏனென்றால் வன்முறைக்கு இன்னொரு வன்முறை தீர்வல்ல. சட்டத்தை நாமே கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதை அப்துல் லத்தீப் அவர்களும் மறுப்பவர்கள் அல்ல, ஏற்றுக்கொள்ளக் கூடியவர்தான். அத்தகைய பண்பு வாய்ந்தவர்தான் அவர்கள். இதைப் போலவே எல்லோரும்.

நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் மிகுந்த வேகத்தோடும், கொந்தளிப்போடும், குமுறல்களோடும் இங்கே தன்னுடைய ஆத்திரத்தையெல்லாம் வெளிக்காட்டினார்கள். நான் அந்த அடிப்படைகளையெல்லாம் மறக்கவில்லை. மறைக்கவும் விரும்பவில்லை. அந்த அடிப்படைகளை எல்லாம் உணர்ந்தவன்தான் நான். அந்த அடிப்படைகள் சரிசெய்யப்பட வேண்டும்

**"காவிரி போன்ற பொதுப்பிரச்சினைகளை என்றுமே நாங்கள் புறக்கணித்ததில்லை".**

என்கிற பேரியக்கத்தில் தந்தை பெரியார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களால் வழி நடத்தப்பட்டு இன்றைக்கு உங்களோடு இருப்பவன்தான் நான் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

எனவே, அந்த அடிப்படைகளைப் பற்றி லத்தீப் அவர்களோ, கிருஷ்ணசாமி அவர்களோ, மற்றவர்களோ எடுத்துச் சொல்கிற அந்தக் கருத்துக்கள் முரண்பாடானவை அல்ல. இருந்தாலும்கூட வன்முறைக்கு வன்முறை பரிகாரம் ஆகாது.

சென்னையிலே பிடிபட்டிருக்கின்ற 4, 5 இளைஞர்களுடைய படங்களைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். எவ்வளவு இளைஞர்கள் அவர்கள். அழகானவர்களாக இருக்கிறார்கள். அதேபோன்று இஸ்லாமியத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி. அவர்களைப் பார்க்கும்போது நமக்குப் பரிதாபமாக இருக்கிறது. அவர்களிடம் இந்த உணர்வைத் தட்டி எழுப்பக்கூடிய அளவிற்கு, மூளைச் சலவை என்பார்களே, அதேபோன்று சலவை செய்யப்பட்டு அவர்கள் இன்றைக்கு முடுக்கிவிடப்பட்டு இருக்கிறார்கள்.

நபிகள் நாயகம் என்ன சொன்னார்? இவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரிக் காரியங்களைச் செய்து விட்டு, செத்துப்போனால்கூட, மோட்சத்திலே நமக்கு மகிமை உண்டு என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். பிடிபட்ட சில இளைஞர்களில் ஒருவர் தன்னுடைய மனைவிக்கு எழுதிய கடிதத்தில் இதைக் குறிப்பிட்டு இருக்கிறார். 'நாம் இதுபோன்ற காரியங்கள் செய்து மரணம் அடைந்தால், மரணலோகத்திலே நமக்கு எல்லா விதமான சுகமும் உண்டு. நம்முடைய லட்சியத்திற்காகப் பெறுகின்ற வெற்றி அது' என்று குறிப்பிட்டிருக்கிறார். இப்படி ஒரு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறது.

நபிகள் நாயகம் அழகாகச் சொல்லியிருக்கிறார். 'மதமாச்சரியத்திற்காகப் போரிடுவதும் நல்லதல்ல. அதற்காக மரணம் அடைவதும் நல்லதல்ல. அவர்கள் எல்லாம் நம்மவர்களும் அல்ல' என்று கூறியிருக்கிறார். இதை அந்த இளைஞர்கள் உணரவேண்டும். ஏதோ ஒரு காரியத்திற்காகப் பழிக்குப் பழிவாங்குதல் என்ற காரியத்திற்காக, மொத்த சமுதாயத்தையும் அழித்துவிடக் கூடாது. அப்படியே வாதத்திற்காகச் சொல்கிறேன். பழிவாங்குவது, பகை தீர்த்துக் கொள்வது என்றால் குறிப்பிட்ட ஒரு நபரையா பழி தீர்க்கிறோம் - பலி வாங்குகிறோம்? அல்ல. யாரையோ பழிவாங்குவதாக எண்ணிக்கொண்டு, அப்பாவி மக்கள், இதைப் பற்றியே தெரியாத மக்கள், இன்னும் சொல்லப்போனால் பாபர் மசூதி என்றால் என்னவென்று தெரியாதவர்கள் - அங்கே என்ன பிரச்சினை என்று பல பேருக்குத் தெரியாது. அப்படிப்பட்ட மக்கள் - தெருவிலே வியாபாரம் செய்து கொண்டு போகிறவர்கள், பால் விற்றுக்கொண்டு போகிறவர்கள், காய்கறி விற்றுக்கொண்டு போகிறவர்கள், தன்னுடைய அண்ணனையோ, தம்பியையோ பார்க்கச் செல்கின்றவர்கள், தாயைக் காணச் செல்கின்றவர்கள், சகோதரனைப் பார்க்கச் செல்கின்றவர்கள், குழந்தையை பள்ளிக்கு அனுப்புகின்ற தாயார், இப்படிப்பட்ட ஏழைபெரிய மக்கள், சாதாரண அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்படுகிறார்களே, அந்த நேரத்தில் அது நம்முடைய தாயாக இருந்தால், அப்படி இறந்தவர் நம்முடைய தந்தையாக இருந்தால், கொல்லப்பட்டது நம்முடைய குழந்தையாக இருந்தால் நம்முடைய மனம் எப்படித் துடிக்கும் என்று ஒரு கணம் எண்ணினால், இப்படிப்பட்ட தீய சிந்தனையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியும்.

**தீவிரவாதம் பற்றி மார்க்ரெட் தாட்சர்**

இந்த வெடிகுண்டுப் பிரச்சினையில் ஒரு அரசு எப்படி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதில் உறுப்பினர்கள் அத்தனைப் பேரோடும் சேர்ந்து நானும் இணைந்துகொள்ள விரும்புகிறேன். இதில் மாறுபட்ட கருத்து உடையவன் அல்ல நான். நான் ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன். மார்க்ரெட் தாட்சர், இங்கிலாந்து நாட்டினுடைய பிரதமராக இருந்தவர். இந்தத் தீவிரவாதத்தைப் பற்றி ஒன்று சொல்லியிருக்கிறார்.

"If the terrorists succeed once, it is a great victory for them. But, we have to succeed everytime against their activities".

தீவிரவாதிகளை அடக்க முனையும் அரசு 100 தடவை முயன்றாலும், அந்த 100 தடவையும் வெற்றி பெற்றாக வேண்டும். அதாவது 100 தடவை முயன்றாலும் 100 தடவையும் வெற்றிபெற்றாக வேண்டும். ஆனால், தீவிரவாதிகளோ அவர்களது முயற்சியில் ஒரு முறை வெற்றி பெற்றாலும் அதைப் பெரும் வெற்றியாகக் கருதுவார்கள். அதையும் மனதிலே வைத்து இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதை உறுப்பினர்கள் அனைவருக்கும் மிகுந்த பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தமிழின் இனிமை

*உலகத்தில் மூத்தமொழி தமிழ்மொழி. மொழி என்ற தமிழ்ச்சொல்லில் பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகிய இரண்டும் உள்ளது. அத்தகைய உயர்வு பெற்ற மொழி தமிழ்மொழி.*

*தமிழ் என்பதில் வல்லினம், மெல்லினம், இடையினம் மூன்றுமே இருக்கின்றன. 'கசடதபற' என்ற வல்லினத்தில் "த" என்ற எழுத்து உள்ளது.*

*''ஙஞணநமன'' என்ற மெல்லினத்தில் உள்ள 'ம' என்ற எழுத்து, மி யாக மாறியது; "யரலவழள" என்ற எழுத்து 'ழ்" இடையினத்தில் உள்ள "ழ" ஆக மாறியது. ஆகவே மூன்று இனமும் சேர்ந்த மொழியே நம் தமிழ்மொழி. இந்தப் பெருமை வேறு எந்த மொழிக்கும் இருப்பதாகத் தெரியவில்லை!*

*- தமிழ் இசைச் சங்கத்தின் 47ஆம் ஆண்டுவிழா (21.12.81)வில் சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில் முதலமைச்சர் கலைஞர் பேசியது.*

*செய்தி. **ஐ.எஸ். ஆனந்தராஜ்***

இன்னும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற பல தலைவர்கள் குறிப்பிட்டுள்ள பல்வேறு கோரிக்கைகளுக்கெல்லாம் அடுத்து வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே அதற்கான விளக்கங்களைத் தருவேன். எவை எவை ஏற்றுக் கொள்ளப்பட்டவை; எவை எவை ஏற்றுக்கொள்ள முடியாதவை என்பதையும் அதில் நீங்கள் காணலாம்.

ஆதிதிராவிடர்களுக்கு மொத்த வருவாயிலே 25 சதவிகிதம் தரப்பட வேண்டும் என்று, நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். 25 சதவிகிதம் என்பது, பார்ப்பதற்கு; அவ்வளவுதானே கேட்கிறார்; குறைவாகத்தானே கேட்கிறார்; கொடுத்தால் என்ன; என்று கேட்கத் தோன்றும். ஆனால் நான் சொல்ல விரும்புகிறேன்; வருவாயிலே 50 சதவிகிதம் எங்கே போகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். நாளைக்கு அவர்களுக்காகப் பேச இருக்கிறார்கள் உறுப்பினர்கள். அரசு அலுவலர்களுக்கு நம்முடைய வருவாயிலிருந்து 50 சதவிகிதம் ஊதியமாகச் செல்கிறது. 25 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு என்று ஒதுக்கி விட்டால், மிச்சம் 25 சதவிகிதம்தான் மற்றவர்களுக்கு என்றால், அதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். 25 சதவிகிதமோ அல்லது அதற்குக் குறைவானதோ ஆதிதிராவிடர்களுக்கு நாம் ஒதுக்குகிறோம் என்றால், மிச்சம் இருக்கின்ற எல்லாத் தொகையும் ஆதிதிராவிடர் அல்லாதவர்களுக்குப் போய்ச்சேருவதாக எண்ணிக்கொள்ளக் கூடாது. மிச்சத்தொகையும் ஆதிதிராவிடர்களுக்கும் சேர்த்துத்தான். சாலை போட்டால் அதில் ஆதிதிராவிடர்களும் நடக்கிறார்கள். அல்லாதவர்களும் நடக்கிறார்கள். குளம் வெட்டினால், அதில் ஆதிதிராவிடர்களுக்கும் உரிமை இருக்கிறது. சில இடங்களில் உரிமை இல்லாமல் இருக்கலாம். அந்த உரிமையைப் பெற்றுத் தரவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

> ## அட்டைப்படங்கள்
>
> *முதலாம் அட்டையில்...*
>
> மேதகு தமிழக ஆளுநர் செல்வி. பாத்திமா பீவி அவர்கள், 18.3.98 அன்று சட்டப்பேரவையில் தொடக்க உரையாற்றுதல்.
>
> *இரண்டாம் அட்டையில்...*
>
> நீலகிரி மலையின் வடக்கு எல்லையாக ஓடிவரும் மேயாறு நதி கலக்கும் இடத்தருகே அமைந்துள்ள பவானிசாகர் அணையின் அழகிய தோற்றம்.
>
> *கடைசிப்பக்க அட்டையில்...*
>
> சென்னையில் 13.3.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னாள் முதல்வர் பெரியவர் எம். பக்தவத்சலம் அவர்கள் நினைவிடத்தைத் திறந்துவைத்தார்.

அதைப்போல எல்லாவிதமான நன்மைகளிலும், அவர்களும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில், எல்லா வகைகளிலும் ஆதிதிராவிடர்களுக்குப் பங்கு இருக்கிறது. எனவே, தனியாக அவர்களை மேலும் உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான், பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிட மக்களுக்கு என்று, சில சலுகைகளுக்காக, அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இந்த ஒதுக்கீடே தவிர, இதுவேதான் அவர்களுக்கு, இதிலிருந்து மேலே ஏதும் அவர்களுக்குத் தர முடியாது என்று நூல் கட்டி உச்ச வரம்பு வைத்து இந்த நிதி ஒதுக்கப்படவில்லை.

### பேருந்துக் கட்டணம் குறைப்பு

இறுதியாக, இந்த அவையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டிப்பாகக் கூடப் பேசினார். இந்தப் பேருந்துக் கட்டணத்தைப் பற்றி எல்லோரும் பேசியிருக்கின்றார்கள். இது பற்றிப் பல விளக்கங்கள் நான் அளித்திருக்கின்றேன். ஏற்கெனவே 14 காசு என்று இருந்ததை 22 காசு என்று உயர்த்தப்பட்டது. பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கு ஏற்ப 22 காசு என்பது 20 காசாகக் குறைக்கப்பட்டது. அப்படி 20 காசாகக் குறைக்கப்பட்ட நிலையிலும்கூட நமக்கு ஏற்பட்ட நஷ்டம், போக்குவரத்துத் துறைக்கு, சுமார் ரூ.280 கோடி. அவர்களுக்கா நஷ்டம்? அரசுக்கு நஷ்டம். அரசு கொடுக்க வேண்டும் அவர்களுக்கு. நாம்தானே கொடுக்க வேண்டும்.

20 காசு என்று நம் மாநிலத்திலே நிர்ணயித்தபோது, ஆந்திராவிலே, நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொல்வார்கள், அங்கே 36% கொடுக்கிறார்களே, இங்கே கொடுத்தீர்களா என்று, அதற்கு மாத்திரம் அதை Campare (ஒப்பீடு) செய்வார்கள். பழனிசாமி, சுப்பராயன் எல்லோரும் அதை 'கம்பேர்' செய்வார்கள். அதை இங்கே கொடுப்பீர்களா என்று கேட்பார்கள்.

ஆந்திராவிலே, கேரளாவிலே, கர்னாடகாவிலே, ஒரு கிலோ மீட்டருக்கு 22 காசுகள், அதைவிட இங்கே 2 காசுகள் குறைவு. இராஜஸ்தானிலே கிலோ மீட்டருக்கு 24 காசு. உ.பி.பெரிய மாநிலம் - அதிலே 27.80 காசு. அதைவிட நாம் 7.80 காசு குறைவாக இருக்கிறோம். இருந்தாலும்கூட, தொடர்ந்து ஆளுநர் உரையின் விவாதத்திலே அத்தனைப் பேரும் பேசி, ஆளுங்கட்சி உறுப்பினர்களும் என்னை அரித்தெடுத்த காரணத்தினால், பேருந்துக் கட்டணம் கிலோ மீட்டருக்கு மேலும் 2 காசு குறைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்பற்றி எல்லோரும் பேசியாகிவிட்டது. கணேசன் உட்பட எல்லோரும் பேசியாகிவிட்டது. எல்லாக் கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். ஆகையினால் பொதுமக்களுடைய நன்றி, எனக்கு மாத்திரம் அல்ல; உங்கள் எல்லோருக்கும் சாரும் என்று கூறி, கி.மீட்டருக்கு கட்டணம் 18 காசாக ஆக்கப்படும்; அதற்கேற்றபடி, மற்ற நிலைகள் எல்லாம் ஆக்கப்பட்டு, அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, நல்ல கருத்துக்களைக் கூறிய உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பேரவை உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பதில் அளித்து உரையாற்றினார். ★

மூந்தின நாள் மாலை
அழைத்துப்போவாள்
அம்மா கடைவீதிக்கு.

தொட்டால் சில்லென்று
ஈரமாய் மண்வாசனையாய்
விதவிதமான பிள்ளையார்.

பேரம் பேசி
கண்ணுக்குக் குன்றிமணியை
மறக்காது வாங்கிக்கொண்டு
பிள்ளையார் குடையோடு
எனக்கும் ஒன்றுக்காகக்
கெஞ்சி சாதித்து -

சீக்கிரமாய் எழுந்திருக்க
சீக்கிரமாய் தூங்கி
பாட்டியை நச்சரித்து
இராத்திரியே எடுத்துவைத்த
நகையையும் துணியையும்
நினைத்துக்கொண்டே விழித்து -

அலங்கார அழகைப் பீற்றிக்கொள்ள
அவரை அடுத்தவீட்டுக்கு
எடுத்துப்போகையில்
வாங்கிய அடியை
பூஜை அறையில் சுருண்டு
அழுது புகார் பண்ணி -

ஐந்து நாள் கழித்து
கிணற்றில் போடும்போது
லீவுக்கு வந்த
சேது ஊருக்குப்போகும்
சோகம் அப்பும்.

அடுக்குமாடியில்
பிள்ளையார் கரைக்க இடமற்று
கடலுக்கு ஓடும்போது
பூதாகாரமாய் வானேந்திய
பிள்ளையார்கள் பயமுறுத்துகிறார்கள்
என் மகனை!



**கனிமொழி**

தமிழறிஞர்கள், கவிஞர்கள், தமிழிலே தனித்திறமை பெற்றவர்கள் என மூவர் (திரு.ஏ.எஸ்.ஏ.சாமி, திரு.சாவி, திரு.ஈரோடு தமிழன்பன்) தேர்ந்தெடுக்கப்பட்டு, அண்மையில் அவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கப்பட்டது 'முரசொலி அறக்கட்டளை' விழாவில்.




நம் தமிழ்நாட்டின் ஆளும் கட்சியாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர் வாளாக...கூரிய வேலாக...ஏச்சுப் பேச்சுகளைத் தாங்கி ஈடு கொடுக்கும் கேடயமாக...வெற்றி வீரர்களின் பாசறைப் பிரகடனமாக என்றும் திகழ்ந்திடும் நாள் ஏடாகும் 'முரசொலி'; 1942ல் தமிழர் திருநாளான பொங்கல் நாளன்றுதான் 'முரசொலி' ஏடு முதன்முதல் திருவாரூரில் இருந்து 'சிங்கிள் டெம்மி' அளவினதாக வெளியிடப்பட்டது.

இன்றைய தினம் இலட்சோப இலட்சம் பேர் படித்து மகிழ்ச்சியும், எழுச்சியும் பெற்றிடும் பெருமைமிக்க அந்த 'முரசொலி' நாளேட்டின் பெயரில், 1992ஆம் 'ஆண்டில் துவக்கப்பட்டதே அந்த அறக்கட்டளை. அதாவது, தஞ்சை மாவட்டம் - திருவாரூரில், நான்கு பக்கக் கையேடாகத் தொடங்கப்பட்டு அந்த ஏட்டின் பணியும் குறிக்கோளும் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி, மூங்கில் போல் முசியாது உள்ளதன் அடையாளமாக விளங்கிய பொன்விழா ஆண்டில் அறிவிக்கப்பட்ட அறக்கட்டடைதான் அது.

தெள்ளிய ஆவின் சிறுபழத்தொரு விதையாபானது, அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு மன்னரும் இருக்க நிழல் தரும் ஆலமரம் ஆகும் என்பார்களே ? அப்படி-இன்றைய தினம் எழுந்து, தழைத்து, பரவி-மறவன் மடல், Rising Sun, முத்தாரம், குங்குமம், குங்குமச்சிமிழ், வண்ணத்திரை போன்ற விழுதுகள் எல்லாம் விட்டுச் செழித்திருக்கிறது 'முரசொலி'.

அந்த ஆலமர நிழலில் - அதுவும் 'நெருக்கடி காலம்' என்கிற சோதனைச் சூறாவளி வீசிய காலகட்டம் உட்பட - ஓர் ஆறாண்டுக் காலம் இருந்து பணியாற்றிய அனுபவம் எனக்கு உண்டு.

முரசொலி என்ற பெயரோடு இன்று வெளியே தெரிகின்ற மாபெரும் ஆல விருட்சத்திற்கு எங்கே விதை ஊன்றப்பட்டது ? எப்படியெல்லாம் அதன் வேர் படர்ந்தது என்று மட்டும் அந்தத் தெள்ளிய ஆலின் சிறுபழத் தொரு விதையான 'முரசொலி' - வார ஏடு பற்றி மட்டுமே - 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உள்ளார்ந்த உவகையோடும் பணிவோடும் இங்கே விளக்கிடுகின்றேன்.

### 'மாணவர் நேசன்' தோற்றம்

கோடையிலே இளைப்பாறிக் கொள்ள வகை கிடைத்த குளிர் தருவாக... தரு நிழலாக... நிழல் கனிந்த கனியாகத் தமிழகத்தே விளங்கிய **தந்தை பெரியார்** அவர்களை நீங்கள் அறிவீர்கள்.

ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீராக, உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலராக... தமிழகம் மேம்படத் தன்னலம் கருதாது வாழ்ந்து மறைந்த **அறிஞர் அண்ணா** அவர்களை நீங்கள் அறியாதவர்கள் அல்ல.

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாக, மென்காற்றில் விளை சுகமாக, அந்தச் சுகத்திலுறும் பயனாக இன்றைய தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பிலே அமர்ந்திருக்கும் கலைஞர் மு.கருணாநிதி அவர்களையும் 'உள்ளங்கை உருளைக்கிழங்காக'த் தமிழறியும், தமிழினம் அறியும், தமிழகம் அறியும்.

தந்தை பெரியார் அவர்களையும், அறிஞர் அண்ணா அவர்களையும், கலைஞர் மு.கருணாநிதி அவர்களையும் தள்ளி வைத்துவிட்டு, யாராலும் திராவிட இயக்க வரலாற்றை எண்ணிப் பார்க்கவோ, எழுதிக்காட்டவோ முடியவே முடியாது.

நமது நாட்டின் முதலமைச்சராக இருந்து, நம்மையெல்லாம் இன்னும் இரண்டாண்டில் இருபத்தோறாம் நூற்றாண்டை நோக்கிக் கரம் பிடித்து அழைத்துச் செல்லும் மாபெரும் பொறுப்பில் இருக்கின்ற கலைஞர் அவர்களை ஆசிரியராகக் கொண்டுதான் 'முரசொலி' வாரஏடு, சோழ மண்டலத்தில் மனுநீதிச் சோழனுக்குப் பெருமை சேர்த்த திருவாரூரில் இருந்து வெளிவரலாயிற்று.

### மாணவர் சங்கம்

திருவாரூரை அடுத்துள்ள திருக்குவளை அவருக்குச் சொந்த ஊர். அப்போது சின்னஞ்சிறு கிராமம்; இப்போது தாலுக்கா. அங்கிருந்து அவர்கள் குடும்பம் அருகிலிருந்த நகரமான திருவாரூருக்குக் குடிபெயர்ந்ததே இவருடைய கல்வி வளர்ச்சி கருதித்தான். ஆனால் தோசை ஊற்றப்போய், ஊத்தப்பம் ஆன கதையாயிற்று பெற்றோரின் அந்த எண்ணம்.

கலைஞர், துள்ளி விளையாடும் பள்ளிப்பருவத்திலேயே - தமிழ் வளர்ச்சியில், சமூக சீர்த்திருத்தக் கருத்துகளில், தமிழினத்தாரின் தலைநிமிர்வில், பகுத்தறிவுக் கொள்கைகளில் - தனியாக நாட்டம் கொண்டார். அவற்றின் வளர்ச்சிக்காகப் பறந்து பறந்து பணியாற்றினார்.



**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை, டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் ஆகியவை இணைந்து நடத்திய 'திராவிட இயக்க ஏடுகள்' கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை.**

**- பி.எல்.இராஜேந்திரன், எம்.ஏ.,**

அந்நாளில், அவ்வூரிலிருந்த காங்கிரசாரும், கம்யூனிஸ்ட் பெரியவர்களும் இப்படியொரு துடிப்பான இளைஞன் நம்பக்கம் இருந்தால் நன்றாயிருக்குமே என்று குறிவைத்துச் சிந்தித்தார்கள்; அவர்கள் விரித்த வலையில் சிக்காமல், தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்க நிழலில் சுகம் காண அல்ல; புயல் பல கடந்து புதிய தமிழகம் காணவந்தார் இளைஞர் கலைஞர்.

' சங்கங்களால் - நல்ல
சங்கங்களால் - நாம்
சாதித்தல் கூடும்
பெரும் பெரும் காரியம் '

- என்று புரட்சிக்கவிஞர் பாடினாரே ? அதை உணர்ந்து, உருவாக்கப்பட்ட சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தின் தலைவரானார் கலைஞர்.

'சங்கம்' என்றிருந்தால் என்னதான் மாணவர் சங்கமானாலும் கூட, அதன் நோக்கம் கொள்கை பற்றியெல்லாம் மற்றவர்கள் அறிந்திடச் செய்ய மேடை மட்டும் போதுமா ?...ஏடொன்றும் தேவைதானே ?

எனவே - 1941ல் **'மாணவர் நேசன்'** என்றோர் கையெழுத்து ஏடு தொடங்கினார் முதன் முதலில்.

இன்னும் அது பற்றித் தெளிவாகச் சொல்லவேண்டுமேயானால், 15ஆம் வயதிலேயே 'சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தின் தலைவராக விளங்கிய கலைஞர் அவர்கள்-தாமே தொடங்கி, நடத்திவந்த அந்த 'மாணவர் நேசன்' பற்றி இவ்வாறு எழுதியிருக்கிறார்:

**'மாணவ நேசன்' என்பது நான் நடத்திய கையெழுத்து ஏடு; நான் பள்ளியில் நடத்திய கையெழுத்து ஏடுகளை...ஒரு சமயம் ஒருவர்தான் படிக்க முடியும்.**

**'நான் நடத்திய ஏடு, மாதத்திற்கு இரண்டு வெளியீடு; ஒவ்வொரு வெளியீட்டிலும் - எட்டுப் பக்கங்கள்; பிரதிகளோ, ஐம்பதுக்குக் குறையாது; ஐம்பது பிரதிகளையும்...நானும் சில நண்பர்களும் மட்டுமே உட்கார்ந்து "காப்பி எடுப்போம்; 'டெம்மி பேப்பர்' செலவை மட்டும் வசூல் செய்துகொள்வோம், உழைப்பும் கட்டுரையும் இனாம்'.**

### பாவேந்தர் கேலியும் பாராட்டும்

இந்த 'மாணவர் நேசன்' ஏட்டினுக்குப் **புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரிடம்** வாழ்த்துரை வழங்கிடுமாறு கேட்கப்பட்டது. அதற்குப் பாவேந்தர் அப்போது அளித்த பதில் என்ன தெரியுமா ?

'கைராட்டையால் நாடு முன்னேறும் என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ, அவ்வளவு பைத்தியக்காரத்தனம் இந்தக் கையெழுத்துப் பத்திரிகையும்' - என்று அவர் எழுதினார். புரட்சிக் கவிஞரல்லவா ?

ஆனால், கலைஞர் அவர்கள் அதைக் கண்டு மனம் சோர்ந்து விடவில்லை.

அந்தப் பதிலையும், பத்திரிகையில் வெளியிட்டு - 'சிறுதுளி பெருவெள்ள[illegible]வர்களாகி[illegible] நாங்கள் நிரூபித்துக்[illegible]வோம்' என்று அவருக்குப் பதில் எழுதினார்.

ஆனால், அதே ஏட்டினுக்கு, ஆறாம் உயர்வகுப்பிலிருந்த கலைஞர் எழுதிக் கேட்டுக் கொண்டதன் பேரில், 21.11.1942ல் அதே புரட்சிக்கவிஞர் அவர்கள் ஒரு வாழ்த்துப் பாவே அற்புதமாக எழுதியனுப்பியிருந்தார்.




'தண்பொழிலில் குயில்பாடும் திருவா ரூரில்
தமிழ்நாடு தமிழ்மாண வர்மன் றம்காண்;
வன்மையோடும் உண்மையொடும் வாழ்ந் திடும்காண்;
மக்களிடை எழுச்சிக்கு மருந்தா கும்காண்;
கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்
கலைமறந்த நெஞ்சத்தில் ஒளியைத் தும்காண்;
புண்வாய்ந்தோர் அல்லர்காண்; திருவா ரூரின்
புலிஇளைஞர் காண்; தோள்கள் பூரித் தார்காண் !

- என்று தொடங்குவது இது முதலான அந்த எண்சீர் விருத்தக் கவிதைகள் மூன்றும்.

1943ல், முரசொலியின் முதலாம் ஆண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அப்போது படித்துக்கொண்டிருந்தார்கள் **பேராசிரியர் க.அன்பழகன், நாவலர் இரா.நெடுஞ்செழியன்** ஆகியோர்; அரும்பாடுபட்டு அவர்களை வரவழைத்தே அந்த இனிய விழாவை நடத்திப் பெருமை கொண்டார் கலைஞர்.

### கதையும் கருவும்

விழாவுக்கு வந்திருந்த முக்கிய விருந்தினர்களைத் திரும்ப அனுப்பிவைக்க வழிச்செலவுக்குப் பணம் கொடுத்தனுப்ப வேண்டுமல்லவா ? - அதற்குப் பணம் எங்கெங்கோ முயன்றும் எதுவும் கிடைக்காத நிலைமை, வீட்டிலிருந்த வெள்ளிச் சந்தனக் கிண்ணமொன்றை எடுத்துப்போய் அடகு வைத்துப்பணம் வாங்கியே அவர்களை வழியனுப்பி வைத்திருக்கிறார் கலைஞர்; இத்தனைக்கும் திருவாரூருக்கும் சிதம்பரத்திற்கும் ஐந்தாறு ரூபாய்தான் கட்டணம்!

பிற்காலத்தில் அந்த 'வெள்ளிச் சந்தனக் கிண்ணமே' அவரெழுதிய கதையொன்றின் கருப்பொருளாயிற்று.

'முரசொலி' சென்னைக்கு வந்தபின் நடந்த வேறோர் சம்பவமும், இதேபோல் கதையானதையும் இங்கே குறிப்பிட்டால் சுவையாக இருக்கும். 'முரசொலி' அலுவலகத்தில் பணிபுரிந்த அச்சுக்கோப்பாளர் ஒருவருக்கும் வேறோர் இளம் பெண்ணுக்கும் இடையே காதல். தினசரி இருவரும் கடிதம் எழுதிக் காதலை

வளர்ப்பது என்ற உடன்படிக்கை போலும். வேலை மிகுதியால் அவன் அவளுக்கு இரண்டு நாள் கடிதம் போடவில்லை போலிருக்கிறது. ஊடலோடு அவள் எழுதிய கடிதம், தவறுதலாக அலுவலகக் கடிதங்களோடு ஆசிரியர் கலைஞர் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதை அவர் படிக்கப் போய்த்தான் ஒரு திரைப்படத்தில் - ஒருவன் அடிக்கடி ஒருத்திக்குக் கடிதம் எழுதுவான்; அவளுக்கோ படிக்கத் தெரியாது; தபால்காரர் அதைக் காதல் ரசம் சொட்டப் படித்துக் காட்டுவார்; அவளோ எழுதியவனை மறந்துவிட்டு, படித்துக்காட்டுபவன் மீதே காதல் கொள்ளுவாள் - என்பது போல் ஒரு காதல் காட்சி உருவாக்கப்பட்டது.

இவ்வாறான பல சம்பவங்கள் கலைஞரின் கற்பனை வளத்தோடு கதையான கதைகள் பல உண்டு; அவற்றைப் பிறகு பார்ப்போம்.

நிதி நெருக்கடி முதலான பல காரணங்களாலே, பிறகு ஏழெட்டு மாதங்களிலேயே 'மாணவர் நேசனை' நிறுத்தும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.



## அறிஞர் அண்ணா அறிமுகம்

இதற்கிடையில், 'முரசொலி' பத்திரிகை தொடர்பான - அதன் ஆசிரியர் தொடர்பான செய்தி என்பதனாலே - **அறிஞர் அண்ணா** அவர்களுக்குத் தம் எழுத்துத் திறமை மூலமாகக் கலைஞர் அவர்கள் அறிமுகமான செய்தி ஒன்றையும் இங்கே நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

அப்போது, காஞ்சிபுரத்திலிருந்து அறிஞர் அண்ணா அவர்கள், **'திராவிட நாடு'** ஏட்டைத் தொடங்கி நான்கைந்து வாரமே ஆகியிருக்கும். அந்த ஏட்டினுக்கு **'இளமைப் பலி'** என்றோர் கட்டுரையை பதினேழு வயது மாணவராக இருந்த கலைஞர் எழுதியனுப்பியிருந்தார். 'திராவிடநாடு' ஏட்டிலும் அது அச்சாகிவிட்டது.

தம் எழுத்தை அச்சில் - அதுவும் அண்ணா நடத்தி வந்த ஏட்டில் பார்த்ததும் இளம் கலைஞரின் நெஞ்சில் ஆனந்த அலைகள் ஆர்ப்பரித்தெழுந்தன; தனது கட்டுரை வெளியாகியிருந்த 'திராவிட நாடு' ஏடு யார் கையிலெல்லாம் இருக்கிறது ? யாரெல்லாம் அதைப் படித்து இன்புறுகின்றனர் ? என்று வீதி வீதியாகப் போய்ப் பார்த்து, படித்தவர்கள் அளித்த பாராட்டால் அவரடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அதற்கடுத்த வாரமே ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்கத் திருவாரூர் வந்த அறிஞர் அண்ணா அவர்கள், கலைஞரை அழைத்து வரச்சொன்னார்; நேரில் பார்த்த பிறகுதான் அவர் ஒரு மாணவர் - இளைஞர் என்று தெரிந்திருக்கிறது. "முதலில் நன்றாகப் படி - பிறகு கட்டுரையெல்லாம் எழுதலாம்" - என்று முதுகில் தட்டிக்கொடுத்துப் பாராட்டி அறிவுறுத்திவிட்டுப் போய்விட்டார்.

இவர் விடவில்லை; மீண்டும் ஒரு கட்டுரை **'பகுத்தறிவு பரமசிவம்'** - என்று 'திராவிட நாட்டுக்கு' எழுதியனுப்பினார். ஆனால், அது அச்சாகவில்லை; ஆனாலும், கலைஞரின் எழுத்தார்வம் குறைந்துவிடவில்லை - எழுதிக் குவித்துக்கொண்டேயிருந்தார்.

எப்படி வேரை மறந்துவிட்டு மரத்தை விமர்சிக்க முடியாதோ - உருவத்தை விட்டுவிட்டு நிழலை விமர்சிக்க முடியாதோ, அதேபோலத்தான் கலைஞரை விட்டுவிட்டு 'முரசொலி'யை விமர்சிப்பதும் இயலாது; ஆகவே, இப்படிப்பட்ட சில சிறுசிறு சம்பவங்களையும் இடையிடையே நான் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும், விரல் இல்லாமல் நகமா ?

'மாணவர் நேசன்' நிறுத்தப்பட்டதை முன்னே பார்த்தோம்; எனினும், அதன் பின்னாலே - 'சட்டி சுட்டதடா, கைவிட்டதடா' என்கிற முடிவுக்குக் கலைஞர் அவர்கள் வந்தாரில்லை. **'தொந்தரவுக்குள்ளே, தோழி சுகம் கண்டேன்'** என்ற வகையில், அப்போதுதான் **'முரசொலி' என்கிற துண்டுப் பிரசுரமாவது** தொடங்கலாம் என்கிற எண்ணம் உதயசூரியன்போல் உதித்தது அவர் நெஞ்சில்.

அந்த ஆணித்தரமான எண்ணம், 1942ல் உருப்பெற்றது; ஆம்; 'முரசொலி' துண்டுப்பிரசுரம், நான்கே பக்கங்கள் கொண்டதாகத் திருவாரூரில் இருந்து வெளிவரலாயிற்று.

**'முரசொலி துண்டறிக்கை வெளியீட்டுக் கழகம்'** என்கிற அமைப்பு அதை வெளியிடுவதாக வெளி உலகுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு மூலவித்து கலைஞரே எனினும், அவர் அப்போது மாணவரல்லவா!

'முரசொலி' என்கிற தலைப்பையொட்டி, அதில் **தந்தை பெரியார்** அவர்களின் மார்பளவுப் படம் வெளியிடப்பட்டிருக்கும்; அதன் கீழே - **'செயலாளர்: தென்னன் - பொருளாளர்; டி.எஸ்.இராசகோபால் எழுத்தாளர்: சேரன்** என்று போடப்பட்டிருந்தது. அது, இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த காலமாதலால் எல்லாவற்றுக்கும் மேலே மையத்தில் 'V' என்ற வெற்றியைக் குறிக்கும் ஆங்கில எழுத்து காணப்படும்.

ஆசிரியர் மு.க. என்றோ, மு.கருணாநிதி என்றோ கூட, அவர் அந்த முதல் பக்கத்தில் போட்டுக்கொள்ளவில்லை; **'சேரன்'** என்கிற புனைபெயரிலேயே அதில் தன் புரட்சிக் கருத்துக்களைப் புதுமைத் தமிழ் நடை எழுத்தோவியங்களாக வெளியிட்டு படிப்போர் மனதைப் பண்படுத்தி வந்தார்.

காரணம்-பள்ளி இறுதித் தேர்வை எதிர்நோக்கியிருந்த மாணவப் பருவத்தினர் என்பதால், சொந்தப் பெயரை வெளியிட்டுக்கொள்ள இயலாத நிலை; அதனால்தான் 'சேரன்'. இத்தனை பத்திரிகைப் பிரதிகள் என்றில்லை; நிதி நிலைக்கேற்ற எண்ணிக்கையில் 'முரசொலி' வார ஏடு அச்சிடப்பட்டது. பக்கங்களும் அவ்வாறுதான்; சில சமயம் 8 பக்கம்; ஓரணா. சில சமயம் 12 பக்கம்: விலை ஒன்றரையணா.

5.10.1942 இரண்டாம் ஆண்டாகும்; அப்போது அச்சடித்து வெளியிடப்பட்ட 'முரசொலி' 7வது துண்டறிக்கையின் முதல் பக்கத்தில், கலைஞர் அவர்கள் 'சேரன்' என்ற பெயரிலே-சிதம்பரத்தில் நடைபெறவிருந்த வருணாச்சிரம மாநாட்டைக் கண்டித்து - **'வருணமா ? மரணமா ?'** என்ற தலைப்பிலே எழுதியிருந்த, கடுமையான புயல்வேகப் புரட்சிக் கட்டுரையானது பெரும்பான்மை மக்களால் பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டது; இளைஞர் பலரால் அப்போதே மனப்பாடம் செய்து பலர் நடுவே பேசிக்காட்டி எழுச்சி பெறச்செய்தது.

அப்போது-இதுபது வயது இளைஞராக இருந்த கலைஞர் எழுதிய அந்த 'வருணமா ? மரணமா ?' கட்டுரையின் துவக்கம்

இது:

**'தில்லையிலே - ஆம் - தீட்சிதர் கோட்டையிலே-தீனதயாபரன், கான முழக்கத்துடன் காலைத் தூக்கிக் காளியிடம் நடனம் செய்த கலைப் பகுதியிலே-புனிதர் மாநாடாம்! பூரி தட்சணையாம்! புண்ணியக் கூட்டமாம்! புல்லர்கள் உள்ளவரை நல்லது ஏது ?!'...**

- என்று ஏகடியத்தோடு தொடங்கும் இந்தக் கட்டுரை எழுதியதாலேயே, கலைஞரை சிதம்பரத்திற்குள் வரக்கூடாதெனத் தடைவிதித்தது அந்நாள் அரசு!

அந்த ஏட்டின் கடைசியில் -

**'விரைவில் நன்கொடை அனுப்பி<br>வைத்தால், முரசொலி உங்களை<br>நாடி வரும் - அடுத்த ஒலி அக்டோபர் 25ல்'**

**- என்றோர் அறிவிப்பு..**

'திராவிடர் தலைவர் பெரியார்<br>அவர்களைத் தலைவராகக் கொண்ட<br>திராவிடர் கழகத்தில் நீங்கள்<br>உறுப்பினராகச் சேர்ந்து விட்டீர்களா ?'

- என்று ஒரு விளம்பரம்.

அதற்கும் கீழே - நாகையில் நமது **'பழனியப்பன்'** நாடகம் இம்மாதம் நடைபெறும் - என்கிற வரி விளம்பரம்.

இவ்வளவுக்கும் கீழே, அது கடைசிப்பக்கம் என்பதால், **'இம்பிரிண்ட்', கிருஷ்ணா பிரஸ், திருவாரூர்.**

இந்த கிருஷ்ணா பிரஸ் அச்சகத்தின் உரிமையாளரான **திரு டி.ஜி.நாராயணசாமிப்பிள்ளை** கலைஞர்பால் மிகுந்த அன்பு கொண்டவர்; இன்னொரு விஷயம் - அவர் ஒரு பழுத்த காங்கிரஸ்காரர்.

அடுத்தடுத்து வந்த ஏடுகளில் 'முரசொலி இலவச வெளியீடு-நன்கொடை ரசீது' விளம்பரமும் இடம் பெற்றிருந்தது.

**1942 முதல் 1944 வரைதான்** அரசியல் புயலாக, இலக்கியத் தென்றலாக, கதைக் களஞ்சியமாக இந்த இதழ் வெளிவந்தது.

உலகப்போர்க் காலத்தில் சரியான தாள் கூட அச்சிடக் கிடைக்காது; அந்த நெருக்கடியிலும் வெளியான 'முரசொலி' பற்றி அறிஞர் அண்ணா அவர்களே எழுதியது இது:

**'முரசொலி வண்ணம் கொண்டு, உங்கள் இல்லம் வருகிறது. இதன் முன்னாள் வடிவம் அறிவீரா ? படித்து மடித்தால் பொடியாகும். பிரித்துப் பார்த்தால் எழுத்துக் கலையும் என்றெண்ணத்தக்க விதத்தில், துண்டு வெளியீடாகத் திருவாரூர் மாணவரிடையே உலவிற்று அன்று! 'ஒவ்வொரு நாளும்' 'முரசொலி' பரணி பாடுகிறது. அதிலே காணப்படும் திருப்பள்ளி எழுச்சி, தமிழக மாந்தர்களைத் தட்டி எழுப்புகிறது. அது கேட்டிடும் வினாக்களுக்கு விடை கூற இயலாது ஆதிக்கக்காரர்கள் திணறுகிறார்கள்.**

**"அந்த 'முரசொலி' சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம்.<br>முரசு ஒலிக்கிறது! படை நடக்கிறது! பகைவர் பதைக்கின்றனர்!"**

**- அறிஞர் அண்ணா**

கலைஞரின் நாடகத்துறை-திரைப்படத்துறை-ஈடுபாட்டு ஆர்வம் காரணமாக, இடையிலேயே நிறுத்தப்பட்டது முரசொலி துண்டறிக்கை. பிறகு - 14.1.1948 முதல்தான் அது மறு ஜென்மம் எடுத்தது.

**'பெரியார் ஆண்டு'** என்கிற காலக்கணக்கீட்டை முதன் முதல் அறிமுகம் செய்த பெருமைமிக்கது 'முரசொலி'தான். இந்தப் புதிய வார ஏடு வெளியீட்டு விழா, **பாவலர் பாலசுந்தரம்** அவர்கள் தலைமையில் திருவாரூரில் நடைபெற்றது. **கரந்தை எஸ். சண்முக வடிவேலு** அவர்கள் முதல் இதழைப் பெற்றுக் கொண்டார்.

**கருணை எம்.ஜமால்** என்பவருக்குச் சொந்தமான **'கருணாநிதி மின்னியக்க அச்சகத்தில்'**தான் இந்த வார ஏடு திருவாரூரில் அச்சிடப்படலாயிற்று; அவரும் கலைஞரின் தோழரே எனினும், ரூபா அணா பைசாவில் கறார் பேர்வழி அவர்.

அந்த ஏட்டின் முன்பக்கத்தில் இருந்தவை பற்றி மட்டும் இங்கே விளக்குகிறேன்.

Reg. No.M...<br>விலை அணா 1

முரசொலி

**முரசு 1, திருவாரூர், பெரியார் ஆண்டு 69, தை 1 (14.1.48) புதன்கிழமை ஒலி-1**

- இப்படித் தொடங்கும் முதல் பக்கத்தில், 'முரசொலி' என்கிற சிவப்பு எழுத்துத் தலைப்பும் அதன் கீழே அந்த எழுத்தானது, பலமாக அடிக்கப்படும் முரசிலிருந்து கிறம்புவது போன்ற படமும் அமைந்திருந்தது.

தலைப்பில் கால்வாசி இடத்தில் இதெல்லாம் 4½ அங்குலத்தில் முடிந்துவிட, அதையடுத்து, ஒரு விளம்பரம்-2 அங்குலத்தில் இருந்தது -

'செல்வம் சிற்றுண்டி உணவு நிலையம், பஸ்ஸ்டாண்டு, விஜயபுரம், திருவாரூர் S.Rly. நண்பர்கட்குப் பொங்கல் நல்வாழ்த்து. தங்கள் அன்பும் ஆதரவும் என்றென்றும் அளிக்கக் கோரும் எ.முத்துகிருட்டிணன், உரித்தாளர்.<br>- என்பதே அந்த விளம்பரம் ஆகும்.

> *அடங்கி நடக்கக் கற்றுக்கொள்கிறவனுக்கு, ஆணையிடும் நிலைமை தானாக வந்துசேரும்; தொழிலாளியாக இருக்கக் கற்றுக்கொள்கிறவனுக்கு முதலாளியாகும் தகுதி விரைவில் வந்துவிடும்.*
>
> **- விவேகாநந்தர்**

அந்த முரசொலி பத்திரிகை 'கிரவுன்' சைசில் அமைந்திருந்தது. பக்க அளவு 6½ அங்குல அகலம்; உயரம் 9 அங்குலம், மொத்தம் 8 பக்கங்கள். எல்லாக் கட்டுரைகளுமே 3 காலம் அளவுதான்.

முதல் பக்கம் ஒரு கட்டுரை - **'எழுதவில்லை'**, என்பது அதன் தலைப்பு. **'பேனாமுள்'** என்கிற பெயரோடு தொடங்கி, 8ஆம் பக்கம் முடிவுறுகிறது. கட்டுரையின் கடைசியில், 'இப்படிக்குத் **தோழன் ப.ஜீவானந்தம்'** - என்று கட்டுரையாசிரியர் பெயரும் காணப்படுகிறது. இதோ, அந்தக் கட்டுரையின் தொடக்கம்.

> 'வந்தே மாதரம் ! ஜெய்ஹிந்த், வர்க்கப் புரட்சி ஓங்குக ! ஈரோட்டுப்பதை என்ற தலைப்பில் ஜனநாயகத்தில் விளாசியிருந்தேனே, படித்தீர்களா ? அடடா, அதை மட்டும் இந்த திராவிடர் கழகத்து இளைஞர்கள் படித்திருந்தால், உடனே ஜோஷிப் பாதைக்கு திரும்பிவிடுவார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை வலுப்படுத்த எத்தனையோ பாதைகளைப் போட்டுப் பார்த்தோம். மக்கள் யுத்தம் என்று ஒரு பாதை, அது 'வார் டயம்' பிசினஸ் ! 'காங்கிரஸ் லீக் ஐக்கிய முன்னணி என்ற கோஷம், பாக்கிஸ்தான், இந்துஸ்தான் பிரிவினையில் முடிந்தது. 'மெஜாரிட்டி கட்சியோடு சேர்ந்து வேலைசெய்தல் என்ற கொள்கையை அனுஷ்டித்து காங்கிரஸின் பாதாரவிந்தங்களை அர்ச்சித்து, முடிவில் 'துரோகி' என்ற பட்டத்தைப் பெற்றோம். . .

- இப்படியாக அந்த முதல் பக்கக் கட்டுரை, அந்த இதழில் தொடங்குகிறது.

> 'என்னைப்பற்றி நான் எழுதும் கட்டுரையில், நானே பெருமைப் படுத்திக் கொள்ள வேண்டிய துணிச்சலை எனக்களித்த கம்யூனிசத்திற்கு என் வந்தனம். என் வியாசத்தின் ஒட்டை உடைசல்களை அடுத்தகடிதத்தில் விளக்கமாகத் தொடர்ந்து எழுதுகிறேன்'.

- என்று தோழர் ப.ஜீவானந்தத்தின் அந்தக் கட்டுரை கடைசிப் பக்கம் நிறைவடைகிறது.

அந்த 'முரசொலி'யின் 2ஆம் பக்கம் **'பத்தினியே உன்போல்'** என்றொரு கதை-பத்தினித்தனம் என்றால் என்ன என்று தெரியாத ஒருத்தி, கருங்குழிக்குப் பார்சலான கதையொன்று இடம் பெற்றிருந்தது. எழுதியவர் பெயர் இல்லை.

இப்படிப் பெயரில்லாதவை அனைத்தும் கலைஞரின் கைவண்ணங்களே!

இவ்வாறாக 'முரசொலி' வார ஏட்டின் - முதல் இதழின் எட்டுப் பக்கமும் கட்டி வெல்லமாக இனிக்கிறது, நமக்கு.

வெட்டு ஒன்று - துண்டு இரண்டு எனக்காட்டும், கனல் தெறிக்கும் தலையங்கமும் உண்டு. கடைசிப்பக்க முடிவில் **'முரசொலிக்கு ஆண்டு சந்தா ரூ.4 தான்'** என்ற அறிவிப்பு.

முடிவில் 'இம்பிரிண்ட்'; **ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு.கருணாநிதி, திருவாரூர். பதிப்பாளர்: கருணை எம்.ஜமால், கருணாநிதி (மின்னியக்க) அச்சகம், விஜயபுரம்** - என்றிருக்கிறது.

'முரசொலி'யின் 2ஆம் இதழில், முதல் பக்கமே தந்தை பெரியார் படம் 'பாஸ்போர்ட்' அளவில், தலைப்பிலேயே இடம் பெற்றிருந்தது. அதைத் தொடர்ந்து வந்த இதழ்களில் - பெரியார் படம் இருந்த இடத்தில் **சர் ஏ.டி.பன்னீர் செல்வம், டி.பி.வேதாசலம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், என்.வி.நடராசன்** போன்றோர் படங்களெல்லாம் தொடர்ந்து வாராவாரம் இடம் பெற்று வந்திருக்கின்றன.

13வது வார இதழில் - அறிஞர் அண்ணா, குதிரையில் ஏறி கோட்டை அருகில் பெரும்படையோடு வருவது போல் அட்டைப்பட ஓவியம்; **ஓவியர் எஸ்.வீரையா** வரைந்த முழுப்பக்க ஓவியம்; 15வது வார இதழில் - தந்தை பெரியார் புகைப்படம் முதல் பக்கமே சரிபாதி அளவும், 17வது வார இதழ் அட்டையில் **'மகான் ரமணரும் மகாத்மா அரவிந்தருமே மக்கள் தம் வழிகாட்டிகள்'** என்று கூறிய **தோழர் ஜெயப்பிரகாஷ்** படத்தை **ஆணும்-பெண்ணும்** என இப்படியும் அப்படியுமாகப் பாதி பாதி போட்டு **'அரசியல் அர்த்த நாரி'** என்ற தலைப்போடு ஒரு கேலிச் சித்திரமும்-என இதழ் தொடர்ந்து மலர்கிறது.

**என்.எஸ்.இளங்கோ, டி.கே.சீனிவாசன்** போன்றோரெல்லாம் அந்த ஏட்டில் எழுதியிருக்கிறார்கள்.

**'குண்டுவீச்சு'** என்றொரு புதிய பகுதி அதில் அணி செய்தது. இந்தியில் வெளிவந்த 'மீரா' திரைப்படம் பற்றிய ஓர் அலசல் அது.

அந்த 2ஆம் இதழில், முதல் இதழில் இடம் பெற்றிருந்த 'ஜீவா' கடிதம் பற்றித் தெரிவிக்கப்பட்டிருந்த ஒரு விளக்கம் மிகவும் சுவையானதாகும்.

'ஜீவானந்தம் கடிதம்' என்கிற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த அந்தக் கடிதத்தில், பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையில் இப்போதும் நாம் கலைஞரிடம் காணும் வேடிக்கைக் குறும்பு மின்னுகிறது. இதோ, அந்தச் சுவைமிகு கடித அறிவிப்பு:

> "முரசொலியில் 'எழுதவில்லை' என்ற தலைப்பில் வெளியாகும் ஜீவானந்தம் கடிதம், அவர் எழுதியது தானா எனப் பல நண்பர்கள் கேட்கிறார்கள்"
>
> இல்லை...இல்லை...ஜீவானந்தம் எழுதவில்லை. 'ஜனநாயகம்' பத்திரிகையில் தோழர் ஜீவானந்தம் 'ஈரோட்டுப்பாதை' என்ற தலைப்பில் பெரியாரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைக்கு மறுப்பளிக்கும் முறையில், நமது பேனாமுள் எழுதும் கடிதம் அது ! ஜீவா உண்மை உள்ளத்தோடு எழுதினால் இப்படித்தான் எழுதுவார் என்பது நம் கருத்தும்கூட !
>
> ஆனால் அவர் எழுதவில்லை !

- இதுதான் அந்த 5ஆம் பக்க அறிவிப்பாகும்.

இப்போது புரிகிறதா அந்தப் 'பேனாமுள்' யாரென்று!

**-அடுத்த இதழில் முடியும்.**

> கல்வியை விட ஒழுக்கத்திற்கே நான் முதலிடம் தருகிறேன். படித்தவன் ஒழுக்கமும் பணிவும் இல்லாதவனாக இருந்தால், அவன் விலங்குகளை விட ஆபத்தானவன்.
>
> - டாக்டர் அம்பேத்கர்

# அவருடைய கேள்வி!

- தோப்பில் முகமது மீரான்

நான்காவது வீட்டிலுள்ள பெரியவருடைய சடலம் மருத்துவமனையிலிருந்து காலையில் அவர் வீட்டிற்கு எடுத்து வந்ததாக பொன்னம்மாள் பாட்டி சொன்னாள். இறந்தவர் யார் என்று தெரியாவிட்டாலும் வாசித்துக்கொண்டிருந்த நாவல் வரிகளிலிருந்து கண்களை உருவாமலேயே அவருக்கு என்னவென்று பாட்டியிடம் விசாரித்தேன். உடம்புக்கு முடியாமையால ரொம்ப நாளாகப் படுத்திருந்ததாகச் சொன்னாள்.

எச்சிப் பாத்திரங்களைப் பின்வளாகத்திற்கு எடுத்துச் செல்லுகையில், "மனுசன் கவனிப்பார் இல்லாம, ரொம்ப கஷ்டப்பட்டார், இன்னும் கிடந்து கஷ்டப்படாம போனது அவர் செய்த புண்ணியம்" என்று தானாகப் புலம்பிக் கொண்டாள்.



கூரிய அலகால் நெஞ்சுக் கூட்டிற்குள்ளிருந்த பருப்பைக் கொத்தி எடுத்துவிட்டு மரணம் உமிழ்ந்து போட்ட அவர் பொக்கை உடம்பு கிடக்கும் சந்தோஷ் நகர் தெருவை, நாவலை மூடிக்கொண்டு எட்டிப்பார்த்தேன், சிறகடித்து வந்திறங்கிப் பலவந்தமாகப் பருப்பைக் கொத்தி எடுப்பதற்கிடையில் கைகலப்பு நடந்திருந்த தெரு மணலில் கிளறல், அடையாளங்கள் எதையும் காணவில்லை. வழக்கமான மௌனம்தான் அப்பவும் காணப்பட்டது, தெருவில் - பெரிய ஒரு பன்றியின் பின்னால், நாலைந்து குட்டிகள் பந்துபோல் உருண்டோடிப்போன மௌன ஊர்வலம் மட்டும் தெரிந்தது.

மதியம் ஆனபோதிலும் பாதங்களின் மிதிவாங்காமல் கிடந்த சந்தோஷ் நகரின் மூணாவது மெயினில், பதினாறாவது குறுக்குத் தெருவில் என்னுடைய நாற்பத்தி மூன்றாவது எண், வாடகை வீட்டிலிருந்து நான்காவது வீட்டின் முன்பக்கம் சட்டை போடாத இருவர் உட்கார்ந்து பச்சைத் தென்னை ஓலையை முடைந்து கொண்டிருந்தனர், பாடைகட்ட.

முன்பு வாடகைக்குத் தங்கியிருந்த தெற்குத் தெருவானால் இந்நேரம் ஜனத்திரளாகவே இருக்கும். ஜனங்களின் பரபரப்பைக் கண்டால் மலக்குல் மௌத்-எமனைத் துரத்தி அதன் கையிலிருந்து உயிரைத் திருப்பிப் பறிக்கத் தெரு மக்கள் ஒளிப்போர் செய்யப் போவதாகத் தோன்றும். தெருவின் மேல்வெளி, ஒப்பாரி அலைகளின் ஆர்ப்பரிப்பில் மூழ்கிவிடும். தோளில் துண்டைப்போட்டுக் கொண்டு நான்காவது வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கப்போனது அந்தத் தெருவில் நான் ஒருவனாகத்தான் இருப்பேன். சடலத்தைச் சுற்றி உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் சில பெண்கள் கசிவு தட்டாமல் அழுது புலம்பினர். கவுடுக்கிடையில் கையைக் கொடுத்து உட்கார்ந்திருந்தவர், போன என்னைஏறிட்டுக் கூட பார்க்காததில் வருத்தப்படுவதற்கு இல்லை. அஞ்சலி செலுத்துவது போல் சில கணங்கள் நின்றுவிட்டுத் திரும்புகையில் மரணத்தின் அலகு உள்ளே நுழைந்துவிடாமல் இருக்க வாசலும் ஜன்னல்களும் மூடப்பட்ட எதிர் வீட்டிற்குள்ளிருந்து 'காதலன்' பாட்டு ஒலித்தது. மரணம் நிகழ்ந்தது எதிர் வீட்டிலானதால், 'முக்காபுலா'வில் அந்த வீட்டில் உள்ளவர்கள் குசி கண்டனர்.

மனைவியின் பிடிவாதம் தாங்காமல் சந்தோஷ் நகரில் குடிவந்தபிறகு இந்தத் தெருவில் பல மரணங்கள் நிகழ்ந்தன. மரண வீட்டிலிருந்து திரும்பி என் வீட்டு வாசலை அடைந்தேன். அதுவரை முகம் பார்த்துப் பேச வாய்ப்புக் கிடைக்காத பக்கத்து வீட்டுக்காரர், அவர் வீட்டுவாசலில் நிற்பதை முதல்முறையாக அன்றுதான் பார்க்க நேர்ந்தது. குடிசென்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, வெளியே செல்ல இறங்கி நின்றவர், நான் எதிர்ப்பட்ட சகுனப்பிழையை எண்ணித் தலைகுனிந்து நின்றார். அண்டை வீட்டாராச்சே, நாமாகப் பேச்சுக் கொடுப்போமே என்ற எண்ணம் உள்ளிருந்து என்னை உசுப்பியது.

"துட்டிக்குப் போனீங்களா?" முகமலர்ச்சியோடு கேட்டேன்.

"யாரென்று தெரியாது." வெடுக்கென்று எரிச்சல்பட்டபோது எலி மூஞ்சியாகவே இருந்தது அவருடையது. மறு பேச்சு கொடுத்துவிடுவேனோ என்று பயந்தபடி வீட்டுக்குள்ளே அவர் போன வேகத்



தாக்குதல், என் முகத்தைத் சாகடித்தது. அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட பிளாஸ்டிக் வயர்பின்னிய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மீண்டும் எழில்வண்ணனின் நாவலை நிப்பாட்டிய இடத்திலிருந்து வாசிக்கத் துவங்கினேன். முன்பு இருமுறை வாசித்த நாவலாக இருந்தாலும், வாசிக்க வாசிக்கப் புதுப்புது ஊற்றுக்கண்திறந்துகொண்டிருந்த வியப்பில் ஆழ்ந்தேன்.

மக்கள் அதிகமாகத் திணறி வாழும் ஒரு தெருவின் உயிர்த் துடிப்பையும், மக்களிடையே காணப்படும் பிணைப்புகளையும் பிளவுகளையும் மனவோட்டங்களையும் காட்டும் நாவல் அவருடையது. பின்னப்பட்ட கலைநுட்பம் என்னை அந்தத் தெருவுக்கே இழுத்துச் செல்கிறது. நாவலை எடுத்தாலே என்னை அது முன்பு வாடகைக்குக் குடியிருந்த தெற்குத்தெருவில் மீண்டும் வாழவைக்கிறது. பேனா முனையாலே உருவாக்கிய ஓர் அதிசய உலகில் என்னைக் குடியேற்றுகின்ற அந்த மாயாஜாலக்காரனின் விரல் முனையை முத்தமிட விரல்கள் கிடைக்காத ஏமாற்றம் எனக்கு. அவர் எங்கிருக்கிறார் என்று பலமுறை எனக்குள்ளேயே தேடல்கள் எழுந்து ஓய்ந்தன.

முன்பு வாடகைக்கு குடியிருந்த தெற்குத் தெருவைப் பார்த்துத்தான் அந்த நாவலைப் படைத்தாரோ என்று தோன்றும், அதிலுள்ள வரிகளை மனம் ஒற்றும்போது. அவருடைய நாவலில் சித்தரித்து இருப்பதுபோல் தெருவில் கண்டமத்தியில் தான் தண்ணீர்க் குழாய். காலையிலும் மாலையிலும் அதிலிருந்து நூல் தொங்கிக்கொண்டிருக்கும். அதை ஒட்டி குப்பைத் தொட்டி இரண்டும் ஒரு வீட்டிற்கு முன்பக்கம் - அது என் வீடு ! காலையிலும் மாலையிலும் குடிதண்ணீர்க் குழாய்க்கு மூச்சு வருவதே குடங்கள் மோதும் ஓசை கேட்டு, தெரு உணர்ந்து உறங்கும்வரை அதன் மேல்பகுதி நீலவார்த்தைகளால் நிரம்பிக் காணப்படும். அதுபோன்ற சில வார்த்தைகளை விரசம் இல்லாமல் எழுதியிருக்கிறார் மனுசன் - அவருடைய நாவலில்.

தெற்குத் தெரு வீட்டுத் தலைவாசல் திறந்தால், பளிச்சென்று தெரிவது தண்ணீர்க் குழாயும் குப்பைத் தொட்டியும், தெருப்பக்கம் உள்ள ஜன்னலைத் திறந்தால் எதிர் வீட்டிலுள்ள அசைவுகள் தெரியும். அங்கு பெண்கள் நடமாட்டம் இருப்பதால், அவ்வப்போது இவள் ஜன்னல் கொண்டியை எச்சரிக்கையாகப் போட்டுவிடுவாள். அதனால் ஜன்னல் வழியாக வீட்டிற்குள் நுழையும் வயல்காற்று உள்ளே வராததால் ஒரே வேக்காடு.

“நமக்கு இந்த கூதற தெரு வேண்டாம். சந்தோஷ் நகரிலே ஒரு வீடு பார்த்துப் போவோம்.” இவள் எப்பவும் நச்சரிப்பாள்.

இவள் பெரிய ஒசுவாசுக் (சுத்தம்) காரி. குடிவந்த நாள்முதல் தெற்குதெரு பிடிக்கவில்லை. எட்டு வருடங்கள் அந்தத் தெருவின் மீது பறந்துபோனது எப்படி என்று தெரியவில்லை. எட்டு வருடங்கள் என்பது வருடங்களாக இருந்தன எனக்கு. அப்படி பாடாய்ப் படுத்திவிட்டாள் சந்தோஷ் நகரில் ஒரு வீடு பார்த்துக் குடிபோக.

வீட்டுக்கு முன்னால் சாக்கடை. பகல் வேளைகளில் குழந்தைகளுக்கும் இரவு விடியும் வரை பெண்களுக்கும், அதுதான் கழிப்பிடம். மாயாண்டி நீளமான அகப்பையால் சாக்கடையை அள்ளி வீட்டிற்கு முன் கூட்டிவைப்பான். வீட்டிற்குள்ளிருந்தாலே மூச்சு முட்டிப்போகும், அப்படி வீச்சம்.

“தூ ! மனுச குடியிருப்பானா இந்த ஜனங்களுக்கிடையிலே ?” என்று சொல்லி காறித் துப்பி மூக்கைப் பொத்தாத நாளே இல்லை.

வீட்டிற்கு ஒரே வாசல் தான் உண்டு. அதுவழியாகத்தான் வாளியுடன் முனியம்மாள் வருவதும் போவதும். முனியம்மாள் போனதும், “இந்தத் தெருச் சனங்களைக் கண்டாரே இரணம் கிட்டாது” என்று ஓடிப்போய் தலைவாசலை அடைத்துத் தாழ்ப்பாள் போடுவாள். தெருவாசல் எப்பவும் சாத்தப்பட்டிருப்பதால்,தெருச்சனங்கள் ஊராப்பட்ட அசிங்கங்களைக் கொட்டி தொட்டியை நிரப்பிவிடுவார்கள்.

சந்தோஷ் நகரில் சாக்கடைகள் இல்லையென்றும், குப்பைத் தொட்டிகள் இல்லையென்றும் இவள் தெரிந்துவைத்திருந்தாள். அதனால்தான் சந்தோஷ் நகரில் உள்ள உயர் மக்களோடு பழக்கம் ஏற்படுத்தி, அங்கேயே ஆயுசு அளவு வாழவேண்டுமென்ற ஆசை இவளுக்கு. வீட்டுத்தரகர் நமச்சிவாயம் பிள்ளையின் நாடியைத் தாங்கி, கெஞ்சிக் கேட்டு எப்படியோ சந்தோஷ் நகரில் ஒரு வீடு அமைந்துவிட்டது.

வீட்டுச்சாவி கிடைத்த நேரம் முகடு முட்டத் துள்ளிக் குதித்தாள்.

தெற்குத் தெருபோல் இங்கு குப்பை வண்டிகள் வருவதில்லை. காலையில் நீள அகப்பையுடன் மாயாண்டி வருவதில்லை. வாளியுடன் முனியம்மாள் வருவதில்லை. தெற்குத் தெருவில் இருக்கும் போது, காலைநேரம் குப்பை வண்டி வருகையில் குப்பைத் தொட்டியின் மேல்பகுதியில் உள்ளவற்றை மட்டும் பரசி எடுக்காமல் தூர்வரை அள்ளிச் செல்ல,

செல்லையாவுக்கு மாமூல் வேறு. இரண்டு பெருநாட்களுக்கும், தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், தேரோட்டம், திருச்செந்தூர் கந்தசஷ்டி, மாதப்பிறப்புகள் இப்படி எல்லாம் நல்ல நாட்களுக்கும் துட்டு வேறு. அவன் எடுத்து வரும் அலுமினியப் பாத்திரத்தையும் நிரப்பிவிட வேண்டும். கொடுப்பதில் ஏதாவது குறைகள் ஏற்பட்டால் தெற்குத் தெருவுக்குள் குப்பைவண்டி நுழையாது. மேலத்தெரு கீழத் தெருவில் உள்ள குப்பைகளை அள்ளிக்கொண்டு வண்டி ஜில் என்று கிழக்கு மாறிப்போகும். இப்படியான சவால்கள் இங்கு இல்லை. அகலமான அழகான தெரு. வீட்டுவாசல்களில் பல வண்ணக் கோலங்கள், தெருவின் இருமருங்கிலும் சோலை மரங்கள். அதட்டல்கள் இங்கு இல்லை.

தெற்குத் தெரு ஜனங்களுக்கு முனியம்மாள் ஒரு பயக்கனவு. ஒரு முறை தெருவையே ஒரு அசத்து அசத்திவிட்டாள். அவளோ ஒருத்தி வேண்டாதவோ முனியம்மாவைத் தகாத வார்த்தையைச் சொல்லி ஏசி விட்டாள். மானக்காரி முனியம்மாவுக்கு எங்குமில்லாத ஆத்திரம். அதே வார்த்தையால் அவளால் திருப்பிஏச முடியுமா? கோபமோ உச்சந்தலையைக் குடைந்தது. ஒரு வழியும் தெரியவில்லை. அவளுக்கு, தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த தெருச் சாக்கடையில் கையிலிருந்த வாளியை அப்படியே கவி த்திவிட்டு, விறு விறென்று வெற்று வாளியுடன் மேலத் தெருவுக்குள் நுழைந்துவிட்டாள். தெற்குத் தெரு ஜனம் குஞ்சும் குறுமாலும் எல்லாம் மூக்கைப்பொத்திக் கொண்டு ஓட்டமெண்ணா, தலைதெறிக்க ஓட்டம்.

மறுநாள் முனியம்மாள் தெற்குத் தெருப் பக்கமே வரவில்லை. வாளிச் சின்னத்திற்கு ஓட்டுப்போட்டு வெற்றிபெறச் செய்த ஜனங்கள், தொகுதி உறுப்பினர் வீட்டை முற்றுகையிட்டனர். தெரு உறுப்பினர் நாலு நல்ல வார்த்தைகள் சொல்லி கேட்டுக்கொண்ட பிறகுதான் தெற்குத் தெருவுக்குள் வீரநாயகியாக நுழைந்தாள். இதெல்லாம் எட்டாண்டுகளுக்கு முன்பு நடந்தாலும், இப்பவும் முனியம்மாவைக் கண்டால் ஜனங்கள் பேசிக்கொள்வதுண்டு. "வாறாடேய்".

எதிர் வீட்டில் இரண்டு பால் மாடுகள், கீழ் வீட்டில் அஞ்சாறு ஆடுகள், கொஞ்சம் நாட்டுக் கோழிகள், சொகத் தொல்லை. தெரு முனையில் உள்ள பெண்பிள்ளை கடையில் எப்பவும் காசாம்பிசாவும், பேரம் பேசலும் தானக்கேடும், வட்டிச் சண்டையும், பிள்ளைச் சோற்றுக்காக, இரண்டு பரல் உப்புக்காக, சில தட்டுமுட்டுக்காக, ஒவ்வொருத்தியும் வந்து கதவை உடைப்பாள். கொடுத்துத் தாங்காது. இவளுக்கானால் எங்குமில்லாத வேகாரி.

"கதவு துறந்து அடைச்சே மனுசனுக்கு உயிர் போவுது".

வாசலில் சைக்கிள் மணியோசை கேட்கும் போதெல்லாம் நமச்சிவாயம் பிள்ளை வந்துவிட்டாரென்று ஓடிப்போய் கதவைத் திறப்பாள். எப்பவும் ஏமாற்றந்தான். வருவதாகச் சொல்லி அனுப்புவார்; வரமாட்டார்.

"நேற்றுதான் காலியாச்சு. உடனே சாவி வாங்கிட்டேன்."

நமச்சிவாயம்பிள்ளை சாவி கைப்பற்றியதைக் கேள்விப்பட்ட பிறகுதான், பலமாத எதிப்பார்ப்புக்குபிறகு இவளுக்கு மூச்சு வெளியானது. அல்லா, தப்பினேன்.

" ரொம்ப ராசியான வீடு. அதில் வாடகைக்குக் குடியிருந்தவர் புதுவீடு கட்டிப்போனார் என்று பிள்ளைவாள் சொன்னபோதே இவளுக்கும் புது வீடுகட்டிய குதூகலம். சந்தோஷ் நகரில், அதுவும் ஒரு ராசியான ஒரு வீடு கிடைத்துவிட்ட மகிழ்ச்சிப் பெருக்கில், தன்னை மறந்து தெற்குத்தெரு ஜனம் அத்தனையும் கச்சடாவென்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.

அக்கம்பக்கம் டீசண்டான மக்கள் வாழ்கின்ற பகுதியில் குடி போவதால் கேட்டபடி அட்வான்ஸ், மறுபேச்சு இல்லாமல், சொன்ன வாடகை. வீட்டைச்சுற்றி விதவிதமான பூ மரங்கள். மொட்டை மாடிக்கு ஏறிச்செல்லப் படிகள். அங்கு நின்று பார்த்தால், 6.10க்கு மும்பைக்குச் சேனைத்தண்டன் பாம்பு சீறிப்பாய்வது தெரியும்.

சுத்தமான, அகலமான, அழகான தெரு. "ஆயத்தளவு இங்கேயேதான் தங்கனும்" குடிபோன அன்று காதில் குசுகுசுத்தாள்.

தெருவின் அமைதி ரொம்பவும் பிடித்திருந்தது. மாநகராட்சி குடிதண்ணீர்க் குழாய் தெருவோரங்களில் இல்லாததால் குடங்கள் மோதி எழும் கனீர் ஓசைகளில் காது அடைப்பதில்லை. மீன் குடலும், கோழித் தலையும், ஆட்டு எலும்புகளும் கொண்டு ததும்பும் குப்பைத் தொட்டிகள் இல்லை.

வெளிமதில் சுவரிலுள்ள கிரில் கேட்டில் பெருங்காயப் பை தொங்கவிட்டிருப்பதில், பால்காரன் மாடசாமி நெல்லை மில்க் பாக்கெட்டைப் போட்டுவிட்டு, அவன் பாட்டுக்குப் போய்க்கிட்டே இருப்பான். தெற்குத் தெருவில் பை தொங்கவிட முடியுமா? ஆளையே தூக்கிட்டுபோற கழிசடைகள்.

நான் மாறும்போது தானும் மாறுகின்ற - நான் தலையாட்டும்போது தானும் தலையாட்டுகின்ற நண்பன் எனக்குத் தேவையில்லை; அச்செயல்களை என்னுடைய நிழல் நன்றாகவே செய்கிறது.

- புளூடார்க்

> உண்மையை ஒருவனும் நம்புகிறதில்லை; பொய்யை உலகம் நம்புகிறது. மோரைத் தெருத்தெருவாய் அலைந்து விற்கிறார்கள்; கள், உட்கார்ந்த இடத்திலேயே விற்றுப்போகிறது!
>
> - கபீர்தாசர்

சைக்கிளில் உட்கார்ந்தபடி வீசப்படும் செய்தித்தாள், சுவருக்குள் சிமிண்டு முற்றத்தில் விழுந்து கிடக்கும். கிரில் கேட்டில் மாட்டப்பட்ட சிவந்த பெட்டிக்குள் தபால்களைப் போட்டுவிட்டுப் பேசாமல் போய்விடுவான் தபால்காரன். இப்படியெல்லாம் ஒரு உலகம் தெற்குத் தெருவுக்கு வெளியே உள்ளது தெரியாமல்தான் எட்டாண்டுகளைக் கடத்திவிட்ட நரகத் துயரங்கள்.

சந்தோஷ் நகரில் குடிவந்த ஆரம்ப நாட்களில் இந்தப் புது உலகைப்பற்றி முன்பு சொல்லாததால், குற்றவாளிக்கூண்டில் என்னை நிப்பாட்டி வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டாள். நகர்ந்துவிட்ட இரண்டு வருடங்களை எட்டிய இப்போதைய நாட்களில், பழைய களிப்பு இவள் முகத்தில் இல்லை. ஏதோ தீவில் தனிமைப்பட்டுப்போன மூச்சுத் திணறலும், பதற்றமும்.

எதிர் வீட்டு மாடியில் குடியிருப்பவர்கள், சீவி மினுக்கி வெளிவாசலில் வந்து நின்ற இவளைக் கண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை.

"நான் சிரிச்சேன். அந்த லேவிண்டி முகத்தைத் திருப்பிமிட்டு போயிட்டா". வாசலில் கால் வைக்கும்போதெல்லாம் இப்படியான வரவேற்பாக இருக்கும். எதிர் பார்த்ததினால், அவை மனசில் உறைக்கவில்லை.

"பெருமைக்காரிபோல் தெரியுது" 'இப்போது எதிர் வீட்டு மாடியை ஏறிட்டுப் பார்ப்பதில்லை. 'கத்திரிக்காய்' என்ற கூப்பிடுதல் கேட்டால், காலை மணி 10 ஆகிவிட்டிருக்கும். கீழ்வீட்டுக்காரியின் சிறைவாசல் திறப்பது அந்நேரம்தான்.

வெண்டைக்காய் விலைகேட்டு முனைஒடித்து சோதனை செய்கையில், கீழ்வீட்டுக்காரியிடம் நட்பு ஏற்படுத்திக்கொள்ள மெல்லப் பேச்சுக் கொடுத்தாள். இவள் முகத்தையே அவள் பார்க்கவில்லை. இவள் முகம் அப்படியே தொட்டால் சிணுங்கியாகக் குறாவி விட்டது.

காய்கறித் தாத்தா சொன்னார்.

"நானும் பத்து இருபது வருஷமாய் பார்க்கத்தான் செய்யறம்மா; மனுசன் குடியிருக்கிற இடமாகத் தெரியலை".

இரவு என் காதில் ஒலித்தது "அந்த கீழ்வீட்டுக்காரி திமிரு பிடிச்சவளாக்கும்".

நாலாவது வீட்டுப் பெரியவரை ஆபத்தான நிலையில் பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும், பாட்டி சொல்லித்தான் தெரியும். நாலாவது வீட்டில் குடியிருப்பவர்கள் யாரென்று தெரிந்துகொள்வதற்கான நெருக்கங்கள் ஏற்படாததால், அதைப் பொருட்படுத்தவில்லை. எதிரில் செல்லும் என் முகம் பார்வையில் படாதபடி விலகி நடக்கும் அக்கம் பக்கத்தோடு எப்படித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதென்று வழிதெரியாத தவிப்பு உள்ளுக்குள்.

தெற்குத் தெருவில் கால் வைத்தாலே ஏகப்பட்ட விசாரிப்புகள்-சுகமாயிருக்கியளா? இளைய செறுக்கனுக்குத் திடீரென டைபாய்டு காய்ச்சல் வந்தது, அங்கு தங்கி கொண்டிருக்கும்போதுதான். நான் ஊரில் இல்லை. இவளுக்குக் கைகால் ஓடவில்லை. தெருச்சனங்கள் வந்து கூடிவிட்டார்கள். குற்றவாளிப் பட்டியலில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ள பாட்டில் மஸ்தான் ஓடிச் சென்றான் ஆட்டோ பிடிக்க. அவனே முன்நின்று அந்தக் கணமே பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றதால், செறுக்கன் பிழைத்துவிட்டான். இப்போது துபையில் நிற்பவன், அவனேதான்.

ஆட்டோவிற்குச் செலவான காசைக் கொடுத்தபோது, பாட்டில் மஸ்தான் வாங்க மறுத்துவிட்டதுமல்ல, அவனுடைய கேள்விக்குரல் இப்பவும் காதில் ரீங்கரிக்கின்றது "மனுசனுக்கு மனுசன் உதவாமல் இருந்தால், மனுசனா பிறந்து என்ன பயன்?". அந்நேரம் நினைவுக்கு வந்தது, எழில் வண்ணனின் வரிகள் - துப்புரவுக்கேடான தெருவில் வாழ்ந்தாலும், அங்கு வாழும் மக்களின் மனங்கள் குளிரருவிகள்!

விடுமுறை நாட்களில் தெற்குத் தெருவைப்போல் சந்தோஷ் நகரில் பொழுது போகாது. குயிலோசை மட்டும் இனிமையாக இருக்கும். நல்ல நாவல்கள் தேடி எடுத்து வாசிப்பதில், மிகுதியான ஆர்வம். எழில்வண்ணனின் நாவல்களில் வரும் தெருவில் மனம் ஓடிக்கொண்டிருக்கும் போதுதான், நாலாவது வீட்டில் பெரியவருடைய சடலத்தை கொண்டு வந்த செய்தி பொன்னம்மா பாட்டி சொன்னது. ஒரு மனிதனை மரணம் றாஞ்சி எடுத்துவிட்ட பரபரப்பு தெருவில் காணப்படவில்லை. மரண வீடுகளுக்குப் படை எடுக்கும் தெற்குத்தெரு ஜனங்களை இங்கு காண முடியவில்லை. எப்போதும் உள்ள மவுனம்தான் அப்போதும்.

சங்கு ஊத்து கேட்டபோது, நாவல் வரிகளில் மனத்தை ஒட்ட முடியவில்லை. தெருவில் எட்டிப் பார்த்த கண்களுக்குப் பாடையைத் தூக்குவது தெரிந்தது. முன் இரு மூங்கில் கால்களையும், இருவருடைய தோள்கள் தாங்கி இருந்தன. பின் இரு மூங்கில் கால்களையும் இருகைகளால் தாங்கிக் கொண்டிருந்தவர், கவுடுக்கிடையில் கைகளைக் கொடுத்து கொண்டிருந்தவர்.

சளைக்காமல் எவ்வளவு தூரம் கைமாற்றவும், தோள்மாற்றவும் ஆளில்லாமல் இம்மூவரால் மயானம் வரை சுமந்து செல்லமுடியும் என்ற கேள்வி எனக்குள். மயானம் ரயில்வே கிராஸிங்குக்கு அப்பால் ஒரு கிலோ மீட்டர் தொலைவில். இடுக்கான பழுதடைந்த பாலம் ஒன்றையும் கடந்து செல்ல வேண்டும். பாலத்திற்கு நுழையும் இடத்தில் அபாயம் என்று போர்டு நாட்டப்பட்டிருக்கிறது.

வாசல்கள் அடைக்கப்பட்ட தெருவின் மயானத் தோற்றத்தைக் கண்டபோது, ஆபத்தான பாலத்தைத் தாண்டி ஏன் அவ்வளவு தூரம் பிணத்தைத் தூக்கிச் செல்லவேண்டும்? இந்த மயானத்தில் ஏதாவது ஒரு இடத்தில் சிதைகூட்டி எரியூட்டக்கூடாதா என்று மனசு - உரக்கக் கத்தியது. எழில்வண்ணனுடைய நாவலில் இப்படி ஒரு நிகழ்ச்சி வருணிப்பையும், கேள்வியையும் வாசித்த நினைவு என்னை அலட்டிக் கொண்டிருந்தது.

"இஞ்செ பாருங்கோ"- கூப்பிட்டாள்.

"நமச்சிவாயம் பிள்ளைங்கிட்ட சொல்லுங்க தெற்குதெருவிலே வீடு பார்க்க".

"எதுக்கு?"

"நம்மவீட்டுல மையம் விழுந்தாலோ?"... நாலாவது வீட்டில் மையம் விழுந்ததை நினைத்துப் பார்த்திருப்பாள்.


இவள் கேள்வி நெஞ்சை உறுத்தியது. இந்த நகரில் இந்த வீட்டில் ஒரு மையம் விழுந்தாலோ? 100 மைல்களுக்கு அப்பால் ஒரு கிராமத்தில் வசிக்கின்ற உறவினர்கள் வரவேண்டும், கருமாதிகள் செய்ய, அவர்களுக்காகச் சடலத்தை போட்டிருக்க வேண்டும். போட்டிருந்தாலும், அவர்கள் வரவேண்டுமென்றில்லை. முடிச்சுகள் தானாக அவிழ்ந்து தளர்வடைகின்ற காலச்சூழலில் உறவினர்களை எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

தெரு மவுனத்தை முறிக்கும் காய்கறித் தாத்தாவின் 'கத்திரிக்காய்' என்று கூப்பிடுதல் ஒலிக்காததால், நாலாவது வீட்டிலிருந்து சடலத்தை எடுக்கும் முன், மார்க்கெட் போய் வர எண்ணினேன். சைக்கிளில் பையைத் தொங்கப்போட்டுக் கொண்டு, சைக்கிளை மிதித்தேன். சுவர்கள் எம்பாடும் கருப்பு மையில் கண்ணீர் அஞ்சலிகள். சைக்கிளில் ரோட்டைக் கடக்க முடியவில்லை. போக்குவரத்து தடைபட்டிருந்தது. கருப்புக்கொடிகள் கட்டிய கார்கள் அங்குமிங்கும் ஓடின. மூடப்பட்டிருந்த கடைகளின் முன் கருப்புக் கொடிகள். மக்கள் திரள் வெயிலுக்கு ஒதுங்கி நிழல்களைத் தேடிக் கொண்டிருந்தனர்.

என்னவென்று ஒருவரிடம் கேட்டதற்குக் கிடைத்த பதில், முகத்தில் அறைந்தாற்போலிருந்தது.

"இந்த ஊரிலதானே இருக்கிறோம்? நடிகச்சுடர் ரசிகர் மன்றக்கிளை உபதலைவர் இறந்தது தெரியாதா? பத்திரிக்கையிலே பார்க்கலையா?"

கண்மணி ஒயின்ஷாப் திறப்புவிழா முடித்துவிட்டு, புல்லட்டில் போய்க்கொண்டிருந்தார் உபதலைவர். எதிரில் வந்த லாரியில் மோதி விபத்துக்குள்ளாகி மாண்டுவிட்டார்.



தலைவரின் மரணத்தை ஒட்டி மார்க்கெட்டுக்கு விடுமுறை விட்டதாலும் சைக்கிளில் ரோட்டைக் கடக்க முடியாததாலும், வீட்டிற்குள் முடங்கினேன். நாலாவது வீட்டிலிருந்து மூன்று பேர் சடலத்தைத் தூக்கிச் சென்ற பிறகு எழில்வண்ணனின் நாவலை எடுத்து நிப்பாட்டிய இடத்திலிருந்து தொடர்ந்தேன். முன்வாசல் திறந்து கிடந்ததால், நல்ல காற்றோட்டமாக இருந்தது. அத்தியாயங்கள் புரண்டு போனதே தெரியவில்லை. தோளில் பை தொங்கப்போட்டிருந்த ஒருவர் வாசல் பக்கம் நின்றுகொண்டிருக்கும் நிழல், நாவல் வரிகளில் ஓடிய கண்களுக்குத் தெரிந்தது. நிழலைப் பார்க்கத் திரும்புமுன் வீட்டிற்குள்ளிருந்து சொன்னாள். "நமச்சிவாயம் பிள்ளையைப் பாருங்கோ."

தெருவாசலை எட்டிப்பார்த்தேன். முன்பின் தெரியாத அவர் ஏதோ சொல்லத் தயங்குவது போல் தெரிந்தது. அப்பவும் வீட்டிற்குள்ளிருந்து மீண்டும் குரல் கேட்டது "தெக்குத்தெருவிலே வீடு கிடக்கிதா எண்ணு பார்க்கச் சொல்லுங்க".

"பேசாம இருப்பியா!" கோபம் அடக்க முடியவில்லை.

"என்னையா?" தெருவாசலைப் பார்த்துப் புன்னகைத்தேன். உள்ளே வரத் தயங்கி நின்றார்.

"வாங்க."

ஒரு துண்டுக் காகிதத்தைத் தந்துவிட்டுக் கேட்டார் "இந்த முகவரி?"

கண்ணை ஓட்டினேன்.

எழில்வண்ணன்,
47, 16வது குறுக்குத்தெரு,
3-வது மெயின், சந்தோஷ் நகர்.

"புரோக்கரா?" - கேட்டாள்.

அவளுடைய இந்தக் கேள்வியைக் கேட்டு அதிர்ந்து போன நான், இவள் குரல் எட்டாத தொலைவிலிருந்து தனித்துச் சுடுகாட்டை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தேன். நாலாவது வீட்டிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பாடையின் பின்னங்காலில் ஒன்றை, என் தோள் தாங்கிக் கொண்டிருக்கிறது இப்பவும்.

★

# வாசகர் இதயம்

'கபிலர் குன்று' கட்டுரை மூலம், அந்தப் பெரும்புலவரின் படைப்பாற்றலை மட்டுமல்ல; அக்குன்று தொடர்பாக அரசு ஆற்றியுள்ள அரும்பணிகளையும் அறிந்து மகிழ்ந்தோம்.

- ப.மு.பாண்டியன், சுந்தரகவுண்டனூர்.

கவிஞர் சாமி.பழனியப்பன் எழுதிய 'சேவலும் சேயிழையும்' கட்டுரையில் இலக்கிய மணம் கமழ்ந்தது. அக்காலக் காதலரின் அற்புத வாழ்வை அந்தக் கட்டுரை படம் பிடித்துக் காட்டியது. அண்ணா நினைவிடம் படத்தை முதல்பக்கமே போட்டிருக்கலாம்.

- ஜெ.சரவணன், திருப்பத்தூர்.

எஸ்.எஸ்.போத்தையா எழுதிய 'கத்தாளங் சுருங்கப்' என்ற கட்டுரை அருமை. முன்பு உள்ள விளையாட்டுச் சிறுவர்களின் பாடல் முறைகளை நன்கு விளக்கியது; என் சிறுவயது விளையாட்டுகள் அதைப் படித்ததும் எனக்கு நினைவு வந்தது.

- மு. சிவகுமார், நெடுவயல்.

அரசு சாதனைகள் பற்றியும், அறிவிப்புகள் பற்றியும், தேசியத் தலைவர்கள் குறித்தும், முதலமைச்சர் ஆற்றும் உரைகளும் வெளியிடும் தங்கள் பத்திரிகை ஆளும் கட்சியினருக்கு மட்டுமல்ல; ஊராட்சி மன்றங்களுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் பயன்படும் அளவில் உள்ளது.

- வி. கலியபெருமாள், தலைவர்,
கீழசூரியமூலை ஊராட்சி.

அறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தை ரூ.275 இலட்சம் மதிப்பீட்டில் எழில்பட வடிவமைத் திருக்கிறார் கலைஞர்; அந்தப் படமே, நேரில் பார்த்த நிம்மதியை எங்களுக்கு அளித்தது.

- டிஎஸ்.சேகர், தென்கடப்பந்தாங்கல்.



'தெரிந்துகொள்வோம்' என்றொரு பகுதியை டிசம்பர் இதழில் வெளியிட்டீர்; அதன் பிறகு காணோம். அரிய செய்திகளைத் தெரிவிக்கும் அப்பகுதியைத் தொடர்ந்து வெளியிடக்கூடாதா?

- மு.வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

'ஒருமைதரும்
தமிழகத்தின்
ஓங்குபுகழ் பரப்பிடவே
பெருமையோடு உதித்தாய்நீ
பேருலகில் -
அருமையென
இப்போது பவனிவரும்
இனியதமிழ் அரசிதழே
எப்போதும் வாழ்க
இனிது'.

- ப.அருணாசல சண்முகம்,
வீரளூர்.



# "மனிதநேய உணர்வோடு வாழ்ந்தவர்"!

## பெரியவர் பக்தவத்சலம் நினைவிடத்தைத் திறந்துவைத்து முதல்மைச்சர் கலைஞர் புகழாரம்

"பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் - அவரை நான் அப்படித்தான் அழைப்பது வழக்கம். நான் அப்படி அழைத்த காரணத்தாலேயே 'பெரியவர் பக்தவத்சலம்' என்பது நிலைத்த ஒன்றாக ஆகிவிட்டது. அவர்களுக்கும் எனக்கும் அரசியல்ரீதியாக எத்தனையோ கருத்து மாறுபாடுகள் உண்டு. அது நீங்கள் அனைவரும் அறிந்ததாகும்.

கருத்து வேறுபாடுகள், அரசியல் மாறுபாடுகள் இவைகள் எல்லாம் என்றைக்கும் நிலையாக இருந்து மனிதர்களுக்கு மனிதர் காட்டவேண்டிய மரியாதைக்கு இடையூறாகவோ அல்லது குறுக்கீடாகவோ இருக்கக்கூடாது என்பதிலே நான் அழுத்தமான நம்பிக்கை கொண்டவன். அதனால்தான் எத்தனை மனமாச்சரியங்கள், கருத்து வேறுபாடுகள் ஒரு காலத்தில் இருந்தாலும்கூட, அவர்களால் நாட்டிற்கு விளைந்த நன்மைகள், சமுதாயத்திற்கு விளைந்த நன்மைகள், ஆட்சிக்கு ஏற்பட்ட நன்மைகள் இவைகளை மறந்துவிட இயலாது.

நான் பாளையங்கோட்டை சிறைச் சாலையில் அவரால் அடைக்கப்பட்டு, சிறையில் இருந்து மீண்டு வந்தவுடன் எனக்குத் தொலைபேசி மூலமாக அழைப்பு விடுத்து. உடனடியாக அவருடைய இல்லத்துக்கு வரச்சொன்னார். இல்லத்துக்குச் சென்றவுடனே என்னிடத்திலே "உங்களை ஏன் சிறையில் அடைத்தேன்" என்பதற்கான காரணங்களை எல்லாம் அவர் எடுத்து விளக்கினார்.

நான் அப்பொழுது அவரிடத்தில் கேட்டுக்கொண்டது "என்னை நீங்கள் சிறையிலே அடைத்தது சரி, இன்னும் சிலபேர் பாதுகாப்புக் கைதிகளாக அடைக்கப் பட்டிருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் விடுவிக்கவேண்டும்'' என்பதுதான்.

அந்த பெயர்ப் பட்டியல்களைப் பட்டியலிட்டுக் கொடுங்கள் என்று கேட்டார்கள். பட்டியலிட்டுக் கொடுத்தேன். அவர்கள் எல்லாம் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள்.

**மனிதநேய உணர்வோடு வாழ்ந்து காட்டியவர்**

இப்படி அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் ஒரு மனிதாபிமான உணர்வோடு, மனிதநேய உணர்வோடு வாழ்ந்துகாட்டியவர் பக்தவத்சலம் அவர்கள். அப்படிப்பட்டவருடைய நினைவுச்சின்னம் ஒன்று இருக்கவேண்டும் என்பதிலும், அதிலும் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே அந்த நினைவிடம் அமையவேண்டும் என்பதிலும் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு.

அதை ஓரிருமுறை அவருடைய குடும்பத்தார், குறிப்பாக அம்மையார் சரோஜினி தேவி அவர்களும், ஜெயந்தி நடராஜன் அவர்களும் எனக்கு நினைவூட்டியிருக்கின்றார்கள். அந்தக் கடமையை நான் இன்றைக்குச் செய்து முடித்திருக்கின்றேன்.

பக்தவத்சலம் போன்றவர்களின் அயராத உழைப்பு, ஓய்வில்லாத உழைப்பு, நல்ல நிர்வாகம்- என்னைப் பொறுத்தவரையிலே நான் பெரியாரிடத்திலே பகுத்தறிவைக் கற்றுக் கொண்டேன் என்றால், அறிஞர் அண்ணாவிடத்திலே அரசியல் பண்பாட்டைக் கற்றுக் கொண்டேன் என்றால், பக்தவச்சலம் அவர்களிடம் நிர்வாகத்தைக் கற்றுக் கொண்டேன்."

- 13.3.98 அன்று பெரியவர் பக்தவத்சலம் நினைவிடத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து.

• • •

# "சிவப்பு நட்சத்திரம் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட்!"



"ஈ.எம்.எஸ். என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற அந்த மூன்று எழுத்துக்களுக்குச் சொந்தக்காரராக விளங்கிய தலைசிறந்த மார்க்சீயவாதியும், புரட்சியாளரும், இந்தியாவினுடைய மூத்த அரசியல் தலைவர்களுள் ஒருவருமான திரு.ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்களுடைய மறைவுச் செய்தி எனக்குக் கிடைத்தபோது அதிர்ச்சியுற்றேன்.

அவரும் நானும் மேற்கொண்ட பேச்சுவார்த்தையிலேயே, நீண்ட காலப் பிரச்சினையான பரம்பிக்குளம் ஆளியாறு பிரச்சினை இரண்டே நிமிடத்தில் சுமுகமாக முடிவுற்றது.

அவருக்கும் எனக்கும் மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கின்ற முறையிலே மாத்திரம் அல்லாமல், எதிர்க் கட்சிகளுடைய தலைவர்கள் என்கின்ற முறையிலே கூட நீண்டகாலப் பழக்கம் உண்டு.

நாணயமான அரசியல், நேர்மையான அரசியல் வேண்டும் என்று விரும்புகின்ற அத்தனைப் பேருக்கும் ஈ.எம்.எஸ். அவர்களுடைய இழப்பு ஒரு பெரும் இழப்பு ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் வைக்கத்திலே நம்பூதிரிகளை எதிர்த்துத்தான் போராட்டத்தை நடத்தினார். அவ்வளவு பிற்போக்கானவர்கள் அங்கே நம்பூதிரிகள் என்ற பெயரில் இருந்தார்கள். அந்தச் சமுதாயத்திலே ஒரு புரட்சியாளர் மின்னல் கீற்றுப் போலத் தோன்றிச் சிவப்பு நட்சத்திரமாக இந்தியா முழுவதும் விளங்கி, ஏன் உலக அரங்கிலே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு விளங்கி, அந்த நட்சத்திரம் இன்றைக்கு உதிர்ந்துவிட்டது என்றாலும்கூட, நம்முடைய உள்ளத்தில் எல்லாம் இடம் பெற்றுவிட்ட நட்சத்திரமாக அவர் விளங்குகிறார் என்று கூறி, அவருடைய இழப்பிற்காக ஆழ்ந்த இரங்கலை இந்த அவையின் சார்பாக அவருடைய குடும்பத்தாருக்கும் அவருடைய கட்சித் தோழர்களுக்கும் தெரிவித்து அமைகின்றேன்."

- 20.3.98 அன்று சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட இரங்கல் தீர்மானத்தையொட்டிப் பேசியதிலிருந்து.



# சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய குடியிருப்பு வளாகம்

தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான புதிய குடியிருப்பு வளாகம் சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் தோட்டத்தில் உருவாகிறது.

பிரம்மாண்டமான இந்த அழகிய நவீன மாளிகை வளாகத்தை உருவாக்க ரூ.45 கோடி செலவாகும் என அரசால் பூர்வாங்கமாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தம் 240 குடியிருப்புகளை உள்ளடக்கிய இந்த வளாகம் பத்தடுக்கு மாடிக் கட்டடங்களைக் கொண்டதாகத் திகழும்.

வாகனங்கள் நிறுத்துமிடம், ஓட்டுநர்கள் ஓய்வெடுக்கும் பகுதி, குடிநீரைத் தேக்கி வைப்பதற்கான கீழ்நிலை நீர்த் தொட்டிகள் ஆகியவற்றைக் கொண்டதாகத் தரைத் தளம் இருக்கும். தரைத் தளத்தின் மீதுதான் மேற்குறிப்பிட்ட பத்து அடுக்குகள் கட்டப்படும்.

ஒரு தளத்துக்கு 6 வீதம் ஒரு கட்டடத்தில் 60 குடியிருப்புகள் அமையும். ஒவ்வொரு குடியிருப்பும் 144.33 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டதாக இருக்கும். இதுபோல் மொத்தம் 4 கட்டடங்கள் கட்டப்படும்.

ஒவ்வொரு கட்டடத்திலும் வேகமாக இயங்கும் 2 மின் தூக்கிகள் (Lift) இருக்கும்.

குடியிருப்புகளுக்கான கட்டடத்தைத் தவிர, இந்த வளாகத்தினுள் - உணவகம், சலவையகம், உடற்பயிற்சிக் கூடம், நூலகம், தொலைபேசி இணைப்பகம், செய்தித் தாள் - நூல் விற்பனை நிலையம் உள்ளிட்டவற்றைக் கொண்ட தனிக் கட்டடமும் கட்டப்படும்.

இவ்வளாகத்தைக் கட்ட தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக்கழகம் ரூ.40 கோடி கடனுதவியாக அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. இதில் முதற்கட்டமாக ரூ.6.54 கோடி தரப்பட்டுள்ளது என 'ஹட்கோ'வின் மண்டலத் தலைவர் திரு. வி.அருள்குமார் தெரிவித்தார்.

இப்போது அரசினர் தோட்ட வளாகத்தில் காவல்துறைத் தலைமை இயக்குநர் (D.G.P.) அலுவலகம் எதிரே பூர்வாங்கக் கட்டுமானப் பணிகள் தொடங்கி நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் 2 ஆண்டுகளில் இவ்வளாகம் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் கட்டுமானப் பணிகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிக்காலம் முடியும் வரையில் தங்குவதற்கு என்று தில்லியில் தனித் தனிக் குடியிருப்புகள் ஒதுக்கப்படுகின்றன அல்லவா? அதைப்போல, தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களது பதவிக்காலம் முழுவதும் தங்கியிருக்க உதவும் வகையில் இக் குடியிருப்புகள் ஒதுக்கப்படும்.

மிகவும் அழகிய முறையில் - நவீன வடிவமைப்பில் இக்குடியிருப்பு வளாகமானது கட்டப்பட்டுவருகிறது. சட்டப் பேரவை உறுப்பினர்களுக்காக இத்தகைய நவீன குடியிருப்பு வளாகத்தைக் கட்டும் முதல் மாநிலம் தமிழகம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

8-ஆம் பக்க தொடர்ச்சி

40 லிட்டருக்குக் குறையாமல் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இம்மாத இறுதிக்குள் நிறைவேற்றி முடிக்கப்படும். அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க, இவ்வரசு முடிவு செய்துள்ளது. இந்த இலக்கினை அடைய, ஊரகக் குடிநீர் வழங்கும் பணிக்கான நிதியொதுக்கீடு வரும் ஆண்டுகளில் கணிசமாக அதிகரிக்கப்படும். நகர்ப்புறப் பகுதிகளுக்கு குடிநீர் வசதிகளை அதிகரிக்க பல திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன. வீராணம் ஏரியின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டு, அத்தண்ணீரை கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள நகர்ப்புறங்களுக்கும் வழியிலுள்ள கிராமக் குடியிருப்புகளுக்கும் அளிக்கத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. சென்னையில் குடிநீர் வழங்கு பணியை மேம்படுத்தவும், திடக்கழிவு அகற்றும் நிருவாகத்தை மேம்படுத்தவும் வகை செய்யும் சென்னை மூன்றாவது குடிநீர்த் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன், வரும் ஆண்டில் செயல் படுத்தப்படவுள்ளது.

21. இணைப்புச் சாலை தேவையுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள 517 கிராமங்களில், நடப்பாண்டில் 216 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் எஞ்சிய 301 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும். பல்வேறு திட்டங்களின் கீழ் சென்ற ஆண்டில் 5420 கி.மீ. மற்றும் நடப்பாண்டில் 6580 கி.மீ. ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கல்வி, வேலை வாய்ப்புகளில் 69 சதவிகித இட ஒதுக்கீடு வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது.**

22. எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைத்திட அனைத்து வட்டார ஆரம்பசுகாதார மையங்களுக்கு தேவையான சாதனங்களையும், வசதிகளையும் வழங்க முழு முயற்சி மேற்கொள்ளப்படும். மாவட்ட மருத்துவமனைகளும் வட்ட மருத்துவ மனைகளும், மேல் சிகிச்சை மருத்துவமனைகளாக மாற்றப்பட்டு 24 மணி நேரமும் அவசர, அவசிய மருத்துவப்பணிகள் கிடைக்கும் வகையில் படிப்படியாக வலுப்படுத்தப்படும். அரசு மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்கான நிதியொதுக்கத்தை உயர்த்துவதன் மூலமாகவும் நடைமுறைகளை நெறிப்படுத்துவதன் வாயிலாகவும் அவற்றின் செயல்பாடு சீர்படுத்தப்படும்.

23. ஏழை எளியோர்க்குக் கண்ணொளி வழங்கும் விரிவானதொரு திட்டம் மாநிலம் முழுவதும்

முகாம்கள் வாயிலாக பரவலாக நிறைவேற்றப்பட 1972 ஆம் ஆண்டு இந்த அரசினால் தொடங்கப்பட்டு அதனால் பல இலட்சம் மக்கள் பயன் பெற்றனர். இடைக்காலத்தில் அத்திட்டத்தில் ஏற்பட்ட தொய்வைப் போக்கி மீண்டும் அதே அளவில் மேலும் செம்மையாக கண்ணொளி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

24. கல்வித்துறை முன்னேற்றத்திற்கு அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகின்றது. 6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்துச்சிறார்களும் பள்ளியில் சேர்ந்து தொடர்ந்து கல்வி பெற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பள்ளிக் கல்வியின் தரத்தினை உயர்த்திட பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் பல அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி படிப்பினைத்துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டுக்குத் தரமான உயர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து பல்கலைக் கழகங்களுக்கு வழங்கும் நிதி உதவியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகமும், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகமும், திருச்சிராப்பள்ளியில் கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியும் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. முதன்முறையாகப் பொறியியல் கல்லூரிகளில் கிராமப் பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர்களுக்கு 15% இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டிலிருந்து இத்தகைய ஒதுக்கீடு தொழிற்கல்வி அனைத்திற்கும் விரிவு படுத்தப்படும். இதன் மூலம் கிராமப் பகுதிகளில் கல்வி கற்ற மாணவர்களும் தொழிற்கல்வி பெற்று வாழ்க்கையில் முன்னேற்றம் அடையும் வாய்ப்பு ஏற்படும்.

25. காவிரி நதிநீர் தாவா தற்பொழுது காவிரி நடுவர் மன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால ஆணையைத் தொடர்ந்து இறுதி ஆணைக்காக விசாரணையில் உள்ளது. தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியைச் சேர்ந்த வல்லுநர் சாட்சிகளின் குறுக்கு விசாரணையைத் தொடர்ந்து கர்நாடகத்தின் வல்லுநர் சாட்சிகளின் குறுக்கு விசாரணையைக் காவிரி நடுவர் மன்றம் எடுத்துக் கொண்டுள்ளது. இதற்கிடையில் 1992–ஆம் ஆண்டு தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கின்மீது விசாரணை நடைபெறும் சமயத்தில், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச்செயலாக்கும் பொருட்டு, மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் தாவா சட்டம், 1956 பிரிவு '6ஏ' ன் கீழ் ஒரு திட்டத்தை மத்திய அரசு வகுக்குமென்று 9.4.1997 அன்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது. அதனடிப்படையில் மத்திய அரசு ஒரு வரைவுத் திட்டத்தைத்திட்டி அதன்மீது சம்பந்தப்பட்ட மாநிலங்கள் கருத்துக்களை அளித்துள்ளன. 30.9.1997 அன்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் இது குறித்து ஒரு கூட்டத்தை கூட்டி விவாதித்தார்.

**இரண்டாவது பசுமைப்புரட்சியை உருவாக்கத் தொடர்ந்து அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.**

நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயலாக்கும் பொருட்டு, வரைவுத் திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிடும்படி மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருவதுடன் உச்சநீதி மன்றத்திலும் வலியுறுத்தி வாதாடி வருகிறது.

26. 1.6.1997 முதல் மத்திய அரசு, வறியோர் நலனுக்கான பொது விநியோக முறையினை அறிமுகப்படுத்தியதால் இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியின் அளவு 1.65 இலட்சம் டன்னிலிருந்து 84230 டன்னாகக்குறைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தியதால் 1997 டிசம்பர் திங்கள் முதல் இம்மாநிலத்திற்கான உணவு தானியங்களின் மொத்த ஒதுக்கீட்டை 1,19,230 டன்னாக மத்திய அரசு அதிகரித்துள்ளது. குறுவைப் பருவத்தில் நல்ல முறையில் 7 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டதால் பொது விநியோக முறையில் தங்கு தடையின்றி அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெய் பெற நீண்ட நேரம் காத்திருப்பது போன்ற குறைபாடுகளைக் களைய மண்ணெண்ணெய் நிலையங்கள் மூலம் விநியோகம்செய்யப்புதிய திட்டம் ஒன்றை, சென்னையில் அரசு துவக்கியுள்ளது. இந்நிலையங்கள் பெட்ரோல், டீசல் வழங்கும் நிலையங்களைப்போல் இந்திய எண்ணெய்க் கழகத்தின் தொழில் நுட்ப உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளதால் மாநிலத்திலுள்ள நகர்ப்புற பகுதிகளில் இந்நிலையங்களை அமைக்கும் திட்டத்தை விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

27. சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் பொது விநியோகத் திட்டம் சீரமைக்கப்படும் என்றும் அதன்படி மூன்று நிற அட்டைகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கான கள ஆய்வு நடத்தப்பட்டு அட்டைகள் அச்சிடும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு, சில மாற்றங்களுடன் இரண்டு நிறங்களில் மட்டுமே குடும்ப அட்டைகள் வழங்க தற்போது முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மாத வருமானம் ரூ.1250 க்குக் குறைவாக உள்ள ஏழை எளிய குடும்பங்களுக்கு இளம் சிவப்பு நிற அட்டைகளும் மற்ற குடும்பங்களுக்கு மஞ்சள் நிற அட்டைகளும் வழங்கப்படும். இளம் சிவப்பு நிற அட்டை பெறுவோருக்குத் தற்போது பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருள்கள் அனைத்தும் வழங்கப்படும். மஞ்சள் நிற அட்டை பெறுவோருக்கு

அவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் அரிசி அல்லது அரிசிக்குப் பதில் கூடுதலாகச் சர்க்கரையோ அல்லது கூடுதலாக மண்ணெண்ணையோ வழங்கப்படும். இந்த அட்டைகளின் விநியோகம், சென்னை மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளில் வரும் மே மாதம் முதல் தேதியிலிருந்து தொடங்கும். அந்தப் புதிய குடும்ப அட்டைகளின் அடிப்படையில் ஜூன் மாதம் முதல் பொருள்கள் வழங்கப்படும். தொடர்ந்து படிப்படியாக மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் இரு வண்ண அட்டைகள் வழங்கும் பணி நிறைவு செய்யப்பட்டு, புதிய முறை விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படும்.

28. தமிழக மகளிர் முன்னேற்றத் திட்டம் இந்த ஆண்டில் 14 மாவ்ட்டங்களில் 194 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தத் துவங்கப்பட்டுள்ளது. தற்போது மாநிலத்தில் 2 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ள 9000 தன்னிறைவுக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் இத்திட்டம் இன்னும் 7 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு மேலும் 3 இலட்சம் பெண்கள் இத்திட்டத்தின் கீழ் தன்னிறைவுக் குழுக்களில் உறுப்பினர்களாகிப் பயன் பெறுவார்கள்.

29. உலக வங்கி நிதி உதவி பெறும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து இரண்டாவது திட்டம் 1997-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்குப் பின்னும் இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் நிதியிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்படும். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமணத்திட்டத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த நிதி ஆண்டில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பயன் பெறுவோர் 53,145 பெண்கள் ஆவார்கள்.

30. சாதி வேறுபாடுகளற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் உன்னத நோக்கத்தோடு இந்த அரசு, மாநிலமெங்கும் 50 இடங்களில் எல்லா சாதியினரும் நல்லிணக்கத்துடன் வாழும் வகையில் 'சமத்துவபுரங்களை' உருவாக்கி வருகின்றது. ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதர சமூகத்தினர் அனைவரும் இணக்கத்துடனும், அமைதியாகவும் வாழவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், மின்சாரம், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் சமுதாயக் கூடம் போன்றவை அமைந்திடும் வகையில், மாதிரி கிராமங்களாகவும் இந்த சமத்துவபுரங்கள் உருவாக்கப்படுகின்றன.

31. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக அரசு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீட்டினைஅதிகரித்துதிட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. நடப்பாண்டில் வேலை வாய்ப்பு உடனடியாகக் கிடைக்கக்கூடிய கணினி பயிற்சி,

பிளாஸ்டிக் தொழில் நுட்பம் போன்ற இனங்களில் செயல்படுத்தப்பட்டுவரும் பயிற்சித் திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

32. சமுதாயத்தில் நலிந்துள்ள கைத்தறி நெசவாளர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள் போன்றவர்களின் நலனைக் காத்திட இவ்வரசு முனைப்பாக உள்ளது. அதற்கான புதிய திட்டங்கள் ஆய்வில் உள்ளன. இவற்றுக்கான அரசின் முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

33. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இது குறித்த வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவ்வழக்கில் தமிழக அரசின் நிலை தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறது. இட ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் சமூகநீதிக் கோட்பாட்டினை மாநில அரசின் அதிகாரப் பொறுப்பில் விடுகின்ற அளவுக்கு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்பதை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

34. நேர்மையும் பொறுப்பும் மிக்க நிருவாகத்தை அளிக்க இந்த அரசு உறுதியுடன் செயல்படுகிறது. அரசு நடைமுறைகளை எளிமையாக்கவும், ஊழலைத் தடுக்கவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து



**செயல்படுத்தப்படுவதற்குப் பல ஆண்டுகள் ஆகக் கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது.**

தக்க பரிந்துரைகளை அளிக்க ஓய்வுபெற்ற நீதிபதி திரு.ஜி.ராமானுஜம் அவர்கள் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை அரசு அமைத்திருந்தது. இக்குழுவின் பரிந்துரைகளை, இவ்வரசு ஆய்வு செய்து வருகிறது. விரைவில் முடிவுகள் எடுக்கப்பட்டு செயலாக்கப்படும். அரசின் செயல்பாடு குறித்து பொது மக்களுக்குத் தேவையான தகவல்களை அளிப்பதற்காகத்தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

35. இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையே 1974–ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஏற்பட்டபோது, கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்கின்ற உரிமையும், கச்சத்தீவுக்கு

தமிழ்நாட்டிலிருந்து மக்கள் யாத்திரையாக செல்கின்ற உரிமையும் உண்டு என்ற பிரிவு இடம் பெற்றிருந்தது. ஆனால் 1977 முதல் செயல்படாமல் ஆக்கப்பட்டுவிட்ட இந்த பிரிவைச் செயல்படுத்த வேண்டுமென்றும், அடிக்கடி அல்லலுக்கும், இழப்புக்கும் ஆளாகும் மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென்றும் மைய அரசைத்தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

36. அரசின் திட்டங்களைத் தொய்வின்றிச் செயல்படுத்தவும் திட்டங்களின் பயன்கள், உரிய காலத்தில் உரியவர்களை அடைவதற்கும், மனிதவள மேம்பாட்டுக்கும், சட்டம் – ஒழுங்கை நல்லமுறையில் பராமரிப்பதற்கும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், காவலர்கள் மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசின் அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய விகிதங்களை ஆய்வு செய்து, மாநில அரசு அலுவலர்களுக்கு இவற்றை அளிப்பது குறித்து பரிந்துரைகளை அளிக்க நியமிக்கப்பட்ட அலுவலர்கள் குழு தனது அறிக்கையை அளித்துள்ளது. இதன் மீதான அரசின் முடிவுகள் இக்கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

37. 1992–ஆம் ஆண்டு முந்தைய அரசு இயற்றிய புதிய தொழில் வரிச் சட்டத்தில் உள்ள வரி விகிதங்களைக் குறைப்பதைப் பற்றியும் சில பிரிவுகளை நீக்குவது பற்றியும் வணிகர்களிடமிருந்து பல முறையீடுகள் வந்துள்ளன. தொழில் வரியிலிருந்து வரும் வருவாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு முக்கிய வருவாய் இனமாக உள்ளதால் தொழில் வரிச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய ஒரு குழுவினை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்றபின் அரசு தொழில் வரிச் சட்டத்தில் தேவையான மாறுதல்களைச் செய்யும்.

38. செயல்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் ஆகக் கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது.

39. இந்த அரசின் முக்கியமான நடவடிக்கைகள், சாதனைகள், எதிர்காலத் திட்டங்கள், கொள்கைகள் குறித்து நான் குறிப்பிட்டுள்ளேன். வளர்ச்சி–மேம்பாட்டுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும், விரைவுபடுத்தவும், அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இவை யாவும் செவ்வனே நிறைவேற உங்களுடைய முழு ஒத்துழைப்பு வேண்டுமெனக்கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.



# இந்திய தரிசனம்



ஜெயகாந்தன்

நாமறிந்தவரை பண்டைய உலக நாகரிகம் என்பது தமிழ்நாட்டையும், கிரேக்கத்தையும் ஆதாரமாகக் கொண்டு திகழ்கிறது.

பண்டைய கிரேக்க நாகரிகம் ஐரோப்பிய நாகரிகத்தின் தோற்றுவாய் என்று கருதப்படுகிறது. அதேபோலத் தமிழ்நாட்டை ஆசிய நாகரிகத்தின் தோற்றுவாய் எனக் கருதலாம்.

ஒரு பழந் தமிழ்க்கவி 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று முழங்கினான். இது நெடிய பாரம்பரியமுடைய தமிழ்ப் பண்பாட்டின் கொள்கையாகவும் நோக்கமாகவும் இருந்தது. இந்தக் கூற்றின் பின்னணியில் உள்ள செய்தி என்ன? இந்த இலட்சியத்தை உலகெங்கும் பரப்புவதும், இந்த இலட்சிய அடிப்படையில் உலகமாந்தரை உருவாக்குவதும் இந்தியப் பண்பாட்டின் அடிநாதம் என்பதே.

நமது கலாச்சார வரலாறு வேதகாலம் தொட்டுத் தொடங்குகிறது என்றாலும், புத்தரின் காலத்திலிருந்துதான் இந்திய அரசியல் கலாசாரம், உலகு தழுவிய ஒரு தேசிய கலாச்சாரமாக உருப்பெறுகிறது.

சில நாடுகள் மிகவும் தனித்துவமான அவற்றின் எல்லைக்கு உட்பட்டவையேயான கொள்கைகளையும் நெறிகளையும் கொண்டிருக்கலாம். ஆனால், இந்திய தேசியமானது உலகத்தை - ஏன், பிரபஞ்சத்தையே தழுவி நிற்கிறது; மனிதகுலம் முழுமையையும் நேசிக்கிறது. உலகமாந்தர் அனைவரின் நன்மையையும் வேண்டிநிற்கிறது. மற்ற தேசிய வாதங்கள் போல் இந்திய தேசியம் தன்னலம் பேணும் குறுகிய தேசியவாதமாகச் சுருங்கி விடவில்லை. மாறாக உலகுதழுவிய, மானுட சகோதரத்துவத்துக்காகத் தனது குரலை உயர்த்தி நிற்கிறது.

"ஸர்வே ஜனா; ஸுகினோ பவந்து" என்பது பாரதத்தின் தேசிய கோஷம். ஆம், ஒன்றோடொன்று மோதுகிற, மதங்கள், இனங்கள், வர்க்கங்கள் என்று பாகுபட்டு நிற்கிற உலகத்தில் இந்திய தேசியம் எது சத்தியமோ அதுவே ஜெயிக்கட்டும் என்று முழங்கி, 'சத்யமேவ ஜயதே' என்ற தனது பதாகையை உயர்த்திப் பிடிக்கிறது.

இந்திய நாகரிகம் எல்லாவற்றிலும் சத்தியத்தையே தேடுகிறது. உண்மைக்காகவே உயிர் கொடுக்கவும் தயாராய் நிற்கிறது. ஒரு நாட்டுக்கும் நாகரிகத்துக்கும் இதைக் காட்டிலும் ஓர் உன்னதமான குறிக்கோள் இருக்கமுடியாது.

பஞ்சசீலம் என்பது ஏதோ இக்காலத்தில் சுதந்திர இந்தியாவும், புதிய சீனாவும் கையெழுத்திட்டுப் பிரகடனம் செய்த ஒரு புதிய ஒப்பந்தம் மட்டுமன்று, அது உலக அரசியல் கலாச்சாரத்துக்கு அசோகச் சக்கரவர்த்தி அளித்த மகத்தான அருட்கொடையாகும்.

இந்தியா ஒரு பரந்ததேசம்; ஒரு துணைக் கண்டம். இந்தியாவின் தொலைதூரப் பிரதேசங்கள், தேசத்தின் பிரிக்க முடியாத பகுதிகளாகும். ஒவ்வொரு பகுதியும் அதற்கேயுரிய தனித்தன்மையுடன் விளங்குகின்றன. இந்தத் தனிச்சிறப்புகள் இந்திய தேசத்தின் ஒருமையை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றன. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வருகிற சிறப்பானவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்வதும் தன்வயப்படுத்திக் கொள்வதும் இந்திய தேசிய கலாசாரத்தின் பொதுவான அடிப்படைகளாகும்.

இந்தியாவின் வடபகுதியில் வாழ்ந்தோர் தம்மீது படையெடுத்து வந்தோரை எதிர்த்துப் போர் புரியவும், அவர்களைப் புறங்காணச் செய்யவும் வீரமுடையவர்களாய் இருந்தனர். மாறாக, தென் பகுதியோ மூன்று புறத்தும் கடலால் சூழப்பட்டிருந்தால், ஒருபோதும் அந்நியர் படையெடுப்புக்கு இலக்கானதே இல்லை. உண்மையில் தென்பகுதியில் ஒரு வலுவான கடல் அரணும் கடற்படையும் நமக்கு இருந்தது. அவை தமிழகத்தின் துறைமுகங்களிலிருந்து சரக்குகளையும் கைவினைப் பொருள்களையும், திரவியங்களையும் மட்டும் ஏற்றிச் செல்லவில்லை. அவை உலகின் தொலைதூரப் பிரதேசங்களில் வாழும் சகோதர மானுட குலத்தினருக்கு ஆன்மீக அறிவையும், ஞானத்தையும், நட்புணர்வையும் ஏற்றிச் சென்றன.

ஐரோப்பியர்கள் கூட, கடல் வழியே நமது நாட்டை ஆக்கிரமிப்பவர்களாகப் படைகொண்டு வரவில்லை. நல்லெண்ணத் தூதுவர்களாகவும், அறிஞர்களாகவும், பயணிகளாகவும் வந்தனர்.

வேதங்கள், உபநிஷதங்கள், மகாபார்தம், இராமாயணம் - இவையெல்லாம் இந்தியாவின் எந்தவொரு பகுதிக்கும் சொந்தமானவை அல்ல.

சமஸ்கிருதம் எந்த ஒரு பகுதிக்கும் உரிய தனி மொழியோ, வட்டார மொழியோ அல்ல. சமஸ்கிருதம் இந்தியாவின் புராதன தேசிய மொழி. தேசத்தின் பல்வேறு மொழிகளைச் சார்ந்த அறிஞர்கள் தத்தமது கருத்துக்களை அனைவரோடும் பரிமாறிக் கொள்ளவே அம்மொழி உதவிபுரிந்தது. நமது மொழிகள், வேதங்கள், காவியங்கள், புராணங்கள் ஆகியவை இப்பரந்த தேசத்தின் பல்வேறு பகுதி மக்களையும் ஒருங்கிணைப்பதில் மிக முக்கியப் பங்காற்றின.

தனிமனிதர்கள் ஒருங்கிணைந்து ஒரு சமுதாயத்தை உருவாக்குவதாகப் பலர் தவறாக எண்ணுகிறார்கள்.

மலர்களைப்போல், தேனீக்களைப் போல், பறவைகள் போல் சமுதாயமும் இயற்கையாகவே கொத்துக் கொத்துக்களாக, கூட்டம் கூட்டங்களாகப் பூமியின் பரப்பெங்கும் தோன்றியுள்ளன. தனிமனிதர்கள் என்போர்

சமுதாயத்தின் அங்கங்களாகவே சமுதாயத்தன்மை கொண்டவர்களாகவே உருவாகி இருக்கிறார்கள்.

ஒரு மலர் என்பது பல இதழ்களைக் கொண்டதாக இருக்கிறது என்பதால் பல இதழ்களை ஒன்று சேர்ப்பதின் மூலம் ஒரு மலரை உருவாக்க முடியாது. வேண்டுமானால் செயற்கையாக இத்தகைய ஒரு மலரை உருவாக்கலாம். உதாரணத்துக்கு ஐரோப்பாவில் உருவாக்கப்பட்ட, செயற்கையாக ஓர் ஒப்பந்தத்தின் மூலம் சேர்த்து இணைக்கப்பட்ட சோவியத் யூனியனைக் கூறலாம்.

இந்திய தேசமென்பது செயற்கையாக உருவாக்கப்பட்ட அத்தகைய கூட்டமைப்பு அல்ல. எந்த ஒரு மகா சக்கரவர்த்தியும் ஒரு குடைக்குக் கீழே இந்த தேசத்தைக் கொண்டுவரவில்லை. மாறாக இமயம் முதல் குமரிவரை வாழ்கிற இந்திய மக்களின் வாழ்க்கை நெறியினால் உணர்வுபூர்வமாக, கலாசாரரீதியாக, மரபுரீதியாக இந்தியா ஒரு தேசமாக உருவாகி இருந்ததால்தான் அது ஒன்றாகவே அமைக்கப்பட்டது, ஒன்றாகவே விடுலையும் பெற்றது. இந்தியா வெறும் அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்ட செயற்கையான கூட்டமைப்பு அல்லவே அல்ல.

பன்னெடுங்காலமாக இந்தியாவில் சமஸ்கிருதமும் தமிழும் மிகவும் சிறப்புற வளர்ச்சியுற்ற இலக்கியப் பொக்கிஷங்களைப் பெற்ற இருபெரும் மொழிகளாக விளங்குகின்றன. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓர் அறிஞனோ, கலைஞனோ தமிழிலும் சமஸ்கிருதத்திலும் கற்றுத்தேர்ந்தவனாக விளங்கினான். தேசத்தின் ஒரு மூலையில் உதிக்கின்ற ஒரு கருத்து, சமஸ்கிருத மொழியைத் தனது வாகனமாகக் கொள்வதன் மூலம் இந்தியா முழுவதும் திக்விஜயம் செய்ய முடிந்தது.

தெற்கே எங்கோ ஒரு மூலையில் தோன்றிய ஆதிசங்கரர் பாரதத்தின் எட்டுத் திக்குகளையும் வென்று இமயச்சிகரத்தின் முகட்டில் தமது ஐயக்கொடியை நாட்டினார் எனில், தமிழ் சமஸ்கிருதத்தைத் தனது வாகனமாய்க் கொண்டு திக்விஜயம் செய்ததனால்தான் சாத்தியமாயிற்று.



அதேபோல் இமயத்தின் அடிவாரத்தில் தோன்றிய பௌத்தம், தமிழகம் உள்ளிட்ட பாரதத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியது. இந்த வரலாற்று உண்மைகளிலிருந்து, தேசத்தின் பல்வேறு பகுதிகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டிருந்தன என்றும் இதற்கு வடமொழி பெருந்துணையாய் நின்று உதவியதென்பதையும் நாம் அறிய முடிகிறது.

உண்மையும் அன்பும் நமது சமயக்கொள்கைகள் மட்டுமல்ல. அதுவே நமது சமூகக், கலாசாரத்துக்கும் அரசியலுக்கும் அடிப்படையாகும்.

ஏதேச்சதிகாரம், அடிமைத்தனம், அடக்குமுறை, கொடுங்கோல் ஆகியவற்றை நமது கலாசாரம் எல்லாக்காலங்களிலும் எதிர்த்தே நின்றிருக்கிறது. நம்மை அடிமை கொள்ளவும், அடக்கவும் முயன்றவர்கள் காலப்போக்கில் தோற்றுப்போயினர்; தோற்றுப்போவர்.

நாம் அன்பினாலும் அறத்தாலும் அவர்களை வெல்லுவோம்.

இந்திய மக்களின் உண்மையான தேசிய குணாம்சத்தை நம் காலத்தில் உலகறிய எடுத்துக்காட்டியவர் மகாத்மா காந்தி. இந்தியர்களுக்கு எதிராக கொடுமையான சக்திகள் பயன்படுத்தப்பட்டபோது நாமதனை அறவழியில் அகிம்சைமுறையில் எதிர்கொண்டு வெற்றிபெற்றோம். அகிம்சை என்பது வன்முறைச் செயல்களைத் தவிர்ப்பது மட்டுமன்று; வன்முறை எண்ணங்களையும், தீயசிந்தனைகளையும், வெறுப்பையும், பகைமையையும் மனித சித்தத்திலிருந்தே அகற்றுவதுமாகும்.

இந்திய வரலாற்றுக்கே பெருமை சேர்க்கும் மாமனிதராய் ஜவகர்லால் நேருவின், ‘இந்திய தரிசனம்’ என்னும் நூலிலிருந்து சில வாசகங்களுடன் இக்கட்டுரையை முடிக்க எண்ணுகிறேன்.

“மற்ற கலாசாரங்களை வரவேற்று ஏற்றுக்கொள்வது இந்தியாவின் வழிமுறையாக எப்போதும் இருந்துவந்துள்ளது. அது, இன்றைக்கு மிகவும் அவசியமாகிறது. ஏனெனில் நாம், மனித குலத்தின் சர்வதேசக் கலாசாரத்தோடு நமது தேசிய கலாசாரம் பின்னிப் பிணையப் போகிற நாளைய ஓர் உலகம் என்ற இலக்கை நோக்கி நடைபோடுகிறோம். ஞானம், அறிவு, நட்பு, தோழமை இவை எல்லாம் எங்கெங்கு கிடைக்கின்றனவோ, அங்கங்கெல்லாம் அவற்றைப்பெற்று பொதுவான உலக க்ஷேமத்துக்காக, மற்ற தேசங்களோடு ஒத்துழைத்து நாம் நிற்போம். ஆனால் மற்றவர்களின் இரக்கத்துக்காகவும், ஆதரவுக்காகவும் நாம் யாரிடமும் கையேந்தி யாசகம் கேட்டு நிற்கமாட்டோம். இவ்வாறாக நாம் உண்மையான இந்தியர்களாக, சிறப்பான ஆசியக்காரர்களாகத் திகழ்வோம். அதே நேரத்தில் நாம் சிறந்த சர்வதேசியவாதிகளாகவும் உலகப் பிரஜைகளாகவும் உயர்வோம்”.

சத்யமேவ ஜயதே! ★

---

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர்தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 568926, 568927, 564906



தூய
பட்டு

தூய
சரிகை




ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

